
உன்னைக்
கண்தேடுதே
காஞ்சனா ஜெயதிலகர்

## உள்ளே...


உன்னைக் கண் தேடுதே...! ............. 5

முல்லைப் பந்தல் ............................ 103

இன்பங்கள் இலவசம் .......................... 185


# உன்னைக் கண் தேடுதே...!

## 1

"அதோ அந்தக் கலரைப் பாரு..."

சிநேகிதியின் விரல் சுட்டிய திசைக்குப் பார்வையைத் திருப்பிய ரமணி தலையாட்டினாள்.

"அது வெறும் ஊதா. நாம் பார்த்தது நீலம் கலந்த ஊதா."

"அதோட வெள்ளைக் கரையிருக்கணும். அதிலே தங்கச் சரிகை கலந்து கட்டியிருக்கணும்!" கடந்த சில நாட்களாகவே கேட்டுப் புளித்திருந்த வர்ணனையை ஒப்பித்தாள் ரத்னா.

"வெள்ளை யில்லை, ரத்னா. கெட்டி நெய் நிறம் - பழுப்பும் தங்கமும் கலந்தாப்பல..." ரமணி விவரிக்க,

"ஹைய்யோ..." என்று தோழிகள் நிஜமாகவே அலுத்தனர். பாண்டிபஜாரின் பெரும்பான்மையான சேலைக் கடைகளுக்குள் ஏறி இறங்கியாயிற்று.

அது பங்குனி மாதத்தின் ஒரு மாலைப்பொழுது. இளம் வேனிலின் வெப்பத்தைக் கடற்கரைக் காற்று தடவித் தடவிக் குறைத்திருந்தது

வியர்வையையோ, வீசும் உப்புக் காற்றையோ லட்சியமே பண்ணாமல் காரியத்திலேயே கண்ணாய் இருந்தனர் பட்டணத்துப் பெண்கள். குளிரூட்டப்பட்ட கடைகளில் ஏறி இறங்கி ஆயிரக் கணக்கில் பணம் எண்ணிப் புன்னகையுடன் நீட்டிப் பொருட்களை வாங்கியவர்கள், ரோட்டோரக் கடைகளில் நாக்கு வரளப் பேரம் பேசினார்கள்.

பிளாஸ்டிக் டப்பாக்களை நூறு தரம் திறந்து மூடி, திருப்தியான பிறகு, "ஆறு ரூபா தரேன். அதுக்கு மேலே பைசா பெறாது இது!" என்றனர்.

வழுவழுவென்று உயரமாய் நின்ற ஒரு சிந்திப் பெண் கொச்சைத் தமிழில், "என்னது... கிலோ பதினைஞ்சு ரூபாயா?" என்று அலறிவிட்டு, தன் அருகில் இருந்தவளிடம், "கஷ்மீரில் ரெண்டு ரூப்யாக்கு தேனாட்டம் பழம் கிட்கும்... கட்சா சாறு ஒழுவும்!" என,

கடைக்காரன், "அது சரி, அங்கேருந்து பழத்தை உருட்டியா வுட்ராங்க இங்க அத்தே விலையில் விக்கிறதுக்கு!" என முணுமுணுத்தான்.

இக்காட்சிகளை ரசித்தபடி தோழிகளுடன் நடந்தாள் மதிவதனா. கடைபரப்பப்பட்ட சேலை, பொருட்களில் பதியாத அவளது பார்வை, மனித முகங்களை மட்டும் ஒவ்வொன்றாய்த் தடவியது.

"மதி, உன்னை இழுத்து வந்தது தண்டம்டி..." சலித்தாள் ரமணி.

"நானே சொன்னேன்... நீதான் கேட்கலை."

"சரி, வாங்கித் தந்த பீச் மெல்பாவுக்காவது நீ எனக்குப் பொருத்தமாய் ஒரு சேலையைத் தேடலாம்ல?"

"நான் ஷாப்பிங் வர்றதேயில்லை, ரமணி. எல்லாம் அத்தைதான் ர்த்துக்குவாங்க. நான் தாத்தாவோட வீட்டில் அரட்டையடிச்சிட்டு ருப்பேன்."

"நீ அவள் அத்தையைக் கூட்டிட்டு வந்திருக்கணும். உம் பிறந்த ளுக்கு நல்லதாய் ஏதேனும் தேர்ந்தெடுத்துத் தந்திருப்பாங்க."



"தேர்ந்தெடுக்கறதில்லை இப்ப ரமணியோட பிரச்சினை. முன்னே பார்த்த அதே மாதிரி சேலையைத் தேடிக் கண்டுபிடிக்கத்தான் அலைமோதறா..."

ஒரு நவராத்திரி சமயம் யாரோ ஒருத்தி கட்டியிருந்த ஆரணிப் பட்டு ரமணியை வெகுவாய் வசீகரித்துவிட, தன் பிறந்தநாளுக்காய்ப் பெற்றோர் தந்த ஆயிரம் ரூபாயுடன் கடை ஏறி இறங்கும் படலம் நடந்து கொண்டிருந்தது.

தோழியின் மனதிலிருந்த சேலையைத் தேடிப்பிடிக்கத் துணைக்கு நாலு ஜோடிக் கண்கள்.

ஆனால் அதே போன்ற சேலை கடைசிவரை யார் கண்களிலும் சிக்காததில், ஓரளவு அதே சாயலில் இருந்த ஒரு பெங்கால் பட்டை வாங்கித் திரும்பினார்கள்.

அத்தையிடம் சொன்னதுபோல ஒன்பதிற்குள் வீட்டுப் படியேறிய திருப்தியில், "*தாத்தா!*" என்ற அழைப்புடன் நுழைந்தாள் மதிவதனா.

"வாப்பா... ஒரே அலைச்சலா?" படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கவிழ்த்த பெரியவர் கண்ணாடியைக் கழட்டியபடி பேத்தியை நேசத்துடன் பார்த்தார்.

"பயனில்லாத அலைச்சல். ரமணி தேடிய தினுசில் சேலை அமையலை. உப்...! எத்தனை கடை ஏறி இறங்க வைச்சுட்டா தெரியுமா? நான் எனக்காய்க்கூட இப்படி அலைஞ்சதில்லை."

"சியாமளிக்கு இதுமாதிரியான அலைச்சல் பிடிக்கும்."

"ரத்னா சொன்னாளே - 'மதி அழகா உடுத்தறது அவள் அத்தை சாமர்த்தியத்தால். துணி தேர்ந்தெடுக்கறது, தைக்க வாங்கறதெல்லா அவங்கதான்'னு!" பெருமையுடன் சொன்னாள் மதி.

"சாப்பிட்டியாப்பா?"

"ஆச்சு, தாத்தா. ஐஸ்கிரீம், சிப்ஸ்னு ஏகத்துக்கு உள்ளே போயிருக்கு. நீங்களும் அத்தையும் சாப்பிட்டாச்சா?"

''ம்... உங்கையில் காசு கொடுத்தேனே... என்ன வாங்கிகிட்ட?''

''உங்களுக்குப் பரமபதம் விளையாட்டு புது அட்டை வாங்கினேன். பழசு உரிஞ்சு தொங்குது. அத்தைக்கு நாலு ஓவிய பிரஷ்.''

''எங்களுக்கு எதுக்கும்மா?''

''பின்ன... எனக்கு அத்தனையும் நீங்கதான் வாங்கித் தர்றீங்க, உங்களுக்கு நான்தானே வாங்கணும்?''

பெரியவர் சிரித்தார். செயற்கைப் பற்கள் சீராக மின்னின. தாத்தா சிறு வயதிலிருந்தே புன்னகைத்தால் பற்கள் நிக்கோடின் கறைப்பட்டிருந்தன. நெஞ்சுவலி வரவும், 'இழுக்க இழுக்க இன்பம்' எனப்பட்டது நிஜத்தில் துன்பம்தான் என்பது புரிந்து நிறுத்திக் கொண்டார்.

கறை ஏறி, தளர்ந்த பற்களை உருவிப்போட்டு செயற்கைப் பற்கள் பொருத்திய பின், பொன்னுசாமி பத்து வயது குறைவாகவே தோன்றினார்.

உற்சாகமும் பாசமுமான பெரியவர் மகன், தன் மனைவி இறந்த கையோடு, மறுமணம் புரிந்து மலேசியா போய்விட, மலங்க மலங்க விழித்தபடி நின்ற தன் சின்னப் பேத்தியைத் தன் பாசச் சிறகினுள் சேர்த்துக் கொண்டவர். ஏற்கெனவே அச்சிறகின் அடைக்கலத்தில் இன்னுமொரு ஜீவன் இருந்தது. அது அத்தை சியாமளி.

அத்தை கடும் காதலில் கட்டுண்டு கிடந்தாள். கலையின் மீதான காதல்!

எங்கே கல்யாணத்தின் மூலம் ஏற்படும் உறவுகள், தளையாய் தன் கையைக் கட்டிப் போட்டுவிடுமோ என்ற பயத்தில் தனியாகவே நின்று விட்டவள்.

பொன்னுசாமி ஜாதகக் கட்டை எடுத்ததுமே கடுமையாய் முறைத்தாளாம். ''சரி வராதுப்பா. என்னால் பிரஷ்சைக் கையிலெடுக்காமல் ரெண்டு நாளைக் கழிக்க முடியாது.''



''அதெல்லாம் உன் குழந்தையைத் தூக்கினா சரியாயிடும்மா. அது உயிருள்ள உன் படைப்பில்லையா?''

''அது உருவாகறதில் நிறைய சிரமம்ப்பா.''

''தனியா இருக்கறதும் சிரமம்னுதானே உங்கண்ணன் ஆறு வயசு மதிக்குட்டியை விட்டுட்டு மறுகல்யாணம் செய்துகிட்டான்.''

''ஆணுக்குத் தனிமை தாங்காது போல.''

''தன் தனிமை போக அவன் தேடறது பொண்ணுங்களைத்தானே! நீங்கெல்லாம் இப்படி முறுக்கிட்டா எப்படி?''

''எல்லாருமா முறுக்கிக்கறோம்? அனேகம் பேர் தாலி கழுத்திலே ஏறினாத்தான் ஜென்மம் கடைத்தேறும்னுல்ல தவமிருக்காங்க?''

''இப்ப உரியவனைச் சேர்ந்துட்டா பிறகு ஏங்க நேராது அம்மாடி.''

''எனக்குள்ளே ஏக்கம் இல்லையேப்பா. ஆண்டவன் கிருபையில் இந்தக் கலை நிறைவோட காசும் தருது.''

''உண்மைதான் வி.டி.ஐ.யில் அத்தை கொண்டு போகும் ஓவியங்கள், போன வேகத்திலேயே விற்றுப்போகும். சில பிரத்தியேக உடையகங்களுக்கு ரசனையுடன் உடைகளை வடிவமைத்துத் தருவாள். அவற்றை யானை, குதிரைக்கான விலை தந்து பரவசத்துடன் வாங்கிப் போவார்கள் பெரிய வீட்டுப் பெண்கள்.

மகள் தன் சம்பாத்தியத்தில் பாதியேனும் சேமிப்பாக வைத்துவிட வேண்டும் என்பதில் கண்டிப்பாய் இருந்தார் பெரியவர்.

'கலையும் புத்தியும் நம்மைவிட்டுப் போகாதம்மா. ஆனா காலம் என்னென்ன கணக்குப் போட்டிருக்கோ? கை, காலு செயலாய் இருந்தால்ல வரையலாம். தேவைப்பட்ட இடங்களுக்குப் போய் விக்கலாம்? ஆக வருமானம் வரப்போ தேக்கியும் வை!' என்பார்.

சின்னதாயினும் சொந்த வீடு - எளிய ஆசைகள் என சிக்கலில்லாத வாழ்க்கை.

மதியின் மனதில் அவ்வப்போது அவன் நினைப்பு நெருடும். ஒருமுறை கண்ட சேலையில் மயங்கி இன்று முழுக்க ரமணி அதைத் தேடி அலைந்தாளே... அதுபோல ஒரே கணம் பார்த்த முகம் ஏன் இப்படித் தன் நெஞ்சில் பதிந்துபோனது? அந்த முகத்துக்குரியவனை ஏன் இப்படித் தேடுகிறது?

மூன்று வருடங்கள் இருக்குமா அந்தச் சந்திப்பு நேர்ந்து...? இவர் இன்னார் என்று யாரும் அறிமுகப்படுத்தாத சந்திப்பு. மோத இருந்து சுதாரித்து நின்ற இருவரின் தயக்கமும் சங்கோஜமுமான சிரிப்புடன் கூடிய முதல் பார்வை. ஆனால் கோர்த்த பார்வைகள் விலகமுடியாமல் தத்தளித்தனவே!

அவன் விழாமல் இருக்க மதியின் தோள்களைப் பற்றிய அந்த இளஞ்சூடான ஸ்பரிசம்.... அவன் பார்வையின் குறும்பு... ஏன் மறுபடி அவனைப் பார்க்க நேரவில்லை? நேற்றுத் தோழிகள் துணி வகைகளை ஆராய, தான் ஜனத்திரளில் முகங்களைத்தானே துழாவினாள்...

அவன் மறுபடி வருவானா?

## 2

முதல் காதலையும் முதல் முத்தத்தையும் யாராலும் மறக்க டியாது என்று அனுபவஸ்தர்கள் சொல்லக் கேள்வி.

ஆனால் முதல் பார்வை, சிறகு பட்டாற்போன்று நேர்ந்த தீண்டல் வகூடத் தன் உயிருள்ள வரை மறக்காது போலவே!

தன் நெஞ்சில் பதிந்துபோன அவன் முகத்தை எந்த ஜனத்திரளிலும் டையாளம் கண்டு கொக்கு போல கொத்தியெடுத்துவிட முடியும் - படிப்பட்ட கொக்கின் மதி.

ஆனால் அவன் யார், எப்படிப்பட்டவன் என்பது அறியாமல் ஏன் ஈர்ப்பு? இது மகா முட்டாள்தனம் என்கிறது அறிவு... ஆனால் கட்டறுத்துப் பாய்கின்றதே!



''வந்ததிலிருந்து என்னை எட்டிக்கூடப் பார்க்காம என்னடி யோசனை?'' பால் குவளையுடன் நின்ற அத்தை சிறு கோபத்துடன் அதட்டினாள்.

''உடை மாத்திட்டு உங்களுக்கு உதவியா கிச்சனை ஒழிச்சுத் தரலாம்னுதான்...''

''வேலையெல்லாம் முடிச்சாச்சு. பிரஷ் வாங்கிட்டு வந்திருக்கியே - அதுவும் சரியா நான் வாங்கணும்னு நினைச்சிட்டிருந்த அதே அளவுகள்ல?''

''உங்க கைப்பெட்டியைத் திறந்து பார்த்தேன். நாலு பிரஷ் பிரிஞ்சு கலைஞ்சிருந்துச்சு. எந்தெந்த நம்பர்னு குறிச்சு வாங்கிட்டுவந்தேன்.''

இவளையே பார்த்தாள் அத்தை. சதா புன்னகைத்த முகத்தில் அழகு நன்கு ஊறியிருந்தது. சேலம் மாம்பழத்து வர்ணத்தில் அம்சமான முகம்.

''அப்பா என்னை மிரட்டுவார் - கல்யாணம் செய்துக்கோடி நீ அன்பு பாசமெல்லாம் அனுபவிக்க வேண்டாமான்னு. இதைவிட பாசம் வேறென்ன!''

''இப்பத்தானே அத்தை திட்டுனீங்க - வந்து என்னை எட்டிப் பார்க்கலையேன்னு?''

''அதுவும் பாசத்தால் எடுத்துக்கற உரிமைடி. பாலைக் குடி.''

''வயிறு ரொம்பிடுச்சே.''

''கண்டதையும் அடைச்சு நிரப்பறது தப்பு.''

''என்னைக்கோ ஒரு நாள்தானே?''

''அப்படி ஆரம்பிக்கிறது பிறகு பழக்கமாயிடும்.''

அறைக்குள் தலை நீட்டினார் தாத்தா. ''யப்பா... என்ன கெடுபிடி! நான் உங்கிட்ட இப்படி யிருந்திருந்தா இப்ப பேரனையும் கண்டிருப்பேன் சியாமி!'' இது அவருடைய துருப்புச் சீட்டு.

பொன்னுசாமி வணிகக் கப்பல்களில் பணிபுரிந்தவர். உலகின் பல நாடுகளைச் சுற்றிவந்தவர். பலதும் பார்த்ததில் மனமும் பரந்திருந்தது. ஆக தகப்பன் என்ற தன் உரிமையைக்கூட ஒரு எல்லைக்குள்ளேயே வைத்துவிட்டார். ஆக அத்தை தன் அண்ணன் மகள் மதியைச் சற்று இழுத்துப் பிடித்தால், 'நான் உன்னை இப்படி அதட்டி, அடக்கி வளர்க்கலியே சியாமி!' என்று அவள் வகாளைத் தளர்த்தி விடுவார்!

''பரவாயில்ல, தாத்தா. அத்தை என் நல்லதுக்குத்தானே சொல்றாங்க.''

ஒருவருக்கொருவர் பரிந்து வரும் பாச மிக்க குடும்பம் அது.

**உ**யர்ந்து அடர்ந்திருந்த வேப்ப மர நிழலில் அமர்ந்திருந்த மாணவிகள், கையிலோ மடியிலோ புத்தகம் வைத்திருந்தாலும், வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தனர்.

''ரமணியால் எனக்கு நேத்திக்கு வீட்டுல திட்டு.''

''ஸ்கூல் வரை அடிவாங்கினே. இப்ப திட்டோட போச்சேன்னு நினைச்சுக்கோ.''

''ஒரு சேலையைத் தேடி நாலு மணி நேரம் சுத்தி, படிக்கிற பொழுதை வீணாக்கறதான்னார் அப்பா.''

''பின்ன மணாளனைத் தேடியா அலைய முடியும்? யாரையோ காட்டி இவன்தாங்கறாங்க. நாமும் சரின்னு மணவறையில உக்காந்துடறோம். சேலைக்காவது அலைவமே!''

''யோசிச்சா இது விநோதந்தான். வருஷத்துக்கு நாலைஞ்சு தடவை கட்டி அவிழ்க்கிற சேலைக்காய் இத்தனை மெனக்கெடறோம். வாழ்க்கை முழுக்குமான புருஷனைத் தேர்ந்தெடுக்கிற உரிமை நமக்கில்லை.''

''ரொம்ப பெருமூச்சு விடாத, லட்சுமி. வெளிநாட்டில் பொண்ணுங்க தாங்களே தேடிப் பிடிச்சுக்கணுங்கற முறையும் ஒசத்தின்னு முழுக்க சொல்லிட முடியாது.''



''அவர்கள் உரிமையோட செய்ற விஷயம் எப்படி உசத்தியில்லைங்கற?'' வம்புக்காய் வளர்த்தின பேச்சென்றாலும் அனைவரும் மதிவதனாவின் பதிலுக்காய் ஆர்வமாய்க் காத்திருந்தனர்.

''என் தாத்தா வெளிநாடுகளையும் பார்த்தவர். அவர் சொல்லக் கேட்டதைச் சொல்றேன். வரதட்சிணை கொடும் பழக்கந்தான். ஆனா அழகு அம்சமில்லாதவளையும்கூட சீர் கொடுத்து ஒருத்தன் மனைவி ஆக்கிடறாங்க.''

''பணத்துக்காக வர்றவன் உத்தமனாவா இருப்பான்?''

''அவளுக்குன்னு ஒரு வாழ்க்கை அமைஞ்சிடுது. அதுக்குப் பிறகு, 'மகளே உன் சமர்த்து'தான்! தன்னோட அன்பு, அறிவு, குணம், திறமைன்னு பலதையும் பின்னி புருஷனைக் கட்டிப் போடறது அவளின் கெட்டிக்காரத்தனம்!''

''அல்லது விதி! என்ன சொல்ல வர்றே? வெளிநாட்டில் கல்யாணங்கறது கஷ்டமான விஷயங்கறியா?''

''பெண்ணே அலையணும்.''

''ஏன் இங்க மாதிரி ஆண் சிங்கங்கள் அலையாதா?'' துடுக்காய்க் கேட்டாள் மற்றொருத்தி.

''இங்கே மாதிரி கல்யாணமானாத்தான் மத்த சமாச்சாரங்கற பருப்பு அங்கே வேகாது. ஆண் பெண்ணோட சுலபமாய், சகஜமாய்ப் பழகலாம்.''

''இப்ப நம்மூரிலேயும் அப்படித்தாம்மா.''

''பொதுவாய்ச் சொல்லாதே. சில பேர் அப்படியிருந்தாலும் பொதுவிலே ஒரு பயம், கட்டுப்பாடு இருக்குது.''

''சரிதான். ஆக ஆம்பிளைங்க அங்கே காய்ஞ்ச மாடுகளாய்ப் பாயறதில்லைங்கற?''

''கல்யாணங்கற கட்டுப்பாட்டுக்குள்ளே நுழைய ரொம்பத் தயங்கறாங்க. அதுவும் திருமணம் இல்லாமலேயே சேர்ந்து வாழற முறை வந்தப்புறம் கல்யாணங்கறதே அபூர்வமாம்!''

''பின்னே? வாழ்ந்து சலிச்சவனை ஹோமப்புகையில் வந்து உக்காருன்னா... சிக்குவானா?'' கிளுகிளுவெனச் சிரிப்பு பரவியது.

''அங்கேயும் பொண்ணுகளுக்குக் குழந்தை ஏக்கம் உண்டு. திரந்தரமான ஒரு துணை அமைய ஏங்கறாங்க. முன்னே விவாகரத்துத் தொல்லைன்னா இப்போ விவாகமே ஆகாத பிரச்சினை!''

''ஆக நமக்காகப் பெத்தவங்களே ஒடித் திரிஞ்சு ஒருத்தனைத் தேடிக்கொண்டு வர்றது தேவலைங்கறே?''

''தேவலையோ... தேவலை...'' கூவினாள் ரமணி.

''மொத்தமாய் நம்ப பழக்க வழக்கங்களைக் குறை சொல்வானேன்? அவங்கவங்களுக்கு அமையற வாழ்வு ஆண்டவன் கிருபை... அவ்வளவுதான்!''

''சரிடி பெரிய மனுஷி. நீ என்னவானாலும் பேசலாம். பேச்சுரிமை, ஊர் சுத்துரிமை எல்லாம் உனக்கு உங்காத்துல வழங்கியிருக்கா.'' பொறாமையில் உதடு பிதுக்கினாள் லெட்சுமி.

இந்த விஷயத்தில் மதிக்குப் பெருமை உண்டு.

நம் வீட்டுப் பெண் பொறுப்பானவள், குணவதி என்று உணர்ந்த தியில் நடந்து கொள்வார்கள் தாத்தாவும் அத்தையும்.

ஆனால் அத்தை சில விஷயங்களில் பிடிவாதம் காட்டியதுண்டு. விமானப் பணிப்பெண் ஆக வேண்டும் என்ற யோசனையில் ந்தபோது ஆர்ப்பாட்டமாய்த் தடை விழுந்தது.

''என்னது சதா பறக்கறதா?''

''சதா இல்லத்தை. வேலை நேரங்கள்ல மட்டுந்தான்.''

மாசத்துக்குப் பாதி நாளேனும் டியூட்டி இருக்கும்ல?''

நீதிநாள் வீட்டில், இல்லை போற ஊரிலேயுள்ள நட்சத்திர ல. உலகம் பார்க்கலாமத்தை.''

ன்னை நினைக்க நினைக்க நாங்க கலங்கிக்கிடக்கவா? வேணாம்



அடுத்தாற்போல மதி 'கேட்டரிங்' படிக்க ஆசையுற்றபோதும் அத்தை முகம் சுளித்தாள்.

''சமைக்க, பரிமாற நான் சொல்லித்தரேன்டி. இப்பவே நூறு திலுசுல கோலம் போடறே... வீட்டை அலங்காரமா வைச்சுக்கறே... வேறென்ன?''

'அவள் நோக்கம் போலப் படிக்கட்டும், சியாமி. இங்க சென்னையில் மூலைக்கொரு அந்தஸ்தான ஓட்டல் வந்தாச்சு. ஆக உள்ளூரிலேயே வேலை அமையும்!' சமாதானப்படுத்தினார் தாத்தா.

ஆக ஆரம்பித்த 'கேட்டரிங்' படிப்பு இதோ இப்போது முடியவும் போகிறது. போன வாரம் 'கேம்பஸ் தேர்வு'க்காக வந்த நிறுவனத்திற்குத் தன்னைப் பிடித்துவிட்டது என்பது தெளிவு. ஆக உள்ளூரிலேயே வேலை நிச்சயம். கை கனக்கக் கனக்கச் சம்பளம்...!

''மதிவதனாங்கறது யாரும்மா? பிரின்ஸிபல் கூப்பிடறாரு...'' புது சிப்பந்தி வந்து அழைக்க அந்த நேரத்தின் இனிமை கலைந்து படபடப்பானாள். புத்தகங்களை அப்படியே விட்டுவிட்டு எழுந்தாள்.

''நான்தான்... ஏதேனும் போன் வந்துச்சோ?'' கலவரத்துடன் கேட்டாள்.

''தெரியலியே... உடனேயே வரச் சொன்னாரு...''

''நானும் கூட வரட்டுமாடி, மதி?''

''வா, ரமணி.''

கல்லூரி முதல்வரின் முன் போய் நின்றபோது மதியின் முகம் வெளிறிப் போயிருந்தது.

'சுப்ரபாதம் போல அதிகாலமே வீட்டில் இதுதான் ஒலிக்கணுமா?' இப்படி அத்தை விடாமல் அலுத்தாலும் பிரெஞ்ச் மொழிப் பாடங்களைக் கொண்ட காஸட், கடந்த பதினைந்து நாட்களாய்த் தினம் காலையில் சுழல ஆரம்பித்து விடுகிறது.

''கோலம் போடறப்பவும் பிரெஞ்ச் பாடம் காதிலே விழுந்திட்டே இருக்கிறது நல்லதுதானே, அத்தை?''

''அதுக்காக நாங்களும் கொழகொழன்னு ஒரு புது பாஷை கத்துக்கணுமா?''

பெரியவர் குறுக்கிடுவார்.

''கத்துக்கிட்டா தப்பில்லை, சியாமி. நாம கத்துக்கற ஒவ்வொரு பாஷையும் இன்னுமொரு ஆளுக்குச் சமம். மூணு பாஷை அறிஞ்சவனுக்கு மூணு ஆள் பலமுண்டு.''

''ஆகட்டும். இன்னும் நாலைஞ்சு மொழி கத்துகிட்டு பத்துத் தலை ராவணன் போலாகட்டும் இவள்.''

''தற்சமயம் தெரிஞ்சது நாலுதான். ஆக நாளிப்போ பிரம்மாவா, அத்தை?''

''போடி... நீ பிரெஞ்ச், ஜெர்மன் படிக்கக் கிளம்பினபோதே ந்தேகம் வந்துச்சு. ஸ்டார் ஓட்டலுக்கு அயல் தேசத்துக்காரங்கதான் ருவாங்க. அவங்கவங்க மொழியிலே பேசிப் பரிமாறினா விச்சவைன்னீங்க. இப்ப வெளிதேசத்துக்கே போகப் போறேங்கறா ன் பயந்தபடியே ஆயிடுச்சு.''

''நாலே... இல்லை, மூணே மாசந்தானே அத்தை?'' கொஞ்சி, ஞ்சி அனுமதி பெற்ற பிறகும் ஒவ்வொரு முறை மது அயல்நாடு வது பற்றிய பேச்செழும்பும்போது அத்தையைத் தாஜா செய்ய ண்டியிருக்கிறது. இந்தக் கெடுபிடிக்குக் காரணம் தன் மீதான பாசம் பதை உணர்ந்த மதியும் குழைந்தாள்.

பதினைந்து நாட்களுக்கு முன் கல்லூரி முதல்வரின் அழைப்பில் ரமாய்ப் போனவள் அவர் சொன்ன செய்தியின் களிப்பாய் னாள்.

டந்த கேம்ப்பஸ் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரில் நீயும் . மதிவதனா. ஆனா ஆரம்பமே அற்புதமாய் உங்களில் நாலு கு அமையுது. உங்களைப் போலவே வேற்று நாடுகளிலும் ப முடிச்ச சில மாணவர்களை அவர்களது நிர்வாகம் ட்டுக்கு அனுப்புகிறதாம். பயிற்சி, மாற்றம், கண்ணோட்ட



விரிவு போன்ற காரணங்களுக்காய். பரிமாற்றமாய் இங்குள்ள மாணவர்களுக்கும் அழைப்பு விடுக்க ஓட்டல் நிர்வாகம் உங்களை அயல்நாடு அனுப்ப விழைகிறது. இந்த மாணவர் பரிமாற்றத்தில், அனுபவமில்லாத உங்களது வேலையில் நம் கல்வியின் தரம் என்ன என்பது புரிந்து போகுமில்லையா... அதற்கான சோதனை போலும்...''

முதல்வர் பேசப் பேச முதலில் நிம்மதிப்பட்ட மதி, ஆர்வமானாள்.

''மூன்று மாணவர்கள், மாணவிகளில் நீ மட்டும்தான் தேர்வாகியிருக்கே. மாணவர்கள் மலேசியா போறாங்க. நீ எங்க போறே தெரியுமா... அடிக்கடி நம்ப சினிமா நாயக நாயகியர் 'டூயட்' பாடப் போகும் இடம்!''

அவர் விசாலமாய்ப் புன்னகைக்க இவளுக்கு உச்சந்தலையில் பனியாலான ஆணி ஊடுருவியது போலிருந்தது.

''ஸ்விஸ்... ஸ்விட்சர்லாண்டா சார்?''

''அதேதான்!''

கண்களை அகல விரித்தவள் மூச்சு விடவும் மறந்து நின்றாள்.

ஜிலுஜிலுவெனப் பனியில் சறுக்கிப் புரள்வது போன்ற பரவசம்.

''நிஜமாவா சார்... எப்போ... நான்... நாங்க?''

''முதல்ல பரீட்சையை நல்லபடி முடி. மாணவர்கள் பரிமாற்றத் திட்டம் என்பதால் பாஸ்போர்ட், விசா இரண்டும் சுலபமாய்க் கிடைச்சிடும். பிறகு பறக்க வேண்டியதுதான்!'' தனக்கே ஸ்விஸ் போக வாய்ப்புக் கிடைத்தது போல ஆனந்தித்தார் முதல்வர்.

''சரி சார்... வீட்டில்...''

''சொல்லி அனுமதி வாங்கிடு. வாழ்த்துக்கள் மதிவதனா. வெறுமே பரீட்சைக்கு மட்டுமாய் தயார் பண்ணிக்காதே. கடல் கடந்து நீ கற்றதை, உன் திறமைகளைக் காட்டக் கிடைத்த சந்தர்ப்பம் இது. அதற்காக ஆழ்ந்து படி. நம் நாட்டுப் பெருமையை நிலைநாட்ட நம் சார்பிலான இளைய தூதவர் நீ - புரிஞ்சுக்கோ...''

அதுவரை விஷயம் என்ன ஏது என்று தவித்திருந்த தோழிகள் செய்தி கேட்டு மலர்ந்தார்கள். "அப்படிப் போடு. ஸ்விஸ் போறியா... காதல் தேசம்மா!"

"ஆனா போறது 'டூயட்' பாடயில்லை. பாவம்."

"முழுநேரமா சமைக்க, பரிமாறப் போறா...? ஒழிஞ்ச நேரத்துல..."

"நேரம் கிடைக்கும். சூப்பர் லொகேஷன். ஆனா முக்கியமான விஷயம் ஜோடி வேணுமடி...!"

"அதெல்லாம் மதி கமுக்கமாய்த் தயார் பண்ணிட்டிருப்பா!"

இவளுக்குப் பெயர் தெரியாத அவன் முகம் மனக் கண்ணில் தெரிந்தது. கோதுமை நிற நீளச் சதுர முகம். மேல்நோக்கி வாரிய முடி. ன்னைத் தொட்டுப் பார் என்ற சவாலோடு நீண்டிருக்கும் கூர்மூக்கு. ற்றுச் சதைப் பற்றான மோவாயில் யாரோ சுண்டு விரலால் முக்கிவிட்டாற் போன்ற செல்வக்குழி! அடர்ந்த கண் இமைகளின் வலில் காந்தக் கண்கள்!

சில நொடிகளே பார்த்த ஒரு முகம் இப்படித் தெளிவாய் மெழுகில் எப்படி அழுந்தப் பதிந்தது? மனம் அந்நேரம் ழுகானது ஏன்?

டவுள் இவர்கள் ஒருவருக்கு ஒருவர் என்று போட்ட முடிச்சால் டி நேர்ந்ததோ?

பார்த்தியா... இப்பவே கண்ணு செருக ஆரம்பிச்சுட்டா... ந்து கனவுக் காட்சிதான்! தோழிகள் ஆர்ப்பாட்டம் முடிந்து வீடு வளுக்குத் தாத்தாவின் ஆசியோடு அனுமதி தயக்கமின்றிக் த்துவிட்டது. ஆயிரம் பிகு பண்ணியதெல்லாம் அத்தைதான்!

ல்யாணத்துக்கு ஜாதகத்தை வெளியே எடுக்கற நேரம். தமாய் இவளுக்குத் துணிமணி தயார் பண்ணதெல்லாம் க? இனி குடும்பத்துல வர்ற கல்யாண, விசேஷங்களுக் ம் இவளை நல்லபடி உடுத்துவித்துக் கூட்டிப் கறதுக்குத்தான்! நாலுபேர் பார்வை பட்டாப் போதும், 'நான்



நீ'ன்னு போட்டியோட வரனுக வரும். நல்லதாய் ஒரு பையனை நாம முடிவெடுத்து முடிச்சுடலாம்னு..."

"திட்டம் தப்பில்லை, சியாமி. இதையே நாலு மாசம் ஒத்திப் போட்டிரு... அவ்வளவுதான்."

"வெளிநாடு போறவங்க எல்லாம் ஆவலா அடிச்சுப் பிடிச்சுத் தாய்நாடு திரும்பறதைத்தான் பாக்கறோமே?" நொடித்தாள் சியாமளி.

"இது ஆறுமாச விசாதான். அதுக்குள்ளே கட்டாயம் ஸ்விசை விட்டுக் கிளம்பிடணும்."

"வறண்ட பாலைவனத்துக்குப் போறவங்களே லேசில கிளம்பறதில்லை. இவள் மகா அழகான லோகத்துக்குப் போறா.. போய் ஒரே மாசத்துல விசாவைத் தள்ளிப் போட பத்து வழியைக் கண்டுபிடிக்கர மாட்டா?"

"இல்லே அத்தை... போறது அழகான நாடுதான். ஆனா விட்டுட்டுப் போறது என் நாடு மட்டுமில்லை... என் வீட்டையுந்தானே! இந்த ஆயிரத்து இருநூறு சதுர அடி இடந்தான் என் சொர்க்கம். சில வாரங்கள்ல சுவிஸ் பிரமிப்பு பழகிடும். பிறகு அலுத்தும்கூடப் போகும். தவிர உங்களையெல்லாம் நினைச்சு... ஏங்கி இளைச்சிருப்பேன்..."

"அப்ப போகாத விடு!" இடக்குவாதம் புரிந்தவளைப் புரிய வைக்க முடியவில்லை என்றாலும் ஓரளவு பணியச் செய்துவிட்டார் பெரியவர்.

"நடுத்தரக் குடும்பங்கள்ல நாம கைக்காசு செலவு பண்ணி அயல் தேசமெல்லாம் பாக்க முடியாது. ஏன் போகணும் பார்க்கணுங்கறாப்பல முறைக்காத சியாமி...! கடல் கடந்து போய் வர்ற அனுபவம் பெரிய படிப்பு போல - அதுவரையில் தேங்கிக் கிடந்த நம்ப எண்ணங்களை மடைதிறந்துவிடும் - குருட்டுத் தனமான நம் சில நம்பிக்கைகளில் வெளிச்சம் போடும்."

"நம்ப கலாச்சாரம் மட்டும் போதும்ப்பா. ஏன் கலப்படம் பண்ணிக்கணும்?"

''ஒவ்வொரு நாட்டுக்கும் அதுக்கான கலாச்சாரம் உண்டு, சியாமி. மத்தவங்கெல்லாம் காட்டுவாசிகளா என்ன? பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னே கட்டப்பட்ட ஆலயங்கள் அரண்மனைகள் ஐரோப்பா முழுக்க உண்டு. இங்கிலாந்து சாலைகள்ல நடந்து போனா நம்மூரு மாதிரி புது அடுக்கு மாடிக் கட்டிடங்கள் ஒண்ணுகூடப் பார்க்கக் கிடைக்காது. அத்தனையும் இருநூறு, முன்னூறு வருடப் பழைமையில் ஏகக் கம்பீரமாய் நிற்கும். உலகம் முழுக்க அன்பும் பண்புமான மக்கள் உண்டு என்கிறதை நம்ப மதி பழகிப் புரிஞ்சிக்கட்டும். தனியே பூமியின் மறுபக்கத்தைப் போய்ப் பார்த்து வந்தாச்சுங்கறது தனித் தைரியமில்லையா? பத்துப் பட்டம் சேர்த்து வாங்கினாற்போன்ற பவுசுதானே?''

அத்தை அடங்கிப்போனாள். தன் திருமணமான தோழிகளின் கதைகளே சியாமளிக்கு அச்சமூட்டியிருந்தன.

'சின்னதுக்கும் கோவிச்சுக்கறாருடி... பயந்து பயந்து செய்தே செத்துட்டிருக்கேன்.'

'ஏன் அவனைப் பார்க்கறே...? ரொம்பப் பிடிச்சிருக்கோன்னு சதா இம்சை பண்றார். இவரைப் பிடிக்கலைன்னா நான் ஏன் இவரைக் கல்யாணம் பண்ணியிருக்கணுங்கறது தோணமாட்டேங்குதே... சதா சந்தேகம்!'

'வீட்டுக்குச் சம்பளமில்லாத வேலைக்காரி சியாமி நானு. வேலைய விட்டுருன்னதும் 'ஹாய்யா' விட்டேன். அவர் வீட்டுல மொத்தம் எட்டுப் பேரு. டிபனுக்கு தோசை வார்க்க ஆரம்பிச்சா ஒரு மணி நேரம் நகர முடியாது. கடைசியில் ஒரு முழம் பூ வாங்க என் கையில் காசு இருக்காது.'

'குடிகாருடீ... லுங்கி அவுந்ததுகூட தெரியாதளவு குடிக்கற ரகம். அவுந்ததைக் கட்டாட்டியும் என்னை அடிக்கறதுக்கு வலுவிருக்கும்... ச்... இழவு பிடிச்ச வாழ்வு போ...'

இந்தப் புலம்பல்களில் அரண்டு விட்டாள் சியாமளி.



கலை அவளுக்கு நிறைந்த மகிழ்வு தந்தது. தன் கற்பனையில் தோன்றிய உடைகளை அப்படியே நிஜமாக்கியதில் அலாதி திருப்தி உண்டானது. கூடவே பை நிறையக் காசு. கலை வாஞ்சையுள்ள நண்பர்கள் - போவதே தெரியாமல் போய்விடும்பொழுது! ஆக கல்யாண ஏக்கம் சியாமளியை அண்டவில்லை.

ஆனால் தன் மருமகளுக்குக் காலாகாலத்தில் கல்யாணம் செய்து பார்க்கும் தீவிரம் இருந்தது.

''எனக்குக் கல்யாண நோக்கமில்லை. தவிர எந்துணைக்கு அப்பா இருந்தது போல மதிக்கு யாரிருக்கா? நல்ல துணை அமைஞ்சு அவள் நிறைஞ்சு வாழணும். அப்பத்தான் எங்க கடமை தீரும்!'' என்றாள் வந்து போவோரிடமெல்லாம்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிமிடம் பார்த்த ஒரு ஆண் தன் செல்ல மருமகளின் நெஞ்சைச் சலனப்படுத்தி இத்தனை காலமாய் வசப்படுத்தி வைத்திருப்பது தெரிந்தால், பாவம்... அலமலந்து போவாள் சியாமளி.

## 3

கடல் நீலத்தில் சுடிதார் அணிந்திருந்தாள், மதிவதனா.

கழுத்து, கைகளில் வைத்துத் தைக்கப்பட்டிருந்த சிப்பி, சங்குகள் அவ்வுடையை நூதனமாக்கின. வெள்ளை ஷிபான் துப்பட்டா கடல் நுரையைப் போல வழிந்திருந்தது.

விமான நிலையம் போய்ச் சேர்ந்து, பெட்டிகளை இறக்கிய நேரம் பலரது பார்வை மதியை மொய்த்தன. அவள் அதிக உயரமில்லை. ஐந்தடிக்கு மேல் ரெண்டே அங்குலங்கள்தான். மெல்லிய உடல் வாகு. அத்தையின் அதே மாம்பழ நிறம்.

ஆரோக்கியமானவள் என்பதால் உடம்பெங்கும் பாய்ந்த சுத்த இரத்தம் அதோடு சிறிது சிகப்பையும் கலந்திருந்தது. முக்கியமாய்க் கன்னங்களில்.

நீண்ட விழிகளும், மொட்டு உதடுகளும் பிரதான அழகு.

மெல்லிய பட்டுக் கேசம் அரை முதுகோடு சீராய் வெட்டப்பட்டிருந்தது. அவள் பேச்சில், அசைவுகளில் இருந்த நளினம் மதியை மேலும் மென்மையாகக் காட்டியது. வலிய ஆண்களின் கவனத்தை ஈர்த்தது.

காத்திருக்கும் அறையிலிருந்த கூட்டத்தில் ஒருவன், மதி கடந்து போகையில்.

"சமுத்திர ராஜகுமாரி..." என்று முன்பு நினைவில் பதிந்து போயிருந்த ஒரு சினிமாப் பாட்டைத் தேடியெடுத்துச் சுருதியின்றிக் கரைந்தான்! மதிவதனா இதையெல்லாம் காதில் போடாமலிருக்கப் பழகிவிட்டவள்.

கல்லூரியில் ஆண்களுடன் சேர்ந்து கற்றதால் அவர்களது சீண்டல்களும் பழகும் முறைகளும் வித்தியாசம் என்றாலும் எப்போதும் விகற்பமானவை அல்ல என்ற முடிவிற்கு வந்தவள்.

இதே நீலச் சுடிதாரைக் கல்லூரிக்கு முதன் முதலாகப் போட்டுப் போனபோது சகமாணவர்களுமே விழி விரியப் பார்த்தார்கள்.

"இதோ வருகிறாள் கடல் தேவதை" என்று சலீமும் -

"கடலே கல்லூரி புகுந்து விட்டதோ!" என்று அசோக்கும் கவிதை பாட முனைந்தது நினைப்பு வந்தது. நினைப்பால் இதழ்களில் விரிந்த புன்னகை மறுநொடி கூம்பியது.

இனிக் கவலையற்ற கல்லூரி மாணவியல்ல தான் - பாதுகாக்க, பராமரிக்க உறவுகள் இல்லாத இடத்திற்குக் கிளம்பியாயிற்று. இந்தியக் கல்லூரியின் தரத்தை இவள் வேலையைக் கண்டு நிர்ணயிப்பார்கள் என்பதால் வேலையில் கூறாயிருக்க வேணும்.

நம் நாட்டுப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் என்பதால் பேச்சு, பார்வையில் பதனமாயிருக்க வேணும்.

முடிந்ததை எல்லாம் இச்சில மாதங்கள் கிரகித்துக் கொண்டால் ஆயுசுக்கும் அசை போடலாம். நினைத்தாற்போல வந்து தங்கித் திரும்பும் தொலைவிலா இருக்கிறது சுவிட்சர்லாண்ட்?



பல திரைப்படங்களில் கண்களைக் குளிர்வித்த காட்சிகளை நாளை நேரிலேயே பார்க்கலாம். வேலை உண்டு என்றாலும் கண்களை மூடிக்கொண்டா வேலை பார்க்க நேரிடும்? இயற்கையின் அழகை ரசித்தபடியே சுழல வேண்டியதுதான்.

கன்னிரோடு விடைபெற்றவள் இரண்டு மணி நேரம் மும்பையின் விமான நிலையத்தில் இருந்தாள். அங்கு மூன்று மணி சுற்றி வந்து ஒரு குட்டித் தூக்கமும் போட்ட பின், சுவிஸ் விமானமேறி, பணிப்பெண் தந்த இனிப்பைச் சுவைத்தபடி, கடலைப் பறந்து கடந்தபோது மதியின் வயிறு சுருண்டது நிஜம்! இனி பரிச்சயமான இத்தாய் நாட்டிற்குத் திரும்பப் பல வாரங்கள் செல்லும் என்ற கலக்கம் அது.

**வி**மானத்தில் தந்த 'யூடிகொலான்' ஈரத் துண்டினால் வாசனையாய் முகம், கழுத்து துடைத்து, தலைகோதி, லேசான ஒப்பனையுடன் அயல் மண்ணில் இறங்கியவளுக்குத் துளி அலுப்பில்லை. விமான பைலட்டின் அறிவிப்பின்படி தன் கைக்கடிகார முள்ளை மூன்றரை மணி நேரம் முன்னோக்கி நகர்த்தியிருந்தாள். அதுதான் சுவிஸ் நேரம்.

ஜெனிவா நகரின் கோய்ன்ட்ரீன் விமான நிலையம் அபாரமாயிருந்தது.

தன்னை இங்கு சந்திக்க வருவதாயிருக்கும் வின்சென் வரவில்லையெனில் என்ன செய்வது? கையில் சில டாலர்களை கொண்டு வந்திருந்தாலும், அந்த அமெரிக்கப் பணத்தை சுவி பிராங்குகளாய் முதலில் மாற்ற வேண்டும். பற்பல கடைகளோடு 'கா மாற்றுவோர்' என்ற கடையும் சிவப்பு வர்ண விளக்கோ பளபளத்தது.

சுற்றிலும் தெரிந்த வெள்ளை முகங்களைத் துழாவினா பெரும்பான்மையானோர் கருப்பு லிஸ்ட்டில். இதில் வின்சென்ட் யா சுற்றிவந்த பார்வையில் அந்த அட்டை பட்டது.

படு வாகாய்ப் பிடித்திருந்த மனிதர் இவள் முகத்தின் வியப்பைக் கண்டதும் கையசைத்தார். ''ஆக நீதான் மதிவதனா இல்லையா?'' நெருங்கி வந்தவர் ஆங்கிலத்தில் விசாரித்தார்.

''ஆமா... உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி மிஸ்டர் வின்செண்ட்'' மிருதுவாய்க் கைபற்றிக் குலுக்கினாள்.

''எனக்குப் பெரும் மகிழ்ச்சி, என் கடல் பெண்ணே!'' அழகாய் உடல் வளைத்தார்.

இவளது இரு பெட்டிகளை 'கன்வேயர் சுழலி'லிருந்து மீட்டு, தன் காரில் ஏற்றியவர்,

''இப்ப எங்கே போறோம், சொல்?'' புதிர் போட்டார்.

''வெங்கன் எனும் சிற்றூர்தானே; ஸார்?''

''நோ... நோ... இரண்டுக்குமே மறுப்பு தெரிவிக்கிறேன் மதி!'' தலையாட்டினார்.

''என்ன... அப்ப எங்கே?''

''நீ போகவேண்டியது 'வெங்கனு'க்குத்தான். அது மலை உச்சியில் இருக்கும் சிறு கிராமம். பயணக் களைப்போடு இருக்கும் உன்னை உடனேயே அத்தனை தூரம் இழுத்தடிக்க விரும்பவில்லை மதி. ஆக இன்று நீ இங்கு இருக்கும் எங்கள் ஹோட்டல் பாகஸ்தர் ஒருவரின் வீட்டில்தான் தங்குகிறாய். அவர் பெயர் டோனியோ. அவர் மனைவி லோலிதா ஒரு தமிழ்ப்பெண். ஆக நீ அங்கு தங்குவதை அவர்களும் ஆவலாய் எதிர்பார்க்கிறார்கள். அடுத்த மறுப்பு நீ என்னை 'ஸார்' என்று அழைத்ததற்காய்...''

''வந்து... எங்களூரில் எங்களைவிட வயதில் மூத்தவர்களைப் பெயர் சொல்லி அழைப்பதில்லை...''

''ரோமில் ரோமானியனாகவே இரு, சின்னப் பெண்ணே.''

''முயற்சி செய்கிறேன் ஸ... ஸாரி.''

வாய் விட்டுச் சிரித்தார்.



கார் சிறு குலுக்கலுமின்றி ஓடியது. சுற்றிலும் பார்த்தாள். கருத்தில் பதிந்த முதல் வித்தியாசம் நகரின் சுத்தம்தான். சாலைகள் கரும்பட்டுப் போல வழவழவென்று நீண்டு, அகன்டு ஓட, அதன் இருமருங்கும் துளிக் குப்பையில்லை. காலைதோறும் கழுவித் துடைத்துப் பராமரித்த தினுசில் நின்றன பசும் மரங்கள். வெகு தொலைவில் அரண் போல நீல ஆல்ப்ஸ் மலைத் தொடர்.

வானை முட்டும் புதுக் கட்டிடங்கள் ஏதும் இல்லாமல் அமரிக்கையுடன் சற்றுப் பழைமையாய்த் தெரிந்த தலைநகரை வியப்புடன் பார்த்தாள்.. மிக நவீனமான பஸ்கள் வழுக்கிப் பறந்தன - அதன் ஓட்டுனர்கள் நம்மூர் இந்திப்பட நாயகர்கள் போலிருப்பதை வாய்திறந்து பார்த்தாள். பஸ்ஸினுள் பதினைந்து பேர் பயணித்தால் அதிகம். கூட்டம், கூச்சல் இன்றி நளினமாய் இயங்கியது நகரம்.

''ரொம்ப அமைதியாய் இருக்குதே... ஒருத்தர்கூட 'ஹார்ன்' ஒலிக்கலை?''

''ஐயோ... இங்கே ஓட்டுநர்கள் ஹார்னை ஒலிப்பது அநாகரீகம் என்று கருதுகிறோம். அது வெறுமே ஆத்திர அவசரத்திற்குத்தான்.

தாத்தா சொன்னதுபோல, தேசத்திற்குத் தேசம் பண்பாடு மாறுகிறதே ஒழிய, இல்லாமல் இல்லை!

சாலைச் சந்திப்புகளில் சின்னப் பூங்காக்கள் அமைத்து நீரூற்றுகளை நிறுவியிருந்தார்கள். அத்தனை வீட்டு சன்னல்களிலும் 'ஜெரேனியம்' மலர்ச் செடிகள்... செடியில் இலையோ தண்டோ தெரியாத அளவில் செழிப்பான மலர்க் கொத்துக்கள். வண்ண சினிமாக் காட்சிகளை ரீ-ரிகார்டிங் இன்றிப் பார்ப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

''மைய நகரம் இன்னும் தொலைவில் இருக்கிறதோ?''

''ஏன் கேட்கிறாய்... இதுதான் மையம் - பெரும்புள்ளிகள் வசிக்கும் பகுதி.''

''அதிக நடமாட்டம், போக்குவரத்து இல்லையே...?''

''ஆங்... நான் ஒருமுறை இந்தியா வந்திருக்கிறேன் மாதி. காரில் ஏறியதும் கண்ணை இறுக மூடிக்கொள்வேன். அந்த ஜனத் திரளும்,

வாகன நெரிசலும் அசாத்தியம். அத்தோடு மாட்டு வண்டிகள், நாய்கள், சைக்கிள்கள்...'' சொல்லச் சொல்ல அவளது விழிகள் விரிந்து கொண்டே போயின.

''ஜனத்தொகை இங்கு ரொம்ப கம்மி போல!''

''இந்தியாவோடு ஒப்பிட முடியாத அளவில். இங்கு மாலை நேரம் கடைத் தெருவில் ஓரளவு கூட்டமிருக்கும். ஆனாலும் ஒருவருக் கொருவர் முட்டி மோதிக்கொள்ளும் அளவில் அல்ல.''

மதிக்குள் மீண்டும் 'அவ'னின் நினைப்பு!

அத்தையின் ஓவியத்தைச் சட்டமிடத் தருவதற்காய் அவள் சேட்டுகள் வசிக்கும் 'மின்ட் சாலை'க்குச் சென்றிருந்தாள். சின்னச் சந்துகளில் தெற்றுப்பல் போல முண்டியடித்தபடி நூற்றுக்கணக்கில் கடைகள். நான்கு படிகள் இறங்கி அரையிருட்டில் இருந்த நிம்பாசேட் கடைக்குள் போய் அவள் விவரங்களுடன் படங்களைத் தந்துவிட்டுத் துள்ளலுடன் திரும்பியபோதுதான் அவனோடு ஏறக்குறைய மோத இருந்தாள். அவன் வந்ததும் வேகமாய்த்தான். ஆனால் 'சட்'டெனத் தன் வேகத்தைக் கட்டுப்படுத்தி நின்றவன், இவள் தன் மீது மோதாமல் இருக்கத் தன் இரு கைகளால் அவள் தோள்களைப் பற்றித் தடுத்தான்.

மிக இளஞ்சூடான உள்ளங்கைகள்தான். ஆனால் மதியின் மூங்கில் தோள்களைத் தகித்தன... உடம்பெங்கும் இந்தக் கொதிப்பு பாய்ந்து பரவ... இந்த நூதன அதிர்ச்சியில் சிலையாக நின்றாள் மதிவதனா.

அதிர்ச்சியில் அகண்ட விழிகள் தன்னைவிட ஏறக்குறைய ஒரு அடி உயரமேனும் இருந்தவனை நிமிர்ந்து விழுங்கின. அதிலும் அவன் முகவாயில் சுழித்திருந்த குழி அவளைக் குழைத்தது.

'என்ன இப்படிப் பார்க்கிறாய்?' என்பதாய்ப் பரிகசித்த அவன் விழிகள் சற்றே மூடித் திறந்தன. மறுகணம் இவளைச் சற்றே ஒதுக்கிவிட்டுக் கடைக்குள் அவன் போனபிறகுதான் இவளது மூச்சு வந்தது!

இன்றுவரை மனம் அவனிடமிருந்து... யாரென்றே தெரியாத அந்த அவனிடமிருந்து... முழுசாய் மீளவில்லை!



# 4

''வாம்மா. நான் லலிதா. டோனியோவின் மனைவி. எங்களோட தான் இன்னைக்கு ஒரு பொழுது தங்கப்போறே. நாளை வின்னி உன்னை 'வெங்கன்' அழைச்சிட்டுப் போவார்.''

கடல் கடந்த பிறகு கேட்ட தமிழ் அதிகமாய் இனித்தது.

''வணக்கம்மா!'' கைகுவித்தாள்.

''முதல்ல சாப்பிடு. பிறகு குளிச்சு ஒரு தூக்கம் போடு. ஏழு மணி போல இங்கே விருந்து நடக்க இருக்குது. சுவிஸ் நண்பர்களோட, ஓரிரு தமிழ் நண்பர்களும் வருவாங்க... உனக்கும் பொழுது போகும்.''

''எனக்கு 'பார்ட்டி'யெல்லாம் பழக்கமில்லைங்க. அறையிலேயே இருந்துக்கறேன்.''

''நிச்சயமாய் முடியாது! எங்க ஊர்ப் பொண்ணைப் பாருங்க. எத்தனை அழகுன்னு மறைமுகமாய் என்னால் பீற்றிக்காமல் இருக்க முடியாது. அதிலும் இங்கே புதுமுகங்கள் வந்து தங்கறது அரிது. கிடைத்த உன்னை விடவா? முதல்ல சாப்பிட வா.''

சூடாய்ப் பச்சரிசிச் சாதம், சாம்பார், ரசம், கூட்டுப் பொரியலுடன் பரிமாறப்பட, ரசித்து உண்டாள்.

''இங்க வந்து பாயசம், பாஸந்தி எல்லாம் செய்றதை விட்டுட்டேன், மதி. சுவிஸ் சாக்லட், ஐஸ்கிரீம் இருக்க மெனக்கெடுவானேன்!'' என்ற லலிதா ஒரு நோட்டுப் புத்தகத்தின் அளவில் இருந்த சாக்லேட் கட்டியை இவளிடம் நீட்டினாள்.

''உன் அறையிலே போய் நிதானமாய் இதை முடிச்சுக்கோ...''

''ஐயோ... இத்தனை இனிப்பு சாப்பிட்டா...''

''என்னைப் போல 'கொழு கொழு'ன்னு ஆயிடுவே - வேறென்ன? ஆங்... இன்னும் படங்கள்ல குஷ்பு ஹீரோயினாவே நடிக்கறாளாமே

வயசு முப்பதைத் தாண்டி, என் 'சைஸ்' வந்தும் நிக்குதே அந்தப் பொண்ணு... சுயமாய் எந்தப் படம் பார்த்தே - எது நல்லாயிருந்தது?"

அரை மணி நேரம் சுவாரஸ்யமாய் தமிழகக் கதைகளைப் பேசிய பின் அறைக்கு வந்து குளித்துப் படுத்தவள் தூக்கத்தில் அமிழ்ந்து போனாள்.

லலிதா உற்சாகமாய் மதியை வந்திருந்தவர்களுக்கு அறிமுகம் செய்ய, அவர்களும் புருவம் உயர்த்தி இனிமையாய், 'அடடே... இந்தியப் பெண் எத்தனை அழகு... துணிக் கடையின் சிறு பொம்மை போலல்லவா இருக்கிறாள்!' எனப் பாராட்டினர். கவனமாய் அலங்கரிக்கப்பட்ட பொம்மை போலத்தான் இருந்தாள் மதி. வெள்ளை ஜார்ஜெட்டில் தைக்கப்பட்ட காக்ரா சோளி மேகம் போல அவள் தளிர் உடலைச் சுற்றியிருந்தது. மார்பு, கைகள், பாவாடை விளிம்பு எங்கும் வெள்ளிச் சலங்கை மணிகள் கோர்க்கப்பட்டிருந்தன. இதுவும் அத்தையின் படைப்பு.

காதில் பெரிய வெள்ளி ஜிமிக்கிகள் அசைந்தன. பட்டுக் கூந்தலின் சிறு இழையை மட்டும் வெள்ளிக் கயிற்றில் பின்னி மற்றதைத் தளரவிட்டிருந்தாள். அவளது சிறு அசைவிலும் உடையின் மணிகள் சிணுங்கின... நடந்தபோது சிரித்தன... ஓடினால் சங்கீதம் பாடும் போலும் என நினைத்து ரசித்தாள் மதிவதனா.

அவ்வீட்டின் முன்னறையில் பதினைந்து பேர் போலக் டியிருந்தனர். லலிதா அறிமுகம் செய்த கையோடு இவளிடம் வர்கள் மரியாதையாய்ப் பேசினாலும் சிற்சில குழுக்களாய்ச் ர்ந்து வியாபார விஷயங்களை விவாதிக்க இறங்கிவிட்டனர்.

கையில் மெல்லிய மதுக்கிண்ணங்களுடன் தாழ்ந்த குரலில் னார்கள். பேச்சில் ஆங்கிலமும் இருந்ததால் பெண்கள் வருக்கொருவர் தங்கள் நகைகளை ஒப்பிட்டுக் கொள்வது து. வைரங்களும் மாணிக்கங்களும் மினுகு. பட்டாணி புகளில் ஒளியாய்க் கொட்டின. ஒவ்வொரு நகையும் பல கள் பெறும்.



ஒன்பது மணியானதும் இவளுக்கு அலுத்துவிட்டது.

விருந்தில் உதவப் பணியாளர்களும் இருந்ததால் லலிதாவிற்கு ஒத்தாசை செய்யும் வேலையுமில்லை.

இப்படியே தன் அறைக்கு நழுவிவிட்டால்? இல்லை, மரியாதைக் குறைவாய்த் தோன்றும். அந்நியமான இசையும், மதுவின் இளம் நெடியும் சேரவில்லை.

தோட்டப் பக்கமாய்ப் போனால் புதுக்காற்று சுவாசிக்கலாம்.

இவள் வாசலைக் குறிவைத்து நடக்க, அங்கிருந்த பலரது பார்வைகளும் வாசற்புறமே திரும்பின.

'மாஹே வந்தாச்சு' என்ற சொல் மந்திரம் போலப் பலர் வாயிலிருந்து முணுமுணுப்பாய் உச்சரிக்கப்பட்டது.

அதற்குள் வாசலை நெருங்கியிருந்த மதி தயங்கினாள். வரும் பெரும்புள்ளியோடு மோதுவது போலப் போகாமல், சில நிமிடங்கள் கழித்து வெளியே நழுவுவது உசிதம். அந்நேரம் அனைவர் கவனமும் வரும் 'மாஹே'யைத் தான் மொய்த்திருக்கும்.

ஆனால் 'ஹாய்' என்ற கையசைப்புடன் நுழைந்தவனைக் கண்டவள் உறைந்து போனாள்.

அனலூட்டப்பட்ட அறையிலும்கூட உடம்பு குளிர்ந்தது. நான் உறையவில்லை என்பதாய் இதயம் எம்பித் துடித்தது!

இது அவன்தானா? மூன்று ஆண்டுகளுக்கு முன் பார்த்த அதே முகமா?

ஆறடி உயரம், மேல்நோக்கி வாரிய முடி. மிரட்டும் கூர் மூக்கு, ஈர்க்கும் மோவாய்க் குழி, சிரிக்கும் காந்தக் கண்கள்... இவை அனைத்தும் சரியாய்ப் பொருந்துகிறதே...! அறையைச் சிநேகமாய்ச் சுற்றிவந்த அவன் பார்வை தன்னில் பதிந்து, கேள்வியோடு சற்றுச் சுருங்கவும் மதி மேலும் படபடப்பானாள்.

லலிதா, வந்தவனை வரவேற்று உபசாரமாய் பேசிய நேரத்தில், ஆழ மூச்செடுத்துவிட்டு, தன்னைச் சற்று நிலைப்படுத்த முயன்றாள்.

கடவுளே..! முழுசாய் மூன்று ஆண்டுகள் கழித்து இப்படி ஒரு சந்திப்பு. அதுவும் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால்... இது கடவுளின் சித்தமில்லாமல் வேறென்ன? மனம் ஏனென்று தெரியாமலேயே இறைவனுக்கு நன்றி சொன்னது.

கண்களைச் சில நொடிகள் மூடித் திறக்க, வெகு அருகே நின்றான் அவன்! தன்னை மீறி உடல் நடுங்கியது.

இயல்பாகப் பார்க்க, சிரிக்க முயன்றாள் - பெரும் முயற்சி தேவையாயிருந்தது. பழகிப் பிரிந்தவளைப் பார்க்கும் தோரணையில் மதிவதனாவைப் பிரியமுடன் பார்த்தவன் கைநீட்டினான்.

"நான் மகேந்திரன். நம்மூர்ப் பெண்ணை நம் நாட்டு உடையில் பார்க்கறது இங்கே அபூர்வமான அற்புதம்!"

இயந்திரமாய் இவளும் கரம் நீட்டினாள். மிருதுவாய்ப் பற்றி சற்றே குனிந்து வணங்கினான்.

இத்தனை சில்லிட்டிருக்கிறதே இவளது கை என்று நினைப் பானோ? இந்தச் சலனம் தன்னால் ஏற்பட்டது என்பதைக் கண்டு கொள்வானோ? தன்னைப் பார்த்த அவன் விழிகளுள் தனி வெளிச்சம் வந்ததே..! முன்பு ஏற்பட்ட சந்திப்பின் நினைவு ஏதோ ஒரு ஓரத்தில் பதுங்கியிருக்கிறதோ?

இவள் எண்ணங்கள் புரிந்தாற்போலக் கேட்டான் - "இதற்கு முன் எங்காவது சந்தித்திருக்கோமா...? ரோம்... லண்டன்... இண்டியா? நெஞ்சின் துடிப்பிற்கு ஏற்றாற்போல மதியின் விழிகள் அகண்டன.

"இந்தக் குண்டுக் கண்ணை, குழந்தை அழகை லேசில் மறக்க முடியாதே... ம்ம்?"

"மதி... மதிவதனா..."

"பெயர் கச்சிதமான பொருத்தம். லலிதா நம்மை அறிமுகம் செய்து வைக்கத் துடிச்சாங்க. நான்தான் நானே பார்த்துக்கறேன்னு வந்தேன்." மீசையின் அடர் விளிம்பின் கீழே அவன் பற்கள் மின்னலாய்ப்



பிரகாசித்தன. இவன் அளவுமீறி இனிப்பு சாப்பிடவில்லை போலும்... தன்னிச்சையாய் நினைப்போடியது!

"லில்லி நீ வரவிருப்பதாய்ச் சொன்னார்."

"ஓ... உங்களுக்கு அவரைத் தெரியுமா?"

"பின்னே? நானும் உணவு சம்பந்தப்பட்ட தொழில் செய்பவன் தானே. தொழில் முறையில் அடிக்கடி சந்திக்கும் நல்ல நண்பர்."

ஆங்கிலம் அதிகம் பேசுவதால் அழுத்தம் போதாமல் சற்று மழலையாய் இனித்தது அவன் பேசிய தமிழ்... ஆனால் ஆழ்ந்த ஆண்மைக்குரல். முதல் சந்திப்பில் இவன் குரலைக்கேட்க நேரமில்லை என்ற நினைப்புடன் குரலையும் தன்னுள் பத்திரப்படுத்தினாள்..

"வெங்கன் ரொம்ப அழகான சிற்றூர்..."

"ஆங்...? ஓ... அதான் நான் வேலை பார்க்கவிருக்கும் ஊர்..."

"தெரியும். அதன் ஜனத்தொகை ஆயிரம் பேர்தான். ஆனா நிறைய விடுதிகள். உணவகங்கள் உண்டு. அது நிறைய உல்லாசப் பயணிகள்."

"சுவாரஸ்யமான அனுபவமாய் இருக்கும்."

"நிச்சயமாய். ஏன்னா பெரும்பாலும் நானும் அங்கிருப்பேன்!" அவன் விழிகள் சற்று மூடித் திறந்தன குறும்பாய் - முன்பு செய்தது போலவே!

"இந்நேரம் நிறையப் பயணிகள் வருவதால் புது ஆட்களும் வேலைக்குத் தேவை..."

"ம்ம்..."

"நாளை காலை நானும் 'வெங்கன்'தான் போறேன். நாம சேர்ந்தே போகலாமா மதிவதனா?" தன் பெயரை அவனது குரலில் கேட்டவள் மதி மயங்கி நின்றாள்.

## 5

கையில் 'ஷாம்பெய்ன்' குவளைகளுடன் மேலும் சில விருந்தினர் இவர்களைச் சேர்ந்து கொள்ள அந்த மயக்க நொடி கலைந்தது.

பிறரோடு அவன் பேசுவதைக் கண் மலரக் கவனித்தாள். வெள்ளைக்காரர் நடுவே தனித்துத் தெரிந்தது அவனது கம்பீரம்.

பேசும் முறையில் கண்ணியமான கவர்ச்சியிருந்தது. மற்றவர்கள் தங்கள் மனைவியரோடு வந்திருக்க, மகேந்திரன் தனியேதானே வந்தான்... அப்படியானால் பிரம்மசாரி தான்... புது நிம்மதி வந்தது.

அதே சமயம் இதென்ன கண்மூடித்தமான உணர்வுகள்... கட்டுப்படுத்தாமல் விட்டால் கஷ்டம் தரும் என்ற எச்சரிப்பும் உள்ளே குத்தியது.

"அதிகம் பேசமாட்டியா, மதி?" மறுபடி நெருங்கிக் கேட்டது மகேந்திரன்தான்.

"இல்லை... இன்னைக்குக் காலையிலதான் வந்தேன். இப்போ உலகின் மறுபக்கம் இருக்கேன்கிற பிரமிப்பு..."

"நாளை 'வென்கன்' எங்கூடத்தானே வர்றே?"

"வின்சென்ட் வந்து என்னை அழைச்சுட்டுப் போறார்."

"சரி, அப்ப அந்த மலை உச்சியில் சந்திப்போம். அங்கேயாவது எங்கூட வெளியே வருவேயில்லை?"

இவளுக்கு நம்பத்தான் முடியவில்லை. தன் கனவு ராஜகுமாரன் தன்னை வருந்தி அழைப்பதெல்லாம் நிஜம்தானா? குதித்து ஆடவேணும் போலத் துள்ளல் பீறிட்டது. ஆனால் அவள் பெண்மை பொறுப்பாய்ப் பதில் சொன்னது.

"நான் வென்கன் போறது அங்கே வேலை செய்ய... எனக்கு ஒய்வு உண்டா, எப்போ என்பதெல்லாம் தெரியலை... ஆக இது குறித்துப் பிறகு பேசலாமே..."



புருவங்களை உயர்த்தினான். "உங்கள் சித்தம் போல ஆகட்டும்!" என்றபடி, தலை வணங்கியவன், மறுநிமிடம் கும்பலில் கலந்து மறைந்திருந்தான்.

அன்றிரவு தூக்கம் பிடிக்கவேயில்லை.

பிடித்ததெல்லாம் நடந்த சந்திப்பும், மகேந்திரனின் முகமும்தான்.

லலிதாவிடம் பேச்சுக் கொடுத்துச் சில விவரங்களை உருவியிருந்தாள். ஆக யூகித்தது போல அவன் ஒண்டிக்கட்டை.

அவனது தந்தை அயல் தேசம் வந்து ஆரம்பித்த வியாபாரத்தை மகேந்திரன் தன் அண்ணன் மாதவனோடு இணைந்து தொடர்கின்றான். அவர்களுக்குச் சில சிற்றூர்களில் உணவகங்கள் உண்டாம். மாதவனுக்குத் திருமணமாகி இரு குழந்தைகள் உண்டு.

"அவங்க இன்னைக்கு வரலியே?"

"பிள்ளைகளின் விடுமுறை சமயம். வெளியூர் போயிருக்கக் கூடும்."

இத்தனை அழகான ஊரில் இருந்தும் இவ்வூர்வாசிகளுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட வேற்றூர்தான் போக வேண்டியிருக்கிறது என்ற நினைப்பில் புன்னகைத்தாள்.

"மகேந்திரனிடம் பேசும்போது உம் முகத்தில் தனி மலர்ச்சியிருந்தது, மதி. அவனும் உன்னிடம் ஆவலாய் வந்து பேசினான். இங்குள்ள பல பெண்களுக்கு மஹேன்னா கிறுக்கு - அந்தக் கும்பல் வந்திருந்தா அவன் உங்கிட்ட நின்னு இப்படி சாவகாசமாய்ப் பேசியிருக்க முடியாது!" குறும்பாய்ச் சிரித்தாள் லலிதா.

மறுநாள் காலை இவளை அழைத்துப்போக வந்தார் வின்சென்ட் -

"தயாராய் இருக்கியே! நல்லது. சரியாத் தூங்கலியா மாதி? கண் சிவந்து வீங்கியிருக்குது?" கனிவுடன் விசாரித்தார்.

"வந்ததும் நல்லாத் தூங்கிட்டேன். அதான் ராத்தூக்கம் பிடிக்கலை."

டோஸ்ட், சீரியல் காபி சாப்பிட்டபின் கிளம்பினார்கள். மதி, லலிதாவிடம் நன்றி கூறி விடைபெற்ற சமயம் வீட்டின் அழைப்புமணி கூவியது.

கதவைத் திறந்த லலிதாவிடம், "மாதிவத்னா?" விசாரித்தாள் வந்திருந்த இளம்பெண்! அவள் கையில் அரிதான ஆர்க்கிட் மலர்கள் வைத்துக் கட்டிய செண்டு குழந்தையாய்க் கிடந்தது.

"இல்லை. வா மதி. உனக்குத்தான்."

"யாரு... எனக்கு இங்கே...?" தயக்கத்துடன் அப்பெண் நீட்டிய சீட்டில் கையெழுத்திட்டுச் செண்டை வாங்கியவள், சிவப்புப் பட்டுக் கயிற்றால் இணைக்கப்பட்டிருந்த சீட்டைப் படித்தாள்.

அது பிரெஞ்சில் எழுதப்பட்டிருந்தது. குழம்பினாள். கடைசியில் இருந்த கை ஒப்பம் தெளிவு தந்தது.

'இனிய நினைவுகளுடன் - மகேந்திரன்.'

"உங்களுக்குத்தானே?" பூ தந்தவள் பணிவாய் விசாரித்தாள்.

"ஆமாம்... நன்றி!" ஓரக்கண்ணால் லலிதாவும் வின்சியும் அனுப்பியது யார் என்பதைக் கண்டுகொண்டு நமட்டாய்ச் சிரித்தனர்.

"போலாமா, மாதி?"

கார் அலுங்காமல் பயணித்தாலும் மதியின் உள்ளே அலைகள் புரண்டன... புரண்டன... பிறர் முன் உணர்ச்சிகளைக் காட்ட முடியாத நிலை வேறு.

"ரோஜாக்களைவிட ஆர்க்கிட் மலர்கள் விலை உயர்ந்தவை, மாதி. ...த்தியேக நபர்களுக்குத்தான் அனுப்புவோம்!" ஐந்தாம் நிமிடம் ...ச்செடுத்தார் வின்ஸி.

"ம்ம்... அதுதான் விநோதமாயிருக்குது."

"என்ன எழுதியிருந்தான், மாஹே?"

"தெரியலை... பிரெஞ்சிலே இருந்தது."



"பிரெஞ்ச், ஜெர்மன் உனக்கு ஓரளவு தெரிஞ்சிருக்கணுமே?"

"கவிதைகள் புரியற அளவு தெரியாது."

வாய்விட்டுச் சிரித்தார். "அடடே... ஆளு கவிதையெல்லாம் எழுதிட்டானா?"

மதிமுகம் சிவந்தது.

"இந்தியர்களில் ஆணும் பெண்ணும் இப்படி எளிதில் பழக முடியாதில்லை... அதுதான் பதட்டமாய்த் தெரிகிறாய், மாதி."

"உண்மை... பழக்கமில்லாத பழக்கம்!" சொன்னால் நம்புவாரா? "மூன்று ஆண்டுகளுக்கு முன் உங்கள் மாஹேயை ஒரு நிமிடமே பார்த்து இனம் அறியாத ஈர்ப்பினால் இவனையே நினைத்திருந்தேன்!" என்றால்...?

இவள் குழப்பத்தை மாற்ற வேலையைப் பற்றிப் பேசலானார். அவள் இருக்கப் போகும் சிற்றூர் பற்றி, அதன் சீதோஷ்ணம், இவளது வேலை நேரம் என்று பலதும் விவரித்தவர், "கொஞ்ச நேரம் தூங்கு மாதி. இன்டர்லாக்கன் வந்ததும் எழுப்பறேன்," என்றார்.

"அங்கே என்ன சா... வின்ஸி?"

"அங்கேயிருந்து ரெயிலில் பயணிக்கலாம். ஆல்ப்ஸ் மலையிலே ரெயில் பயணம் அற்புதமாயிருக்கும். ஐம்பது பிராங்கு தந்தால் கை கட்டிட்டு இயற்கையை ரசிச்சபடி போலாம்."

அவர் சொன்னது போல மலை விளிம்புகளில் தண்டவாளத்தின்மேல் ஊர்ந்து ஏறியது அற்புதம்தான். அசப்பில் நம் ஊட்டி, கொடைக்கானல் போலிருந்தாலும் சுத்தமும் பசுமையும் அதிகமாயிருந்தன.

'நம் நாடு இது!' என்ற பெருமிதமும், வரும் பயணிகள் நம் விருந்தினர் என்ற பிரியமும் சுவிஸ் குடிமக்களிடம் படிந்து போயிருந்தது முதல் பார்வைக்கே பட்டது.

ஜன்னலோர இருக்கை கிடைக்க, வலதுபுறம் சரிந்த பச்சைப் பள்ளத்தாக்கையும், கைக்கெட்டும் தொலைவில் சோம்பலாய்

அலைந்த மஞ்சக் கூட்டத்தையும் ரசித்தாள். ஆங்காங்கே மலையின் பசும் சரிவில் மேகத்துளிகள் சில சிதறிக் கிடந்தாற்போலிருக்க, பார்வையைக் கூர்மையாக்கினாள்.

அது மேய்ந்து கொண்டிருக்கும் மாட்டு மந்தை' என்பது புலனானது. இந்திய எருமையின் ஒன்றரைப் பங்கு பருமனில் இருந்தன சராசரி கவில் பசுக்கள், கழுத்து மணியசைய அவை மலைச் சரிவில் மேய்ந்தது அற்புத ஓவியம் போலிருந்தது.

கம்பளிச்சட்டை போட்டிருந்தும் கன்னங்களை, மூக்கு நுனியைப் பனிக்காற்று கிள்ளியது.

இவளது பெட்டிகளைக் கைக்கொன்றாய்த் தூக்கினார் வின்ஸி.

"வேணாம் சார்... ஸாரி... நானே தூக்கிக்கறேன்."

"எங்க பண்பாடு பெண்கள் கனமானவற்றைத் தூக்க அனுமதிப்பதில்லை. துணைக்கு ஒரு ஆண் இருந்தால் அவன்தான் தூக்க வேணும்."

"டாக்ஸி ஏதும்...?"

"வெங்கன் சாலைகளில் வாகனங்களுக்கு அனுமதி கிடையாது. மாட்டார் பொருத்திய சிறு வண்டிகள் பொருட்களைச் சுமந்து செல்லப் பயன்படும். மற்றப்படி நடைதான்."

பெட்டிகளை ஒரு வண்டியில் ஏற்றியதும் நடையைக் கட்டினர்.

'மெக்ஸிகன் கார வத்தல்' - இதுதான் அவர்கள் உணவகத்தின் ...ர் வாசலில் மாவிலைத் தோரணம் போல வத்தல் தோரணம்!

...ள்ளே இருபது பேர் அமர்ந்து சாப்பிடும் அளவில் உணவகம். ...க்கமான பார்!

...மேல உங்களுக்கான மூன்று அறைகள் உண்டு, மாதி. ...ிகளுக்கு ஆறு அறைகள் உண்டு. அதைச் சுத்தம் செய்யப் ...ளர்கள் வந்து போவார்கள். உன் பணி இங்கேதான்."

...பருகியபடி இரு ஆண்கள் - மெக்ஸிகன் கார வறுவலைக் ...த்தபடி ஒரு ஜோடி தவிர வேறு யாருமில்லை.

"என்ன டீனா... ஓரளவு ஓய்வு போல?"

"இப்போதான் கல்லூரி மாணவக் கும்பல் ஒன்று வெளியேறினது. அதுவரை நிமிஷத்துக்கு ஒரு ஆர்டர் வந்தது."

"நமக்கு நல்ல வரவு! இவள் மாதிவத்னா - இந்தியாவிலிருந்து வந்திருக்கும் மாணவி!" என்று பரஸ்பரம் அறிமுகப்படுத்திய வின்ஸி தொலைபேசியில் மும்முரமாகி, பின் விடைபெற்றார்.

"ஹாய் மாதி... உன் சொச்ச பெயர் என் வாயில் சிக்க சற்று நாளாகும்."

"பரவாயில்லை டீனா. மாதியே போதும். இப்ப ஏதும் உதவட்டுமா?"

"உன் வேலை நேரம் மாலை ஆறிலிருந்துதான். கூட்டம் அப்ப அதிகம். ஆனா அப்ப மானேஜர் ரோஜர் இருப்பார். பார் வேலை அவர் பொறுப்பு. பை..." டீனா வேலையில் மும்முரமாகிவிட, தன் பெட்டிகளோடு ஒடுங்கிய மாடிப்படிகளில் ஏறலானாள் மதி.

## 6

ஹிட்லர் மீசையும், பியர் தொந்தியுமாயிருந்த ரோஜரை முதல் பார்வையிலேயே மதிக்குப் பிடிக்கவில்லை. கோக் இயந்திரம், மைக்ரோ - வேவ் அடுப்பு இவற்றின் செயல்முறையைக் கற்றுத்தரும் சாக்கில் அடிக்கடி உரசினதாய்ப் பட்டது. பருத்துத் தொங்கிய அவன் உதடுகளும், எச்சில் தெறிக்க விரிந்த சிரிப்பும் சகிக்கவில்லை. ஆனால் சகித்தாக வேண்டும்.

இவனுடன் இணைந்துதானே வேலை நேரம் இருக்கிறது. ஓரளவு வேலையும் கற்றுத் தேற வேண்டும்.

சிநேகப் பார்வைகூடத் தராமல் கறாராகவே பழகினாள். இரவு இரண்டு மணி வரை வேலை நீண்டது. 'உணவகம் மூடியாயிற்று' என்

பலகையை வாசலில் மாட்டி, இழுத்துப் பூட்டிய பின், ஒழித்துச் சுத்தமாக்கும் வேலை ஆரம்பமானது - இடுப்பு கழண்ட உணர்வு.

''மேசைகளை இப்படித் துடை, கண்ணாடிக் கோப்பைகளைத் துளி ஈரமின்றித் துடை!'' என்ற உத்தரவுகளோடு ரோஜர் ஒரு பியர் பாட்டிலைத் திறந்து, ஊற்றியபடி அமர்ந்துவிட்டான்.

அத்தனை வேலைகளும் முடிந்தபோது மணி மூன்றரை, ஏறக்குறைய விடியல். ஆனால் காலை முழுக்க இனி ஓய்வுதான், மாலை ஆறு வரை தூங்கலாம், துவைக்கலாம் - தெம்பிருந்தால் ஊர் சுற்றலாம்.

ஒரு பர்கரும் பெரிய கோப்பைப் பாலும் அருந்தியவள் உறங்கப் போனாள்.

மதியம் எழுந்தவளுக்கு அசதி தீர்ந்திருந்தது. ஜன்னல் வழியே தெரிந்த உலகம் மகா ரம்யமாயிருந்தது. சுத்தமான ஆல்ப்ஸின் காற்றை ஆழ சுவாசித்தாள். இங்கிருக்கப் போவது ஒரு மாதம் போல. பிறகு ஜெனிவாவின் பெரிய ஓட்டலுக்கு மாற்றலாகும். ஆகக் கிடைத்த சந்தர்ப்பங்களை முழுக்க அனுபவித்து விடுவது புத்திசாலித்தனம். தனக்குத்தானே புத்தி சொல்லியவள் பெட்டிகளைப் பிரித்து அடுக்கினாள்.

மூன்று நாட்கள் பறந்த வேகம் தெரியவில்லை. வேலை ...கிவிட்டது - உடம்புதான்.

...டனா, தானுண்டு தன் வேலையுண்டு ரகம்.

ரோஜரோ மேலே விழுந்து உரசும் ரகம்.

...சமாளித்துப் பழகினாள்.

...நான்காம் நாள் காலை மகேந்திரனைக் கண்டபோது உற்சாகம் ...பிட்டது. அத்துவானத்தில் காட்டு மனிதனைக் கண்டாலும் ...டும் நிம்மதி இது. தனக்கே காரணம் கற்பித்துக் கொண்டாள்.

...னால் அதே சமயம் அவன் பூங்கொத்தோடு இணைத்திருந்த ...த நினைவிற்கு வர, உற்சாகத்தில் சங்கோஜமும் கலந்தது.



இங்கு வந்ததும் கைப்பையுள் போட்டு வைத்திருந்த சிறு அட்டையைத்தான் முதல் வேலையாய்த் தேடி எடுத்துப் படித்தாள். எடுத்து வந்திருந்த அகராதியைக் கொண்டு சிற்சில வார்த்தைகளை அர்த்தம் தெரிந்தாள். ஆனால் தெரிந்த அர்த்தம் புரிய, மனதுக்குள் வேறு விதமாய் அலையடித்தது. பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேடி மீண்டும் எழுதிப் பார்த்தாள்.

**'கொத்திக் கொத்திப் பூச்சி உண்ணும்**
**மரங்கொத்திப் பெண்ணே - என்**
**மனங்கொத்தித் தின்னும்**
**மாயப் பறவையாய் நீ!'**

தன் மனக்கிளையில் அமர்ந்து கொத்தி எடுத்தவன் இப்படி கவிதை எழுதியது எப்படி? தானும் அவனைக் கொத்தியதாய் அல்லவா புலம்புகிறான். நிஜமா? அம் முதல் சந்திப்பு அவனையும் பாதித்திருந்ததா?

'உங்களை எங்கே பார்த்திருக்கிறேன்?' என்றானே. சென்னையின் சந்தடி மிக்க பகுதியின் ஒரு சிறுகடையில் என்ற முழு ஞாபகம் இல்லை. சந்திக்கும் அனைத்துப் பெண்களிடமும் அவன் அடிக்கும் வசனமோ அது?

''என்ன மதி? என்னைக் கண்டதும் மலர்ந்தாய், பிறகு சிவக்கிறாய்?'' இன்று அவன் சூட்டில் இல்லை. டீஷர்ட்டும் ஜீன்சும்தான். இதிலும் அவன் கம்பீரத்தின் மாற்றுக் குறையவில்லை.

''தபால்ல கடிதங்களைச் சேர்த்திடலாம்னு கிளம்பினேன்...''

''எப்படியிருக்குது வேலை?''

''பழகிடுச்சு.''

''சீக்கிரமே இன்னொரு ஆண் உதவியாளன் வர்றான். வின்லி தகவல் தந்தார். பெயர் சாச்சாவாம்.''

''ஓ...?''

பலகையை வாசலில் மாட்டி, இழுத்துப் பூட்டிய பின், ஒழித்துச் சுத்தமாக்கும் வேலை ஆரம்பமானது - இடுப்பு கழண்ட உணர்வு.

"மேசைகளை இப்படித் துடை, கண்ணாடிக் கோப்பைகளைத் துளி ஈரமின்றித் துடை!" என்ற உத்தரவுகளோடு ரோஜர் ஒரு பியர் பாட்டிலைத் திறந்து, ஊற்றியபடி அமர்ந்துவிட்டான்.

அத்தனை வேலைகளும் முடிந்தபோது மணி மூன்றரை. ஏறக்குறைய விடியல். ஆனால் காலை முழுக்க இனி ஓய்வுதான். மாலை ஆறு வரை தூங்கலாம், துவைக்கலாம் - தெம்பிருந்தால் ஊர் சுற்றலாம்.

ஒரு பர்கரும் பெரிய கோப்பைப் பாலும் அருந்தியவள் உறங்கப் போனாள்.

மதியம் எழுந்தவளுக்கு அசதி தீர்ந்திருந்தது. ஜன்னல் வழியே தெரிந்த உலகம் மகா ரம்யமாயிருந்தது. சுத்தமான ஆல்ப்ஸின் காற்றை ஆழ சுவாசித்தாள். இங்கிருக்கப் போவது ஒரு மாதம் போல. பிறகு ஜெனிவாவின் பெரிய ஓட்டலுக்கு மாற்றலாகும். ஆகக் கிடைத்த சந்தர்ப்பங்களை முழுக்க அனுபவித்து விடுவது புத்திசாலித்தனம். தனக்குத்தானே புத்தி சொல்லியவள் பெட்டிகளைப் பிரித்து அடுக்கினாள்.

மூன்று நாட்கள் பறந்த வேகம் தெரியவில்லை. வேலை பழகிவிட்டது - உடம்புதான்.

டினா, தானுண்டு தன் வேலையுண்டு ரகம்.

ரோஜரோ மேலே விழுந்து உரசும் ரகம்.

சமாளித்துப் பழகினாள்.

நான்காம் நாள் காலை மகேந்திரனைக் கண்டபோது உற்சாகம் மிழிட்டது. அத்துவானத்தில் காட்டு மனிதனைக் கண்டாலும் ற்படும் நிம்மதி இது. தனக்கே காரணம் கற்பித்துக் கொண்டாள்.

ஆனால் அதே சமயம் அவன் பூங்கொத்தோடு இணைத்திருந்த விதை நினைவிற்கு வர, உற்சாகத்தில் சங்கோஜமும் கலந்தது.



இங்கு வந்ததும் கைப்பையுள் போட்டு வைத்திருந்த சிறு அட்டையைத்தான் முதல் வேலையாய்த் தேடி எடுத்துப் படித்தாள். எடுத்து வந்திருந்த அகராதியைக் கொண்டு சிற்சில வார்த்தைகளை அர்த்தம் தெரிந்தாள். ஆனால் தெரிந்த அர்த்தம் புரிய, மனதுக்குள் வேறு விதமாய் அலையடித்தது. பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேடி மீண்டும் எழுதிப் பார்த்தாள்.

'கொத்திக் கொத்திப் பூச்சி உண்ணும்
மரங்கொத்திப் பெண்ணே - என்
மனங்கொத்தித் தின்னும்
மாயப் பறவையாய் நீ!'

தன் மனக்கிளையில் அமர்ந்து கொத்தி எடுத்தவன் இப்படி கவிதை எழுதியது எப்படி? தானும் அவனைக் கொத்தியதாய் அல்லவா புலம்புகிறான். நிஜமா? அம் முதல் சந்திப்பு அவனையும் பாதித்திருந்ததா?

'உங்களை எங்கே பார்த்திருக்கிறேன்?' என்றானே. சென்னையின் சந்தடி மிக்க பகுதியின் ஒரு சிறுகடையில் என்ற முழு ஞாபகம் இல்லை. சந்திக்கும் அனைத்துப் பெண்களிடமும் அவன் அடிக்கும் வசனமோ அது?

"என்ன மதி? என்னைக் கண்டதும் மலர்ந்தாய், பிறகு சிவக்கிறாய்?" இன்று அவன் சூட்டில் இல்லை. டீஷர்ட்டும் ஜீன்சும்தான். இதிலும் அவன் கம்பீரத்தின் மாற்றுக் குறையவில்லை.

"தபால்ல கடிதங்களைச் சேர்த்திடலாம்னு கிளம்பினேன்..."

"எப்படியிருக்குது வேலை?"

"பழகிடுச்சு."

"சீக்கிரமே இன்னொரு ஆண் உதவியாளன் வர்றான். வின்ன் தகவல் தந்தார். பெயர் சாச்சாவாம்."

"ஓ...?"

''நானும்கூடத் தபால் ஆபீசுக்கு வரலாமில்லை?''

''வரலாம்... அதுக்கென்ன?''

''பிறகு என்னோட காபி சாப்பிடவும் வரணும்.''

யோசித்தாள். ஆறு வரை வேலையில்லை. அறைக்குள் அடைந்து கிடப்பானேன்? எல்லாவற்றையும்விடத் தன் கனவு நாயகனுடன் இணைந்து கழிக்க ஒரு சந்தர்ப்பம்.

''சரி.''

தெரு முனையிலேயே தபால் பெட்டியிருந்தது.

இதைத் தாண்டிப் போக நேர்ந்ததில்லை.

மகேந்திரனுடன் பேசியபடி நடந்தது கனவு போலிருந்தது.

சின்னச் சாலைகள்... கொலுவிற்கு வைப்பது போலச் சீராய் இருமருங்கும் புல்வெளியும் அலங்கார விளக்குக் கம்பங்களுமாய்!

பழங்கால ஆலயம் ஒன்றின் உள்ளே அழைத்துப் போய்க் காட்டினான். பல தலைமுறைகள் தொழுத அவ்விடம் புனிதமான அமைதியுடன் இருந்தது. இருவருமாய் இணைந்து வரும் முதல் இடம் தெய்வ சந்நிதி என்ற பரவச உணர்வு...!

ஆலயத்தின் மறுபுறம் போய் வெளியேற, பிரமித்தாள்.

''வா... இந்த பெஞ்ச்சில் உட்காரு, மதி. பள்ளத்தாக்கு மாயா லோகம் போலத் தெரியுது பார்...''

மர இருக்கையில் அமர்ந்தவளுக்குத் தானும் பஞ்சு மேகம் போல இலகுவான உணர்வு.

கம்பீரமான நீல மலைகளைப் பரிவுடன் தடவிச் சென்றன மேகங்கள். இவர்களையும் ஒரு மேகக்கூட்டம் 'சில்'லெனத் தடவி டியது.

இத்தனை ரம்யத்திற்குப் பின்னணி இசை போல நூதன மணி சை...



''என்ன சத்தம்...''

''இடதுபுறமாய் எட்டிப் பார்...''

எழுந்து பார்த்தவள் வாய் கொள்ளாத சிரிப்பு.

கன்றுக்குட்டி அளவில் 'புசுபுசு'வென்று ஆடுகள் சரிவில் கும்பலாய் மேய்ந்து கொண்டிருந்தன.

அவற்றின் அசைவில் தகரக் குவளை போல அவற்றின் கழுத்தில் தொங்கிய மணிகள் விநோத இனிமையுடன் ஓசை எழுப்பின.

தூய பனிக்காற்றை ஆழச் சுவாசித்தவள் அந்த சுகத்தில் லயித்து விழி மூடினாள்.

காட்டு மலர்களின் வாசனை கிள்ளியது.

கண் திறந்து பார்வையையும் குளுமையாய் நிரப்பினாள்.

அவனும் மவுனமாகவே ரசித்தான். தவிர இயற்கையின் பிரமாண்டத்தின் முன் பேச்சு அடிபட்டது... போலும்.

காலம் உறைந்து நின்றது போன்ற பிரமை... ஆலயமணி ஒலிக்கும் வரை.

''மணி என்ன?''

''நாலாச்சு... வா... காபி சாப்பிடலாம்.''

''ம்ம்...''

அருகேயே இருந்த உணவகத்திற்குக் கூட்டிப் போனான். இத பணக்கார இடமாய்த் தெரிந்தது. உணவும் பகட்டாய்ப் பரிமாறப்பட்டது

''ஹாய் மாஹே...'' ஆர்ப்பாட்டமாய் அழைத்து, கைகுலுக்கிய வனோடு எழுந்து போனான் மகேந்திரன்.

இவளுக்கும் கழிப்பறை போய்வந்தால் தேவலை என்றிருக் தேடிப்போனாள், இங்கு சிறிதும் வியர்க்காததில் அடிக்கடி கழிப்பல போக நேர்கிறது.

அம்புக் குறி கட்டிய இடம் நோக்கி நடக்க, திடீரென வெடித்தது அந்தச் சிரிப்பலை.

"அதான் உங்க வீட்டுக்குப் பிடி கொடுக்க மாட்டேங்கறே. இத்தனை புதுசு புதுசாய் இளம் பறவைகள் உன் வலையில் வந்து விழுந்தா உனக்குக் கல்யாணத்துக்கு அவசியமென்ன?"

இவள் கழிப்பறைக் கதவை மூடுவதற்குள் பதிலும் கேட்டது.

"மன்மதன் அம்சம் ஏதோ எங்கிட்ட இருக்குன்னு நினைக்கறேன்ப்பா! பறவைகளுக்கு நான் வலைகூட விரிக்கறதில்லை. அதுவா தோளிலே வந்து உட்காருதுங்க...!"

இது மகேந்திரன் குரல் அல்லவா?

திடுக்கிட்டாள்.

"இது புதுச்சிட்டு. அதுவும் உங்க ஊரிலேருந்து! எத்தனை நாளாய் உன் தோளிலே சவாரி?"

"இப்பத்தான் ஆரம்பம். அதுக்குள்ளே கொரி போடாதே. என்னைப் பார்த்ததுமே ஜென்மம் எடுத்ததே எனக்காகத்தான் போல பார்த்தாப்பா ஒரு பார்வை."

"மச்சந்தான்! கோயில் பக்கமாய்த் தள்ளிட்டுப் போறதைக் கவனிச்சேன். அது அதிர்ஷ்டமான பெஞ்ச். ஆரம்ப காரியமெல்லாம் ஆச்சா...?"

மதியின் உடம்பு உதறியது.

"நான் சாமியார் இல்லப்பா. ஆனா அதுக்காகப் போக்கிரியும் இல்லை."

"அதாவது வீலை மெள்ள நடக்குங்கறே...?"

இரு ஆண்களின் முரட்டுச் சிரிப்பு இவளை முள்ளாகக் கிழித்தது. வெறுமே ஒருவன் முகம் பார்த்துக் கனவுகளை வளர்த்தது சர்வ டாள்தனம்! இவனை மறுபடி பார்ப்போமா என ஏங்கியது



அறிவிலித்தனம்... சற்றுமுன் அவள் அண்மையில் மயங்கியது உட்பட.

விடுவிடுவென அங்கிருந்து நடந்தவள் தன் அறைக்கு வந்து படுத்தபோது கன்னங்கள் முழுக்க ஈரமாயிருந்தன.

## 7

மஞ்சள் குருவி போல வலைக்கு இருபுறமுமாய் மாறி மாறித் தாவிய பந்தைப் பார்த்தபடி 'யோகர்ட்' சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் மதி. சுவையும் மணமும் ஊட்டப்பட்ட தயிர் வழுக்கி உள்ளிறங்கியது.

மாலைப்பொழுது இப்படி அமருவது ஆசுவாசப்படுத்துகிறது. இலக்கின்றி வெறித்தபடி இருந்தாலும் சுற்றிலும் கேட்கும் பேச்சும் சிரிப்பும் ஆறுதல் தந்தன.

இன்று ஒரு இந்தியப் பெண்ணும் 'டென்னிஸ்' ஆடிக் கொண்டிருந்தாள். அது பொதுவான விளையாட்டுத் திடல்.

காலிக்கிண்ணத்தைக் குப்பைத் தொட்டியில் போட்ட மதி, கேட்ட தமிழில் 'திடுக்'கெனத் திரும்பினாள்.

"நான் லாவண்யா - விடுமுறைக்கு இங்க வந்தேன்."

"நா... தமிழ்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"தமிழ் மணம் மூக்கைத் துளைக்குதே."

"நான் மதிவதனா... இங்குள்ள மெக்ஸிகன் உணவகத்தில் வேலை பார்க்கறேன்..."

"தினம் இங்க வருவீங்களா?"

இயல்பாய்த் தன்னருகே அமர்ந்தவள் பெண் அல்ல, சிறுமி என்று புரிந்தது. பதின்மூன்று வயதுதான் இருக்கும். நல்ல வளர்ச்சி என்றாலும் உடம்பு சதையிலும், முகத்திலும் குழந்தைத்தனம் மிச்சமிருந்தது.

"வெள்கன் வந்தே ஒரு வாரந்தான் ஆகுது... நீங்க?"

"நீள்னே சொல்லுங்க ப்ளீஸ்... இன்னைக்குதான் வந்தோம். பள்ளி விடுமுறையைப்போ இங்கேதான்."

"எந்தப் பள்ளி?"

"கொடைக்கானல் சர்வதேசப் பள்ளி... நானும் என் தம்பியும் அங்கதான் படிக்கிறோம்."

"அப்ப உங்கப்பா, அம்மாவெல்லாம் இங்கேயா?

"ஆமா. இந்த ஊர் படிப்பு, பழக்க வழக்கமெல்லாம் நமக்குச் சரிவராதுன்னு பாட்டி எங்களைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பிட்டாங்க!"

மதி புன்னகைத்தாள். "அது சரிதான்."

"அடடே... அப்ப நீங்களும் ஒரு குட்டி பாட்டிதானா? அப்ப நீங்க எங்க பாட்டியைச் சந்திக்கணுமே."

துள்ளி எழுந்தவள் கை நீட்டினாள்.

"எங்கேயிருக்காங்க?"

"எதிர்ப்பக்கம் நீலப்பூ மரமில்லை? அதையும் தாண்டினா எங்க வீடு."

இயல்பும் அன்பும் கலந்து வந்த அழைப்பைத் தட்ட மனமின்றிச் ...மியைத் தொடர்ந்தாள் மதி.

முழுக்க வெளுத்த தலைமுடியும் பட்டுச் சேலையுமாயிருந்த ...பெண்மணியைப் பார்த்ததும் பிடித்துப்போக, கைகுவித்தாள்.

"வணக்கம்மா..."

"வாம்மா... உன்னை விளையாட அழைக்கப் போறேன்னு ...ன எம் பேத்தி அழைச்சுட்டே வந்துட்டாளா?"

...மிழ் கேட்ட ஆசையில் வந்தேம்மா."

...ந்தோஷம்!" என்ற முதியவள் மதியைப் பற்றிய விவரங்களைக் ... அறிந்தாள்.



"வாயேம்மா வீட்டுக்கு. சாம்பார் இட்லி செய்து வைச்சிருக்கேன். ஒருவாய் சாப்பிட்டுப் போயேன்."

"ஆறு மணிக்கு நான் வேலையில் நிக்கணும்மா."

"அதுக்கு இன்னும் அரை மணி நேரமிருக்கே... வா..."

வற்புறுத்திக் கூட்டிச் சென்றனர்.

வீட்டில் கம்ப்யூட்டரில் விளையாடிக் கொண்டிருந்த தம்பி சரணை அறிமுகப்படுத்தினாள், லாவண்யா.

அனைவருமாய்ச் சேர்ந்து சாப்பிட்டனர்.

"ரொம்ப சுவையா இருக்கும்மா."

"ஒரு வாரமா பருப்பு, பெருங்காய மணமே கிடைச்சிருக்காதே!"

"உண்மைதான். ஆனா மெக்ஸிகன் உணவும் நம்மதை மாதிரி காரசாரமாய் இருக்கறதால நாக்கு மரத்திடலை."

"நேரத்துக்குப் போதுமானது சாப்பிடறியா, மதிவதனா? வாடி... தெரியறே?"

நேற்று டினாவும் இதையேதான் கேட்டாள்.

அதிகம் பழகாத ரகமாய்த் தெரிந்தவள் இவள் வாட்டம் உணர்ந்... பரிவாய் விசாரித்தாள்.

"என்ன வீட்டு நினைப்பா; மர்தி?"

"இல்ல, டினா... வந்து கொஞ்சம்னு வையேன்..." மழுப்பினா...

"சொல்ல வேண்டாம்னா பரவாயில்லை. ஆனா ஏ... தேவைன்னால் தயங்காம கேளு, பேசு. சரியா?"

நேரே கண்களைப் பார்த்து டினா பேசிய விதம் பிடித்திருந்... இவள் நம்பிக்கைக்குரிய தோழியாய் இருப்பாள் எனத் தோன்ற, கதையை ஓரளவு சொன்னாள்.

ஆள் யார் என்றும், அதிக விவரங்களும் தராமல் பிரச்சினை... கோடி காட்டினாள்.

''ஆச்சரியம். கதைகளைப் போல நிஜ வாழ்விலும் சில சுவாரஸ்யங்கள். ஆனால் சில இந்தியர்களை எனக்கு ஓரளவு பரிச்சயம் மாதி. அவர்கள் பெண்களை ஈனமாய் நினைப்பதில்லை. போகப் பொருள் இவள் என்று அலட்சியப்படுத்துவதில்லை.''

''எந்த நாட்டாரிலும் நல்லவர்கள் உண்டு. அல்லாதவர்களுக்கும் குறைவேயில்லை. தவிர இதில் அடிப்படைத் தவறு என்னுடையது. நாய்க்குட்டிப் பிரியம் என்றொரு தினுசு உண்டு. நாய்குட்டி தன்னிடம் ஒரிரு நிமிடங்கள் ஆசையாய் விளையாடுபவர்களையும் பின் தொடரும். அதே நினைப்பில் எப்போதும் வாலைக் குழைக்கும். நானும் காதலை இப்படி நினைத்து... கொச்சைப்படுத்திவிட்டேனோ என்கிற குறுகுறுப்பு...''

மவுனமாய் இவள் கைபற்றிய டினா ஆறுதலாய் அழுத்தினாள்.

ஓரளவே என்றாலும் பாரம் இறங்கிய நெஞ்சு நிதானப்பட்டிருந்தது. இன்று இந்த இனிய தமிழ்க் குடும்பத்தின் பழக்கம் - ...சம். நெய் மிதந்த சாம்பார் இட்லி வெகு சுவையாய் இருக்க, ...ருப்தியாய் சாப்பிட்டாள்.

''ஸாரி, சாப்பிட்ட கையோட கிளம்பறேன்... உங்க வீட்டுக்கு ஏதும் ...ங்கியும் வரலை...''

''அடிக்கடி வாம்மா. அது போதும்...''

...மதி ஆட்டிய கையைப் பற்றி முத்தமிட்டாள். அம் மூதாட்டி.

அந்தப் பரிவில் மதியின் கண்கள் பனித்தன.

...விடைபெற்று வாசல் இறங்கியவள் கண்களைப் 'படபட'வெனப் ...ய தமிழ்ப்பட நாயகியர் போலச் சிமிட்டினாள். கண்ணீரால் ...வ மங்கி வேண்டாதவற்றைக் காண்கின்றனவோ அவை?

...ந்தேகமில்லை... நான்தான் மதி.''

...க்கமாய்ச் சொன்னது மகேந்திரன்!

...தப்பா... மதி ஆன்ட்டியை உங்களுக்கு முன்னமே தெரியுமா?''

...ாகமானாள், லாவண்யா.



''தெரியுமே. திடீர்த் திடீர்னு பிரத்தியட்சமாவாங்க. சொல்லாம மறைஞ்சிடுவாங்க. நமக்குப் பவுர்ணமியை அடுத்து அமாவாசை வந்தது போலிருக்கும்.''

''ஓகோ... அப்ப நல்லாத் தெரியும் போல...?''

''யாரு மகேயா? அந்தப் பொண்ணை, மதியை அவள் இடம் வரை துணையாய்ப் போய்ச் சேர்த்துடேம்ப்பா...''

உள்ளேயிருந்து பெரியம்மாவின் உத்தரவு வந்தது.

''சரி, பெரியத்தை...''

பவ்யமாய்ப் பதிலளித்தான்.

வேறு வழியின்றி வேகமாய் நடந்தாள்.

மாலை ஆறுக்குக் கடைகள் அனைத்தும் மூடப்படும். ஊரின் மத்தியிலிருந்த பெரிய அங்காடியும் கடைசி நேரப் பரபரப்பில் இருந்தது. கம்பளிக் கோட்டை அணிந்து கொண்ட விற்பனைப் பெண்கள் கடைகளின் கண்ணாடிக் கதவுகளைப் பூட்டினர். உள்ளே விளக்கொளியில் கடை தன்னுள் இருப்பவற்றைப் பட்டவர்த்தன மாய்க் காட்டிக் கொண்டிருந்தது. இரவு பார்த்து வைத்துக்கொண்டு மறுநாள் வந்து வாங்கிக் கொள்ள வேண்டியது.

மதியின் கால் முட்டிகள் இரும்பாய்க் கனத்தன.

''திடீர்னு நீ மறைஞ்சது பற்றிச் சொல்வேன்னு எதிர்பார்த்தேன்.''

''தெரிஞ்ச காரணத்தை எதுக்குச் சொல்றது?''

''தெரிஞ்சுக்கத்தான் கேட்கறேன்.''

''நீங்க உங்க நண்பரோடு பேசினதைக் கேட்டேன். கேட்க நேர்ந்த...

முகம் மிளகாய்ப் பழமாய்ச் சிவக்கக் கடுகடுத்தாள்.

''ஒட்டுக் கேட்கிறதும் சொல்லாம ஓடிப்போறதும் பண்ப... செயல்கள் இல்லை.''

''பெண்களைப் பற்றி இழிவாய்ப் பேசறது? ஓடிவ... தொத்திகிட்ட பறவை நான்னீங்க. உங்களைப் பார்த்த என் பார்...

மேல பழிபோட்டீங்க... ச்சே... உங்க கேவலமான நினைப்பெல்லாம் நிமிஷ நேரப் பேச்சிலே வெளிப்பட்டிருச்சு."

"ஆண்கள் தனிமையிலே பேசற கேலிப் பேச்சு அது. விளையாட்டுதான். வினை கிடையாது."

"வினை எங்களுக்குத்தான்."

"உன்னை அங்கே காணலைன்னதும் பயந்துட்டேன். நீ உணவகம் போய்ச் சேர்ந்துட்டது தெரிஞ்ச பிறகுதான் நிம்மதியாச்சு."

"உங்களை விட்டுத் தள்ளி இருந்தாலே பாதுகாப்புதான். ஆக அநாவசியமாய்ப் பயப்படாதீங்க..."

"சொல்லிட்டுப் போயிருக்கலாம்."

"வலை விரிச்ச வேடன்கிட்ட குருவி சொல்லிட்டு வேற போகணுமா?"

"வேடன், வலைங்கறதெல்லாம் வெட்டிப் பேச்சு."

"நீங்க பயன்படுத்திய வார்த்தைங்கதான்."

"ஆனா முறை தவறி நடக்கறவனில்லை நான்..."

"தரக்குறைவா இன்னொரு ஆணோடு ஒரு பெண்ணை விமர்சிப்பதே தவறான நடத்தைதான்."

"அந்தக் கேலிப்பேச்சு இங்கே இரு ஆண்களிடையே சகஜம்..."

"நடுவே சிக்கிச் சீரழியறவங்க பொண்ணுங்கதான், பாவம்!"

## 8

உணவகத்தினுள் நுழைந்தவளின் முகம் சிவந்து மூச்சு பதறுவதைக் கவனித்த டீனா புருவம் உயர்த்தினாள்.

"என்னாச்சு?" என்ற கரிசனைக் கேள்வி அதில் தொனித்தது. அநாவசியமாய் மைக்ரோ வேவ் அடுப்பையும், சிப்ஸ் வறுவலையும்,



காபி இயந்திரத்தையும் கையாண்டவள், தன்னையும் கவனித்து, விசாரிப்பதில் வியந்த மதி.

"நேரமாயிடுச்சு... ஸாரி டீனா... ஐஞ்சே நிமிடத்தில் வந்துடறேன்." முணங்கினாள்.

"மெள்ளவே வா. இன்னும் பத்து நிமிடம் சமாளிக்கறது எனக்குப் பெரிசில்லை. உனக்குத்தான் நம்ப முதலாளியைச் சமாளிக்க முடியலை. ம்ம்...?"

உயரத் தூக்கிக் கட்டிய குட்டைக் கூந்தல் ஆட, சிப்ஸ் வறுத்தவளை வெளிப்படையான வியப்புடன் பார்த்தாள் மதி.

"என்ன சொல்றே?"

"மாஹேதானே உன்னுடன் வாசல்வரை வந்தது."

"ஆமா... ஆனா முதலாளின்னு?"

"அதுவும் அவர்தானே!"

"புரியலை... ஒரு சுவிஸ் கேட்டரிங் கல்லூரி சார்பாய் நான் இங்க வேலைக்கு அனுப்பப்பட்டிருக்கேன்."

"ஆனா அந்தக் கல்லூரி இந்த உணவகத்தின் உரிமையாளர்கள் இல்லியே. நிர்வாகத்தில் அவ்வப்போது பரஸ்பர உதவி நடக்கும். அவ்வளவுதான்."

தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்த ஒரு தம்பதிகளுக்கு வறுவலோடு பர்கரைப் பரிமாறிய டீனா கை துடைத்தபடி இவள் முன் நின்றாள்.

"என்ன மலைச்சு நிக்கறே? மாஹேயும் அவர் அண்ணன் மாதுவும் ஓட்டல் தொழிலில் உள்ளவர்கள். பல உணவகங்களின் பாகஸ்தர்கள்."

"ஓ... எனக்கிது எதுவும் தெரியாது."

"அவர்கூட மும்முரமாய்ச் சண்டை போட மட்டும் தெரியுமாக்கும்?"

குறும்பாய்க் கண் சிமிட்டினாள்.

"சண்டை இல்லை... தப்பு... தப்பு பண்ணார்னு தோணிச்சு."

டீனா கண்களைச் சுருக்கினாள்.

பார்வை ஊசியாய் ஊடுருவியது.

"அப்ப... நீ சொன்ன அந்தக் கனவு நாயகன் மாஹேதானா?"

இவளை ஏமாற்றுவது சுலபமேயில்லை.

ஆக மவுனமாய் நின்றாள்.

தன் முதலாளி யார் என்பதுகூட அறியாத அடிமுட்டாளான உனக்குக் கற்பனையும் கனவுகளும் தேவையா என்று நினைக்கிறாளோ...?

பெருகிய அவமானத்தைத் தாங்கக் கூடாமல் தன் அறைக்கு ஓடினாள் மதி.

**ம**றுநாள் காலை வேலைக்கு வந்து சேர்ந்த சாச்சாவைப் பார்த்தவள் தன்னையும் மீறிப் புன்னகைத்தாள்.

பலவண்ண உடையோடு காதில் ஆடிய லோலாக்கும், கழுத்தின் பாசிமணிகளும் அவனை விநோதமாய்க் காட்டின. ஆனால் தெளிவான கண்களும் களங்கமற்ற சிரிப்பும் அவன் நல்லவன் என்றன.

"இனி ரோஜருக்குப் பதில் சாச்சா உன்னுடன் இருப்பான்."

அர்த்தத்துடன் புன்னகைத்தாள், டீனா.

"நல்லது. ஆனால் காலை உன் ஒத்தாசைக்கு யாருமில்லையே!"

"அந்நேரம் பாரில் கூட்டம் அதிகமிராது. சமாளிச்சிடுவேன்."

இது போக அறைகளைச் சுத்தம் செய்ய வரும் இளம் ...ணையும் டீனாதான் மேற்பார்வை இடுவாள்.

...ங்கும் நிறைந்த சம்பளத்திற்கேற்ப வஞ்சனையின்றி ...த்தனர் மக்கள்.



ஒரே வாரத்தில் மதி, சாச்சா, டீனா மூவரும் நெருங்கிவிட்டனர்.

சாச்சா இருக்க சூழல் இலகுவாகியிருந்தது. அல்லது நள்ளிரவு தாண்டியும் ஆண்கள் வந்து குடிக்கும் உணவகத்தில் ரோஜர் போன்ற 'குணவான்' உடன் இருந்ததில் மதிக்கு வயிற்றில் புளி கரைத்திருந்தது.

போதாதற்கு இவளிடம் ஒரு துப்பாக்கி வேறு தந்திருந்தார்கள்.

"ஏதும் கலாட்டா நேர்ந்தால், தரையில் சுடு - அடங்கிவிடுவார்கள்" என்ற உபதேசத்துடன்.

அக்கறுப்பு ஆயுதத்தைப் பார்க்கையிலேயே முதுகு சொடக்கியது. சாச்சா வந்த பின்பு, தளர்ந்து தன் வேலையை ரசிக்கலானாள் மதி. சாச்சாவின் உடை அலங்காரத்திற்கு ஏகப்பட்ட பாராட்டுக் கிடைக்க, மறுநாள் மதியும் சேலை கட்டிக் கொண்டாள்.

ஆரஞ்சு நிறச் சேலை, ரவிக்கையில் கருகமணியில் பவளம் கோர்த்த மாலையுடன் வந்தவளைச் சாச்சா வாய்பிளந்து பார்த்தான்.

"உங்க நாட்டு உடையா இது? எத்தனை பெண்மையும் நளினமுமாய் இருக்கிறது... ஆகா... ஓகோ..." என்றான்.

"நன்றி சாச்சா... எல்லாம் உன்னால்தான். டீனா வெறுமே ஜீன்ஸ், சட்டையும் தோது என்றதினால் கொண்டுவந்த இரண்டு செட்டையே மாத்தி மாத்திப் போட்டேன். ஆனா வர்றவங்க உன் வித்தியாச அலங்காரத்தை ரசிக்கறதிலே எங்க ஊர் சேலையைச் சுத்தினேன்."

ஆனால் சாச்சாவின் ஆரம்பப் பாராட்டும் புன்னகையும் மங்கியிருந்தன.

"என்னை ரசிக்கறது சரி, மாதி. ஆனா வாடிக்கையாளங்க உன்னை ரசிச்சா அது எத்தனை தூரம் சரிப்படுமோ... தெரியலியே...?"

"துணைக்கு நீயிருக்கற தைரியம்தான்!"

கோமாளித்தனமும் சிநேகமுமாய் வருபவர்களிடம் பழகிய சாச்சா தேவை இருப்பின் கண்டிப்பும் காட்டினான்.

கை தவறி உடைந்த பியர் குவளைகளைப் புன்னகை மாறாமல், "பரவாயில்லை... இது சகஜந்தான்!" என்று சுத்தம் செய்தவன்.

மறுநாளே இருவர் சண்டையில் போட்டு உடைத்த கண்ணாடி சாமான்களுக்கு இரட்டிப்பாக வசூலித்து விட்டான்.

மனதிற்குள் 'சபாஷ்' போட்டவள், தனியே அவனைப் பாராட்டினாள்.

"இந்தத் தொழிலில் இது அவசியம் மாதி..." என்றான் சாதாரணமாக.

மனம்விட்டுச் சிரிக்கும் சிநேகமும் அயர வைக்கும் உழைப்பும் சிறந்த மாற்றாகி மனப்புண்ணை ஆற்றியிருந்தன.

அதன் பிறகு டென்னிஸ் களம் போகவும் மனமில்லை.

அது உள்ளங்கை அளவிலான ஊர். நடந்து வரலாம் என்று காலை வீசிப் போட்டால் ஆலயம் முன்போய் நிற்க நேர்ந்தது. அந்த அற்புதப் பள்ளத்தாக்கு இவளைப் பதட்டமாக்கியது.

ஆனால் மகேந்திரனுக்கு அஞ்சித் தான் கவிட்சர்லாண்டில் அறைக்குள் கிடந்து குமைவது அடுத்த முட்டாள்தனம் எனத் தோன்ற, அன்று மாலை கடைத் தெருவை ஒரு சுற்றுச் சுற்றி வரலாம் எனக் கிளம்பினாள்.

'கொழுகொழுவென்ற பொம்மை மாடுகள் வரைந்த பட்டுத்துணி, தாத்தாவிற்குக் கைத்தடி, 'ஜேட்' கல்லில் செதுக்கிய தாயக்கட்டை, சாவி வளையங்கள் என வாங்கியவள் -

'மேல் தளத்தில் ஓவியக் கண்காட்சி உண்டு' என்ற அறிவிப்பைப் பார்த்துப் படியேறினாள்.

பாதிப் படியேறியவள் கீழே மிதந்த சிரிப்பில் தன்னிச்சையாய்க் குனிந்தாள்.

இதயம் சில நொடிகள் துடிக்க மறந்தது. யாரோ ஒரு வெள்ளைக்காரியுடன் பேசிச் சிரித்திருந்தது மகேந்திரன்தான்.

அவசரமான சுவிஸ்ஸில் பேசியதால் அர்த்தம் புரியவில்லை.



ஆனால் இரு முகங்களிலும் நேசம் தெரிந்தது.

பலகாலப் பழக்கம் என்றும் புரிந்தது. வயிறு தீக்கங்குகளால் நிரப்பப்பட்டதாய் எரிந்தது. வர்ணக் காகிதத்தில் சுற்றப்பட்ட ஒரு பொருளை அவன் அன்பளிப்பாய்ப் பிரியமுடன் தர, அப்பெண் எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டது.

அவன் நிதானமாய்க் கண்களை மூடித் திறந்து சிரித்தது... மூன்று வருடங்களுக்கு முன்பு இவளுக்குத் தந்த அதே சிரிப்பு!

'தேமே' என விளையாடும் குழந்தையை இழுத்துச் சுளீரென அறைந்தால் திகைக்குமே... அதுபோலத் திகைத்து நின்றாள் மதி.

வெளியே வந்தாலே காயம் படுவதுபோல நேர்ந்து விடுகிறது. இதற்கு அறையினுள் புத்தகம் வாசித்தபடி உருளலாம்.

ஓய்விற்கு ஓய்வும் ஆயிற்று.

சுசப்புடன் அவள் கடையைவிட்டு வெளியேற இவளுக்காகவே காத்திருந்தது போல ஆவலாய் வந்து கைபற்றினாள் லாவண்யா.

"என்ன ஆன்ட்டி... அதுக்கப்புறம் விளையாடவோ... வீட்டுக்கோ வரலை? பாட்டிம்மாவுடைய சாம்பார் இட்லி அத்தனை மோசமா?"

"ஐயய்யோ... அப்படியில்லம்மா, வேலை..."

"அப்படியா பிழிஞ்செடுக்கறார் உங்க முதலாளி... கேக்கறேன் அவரை..."

"கேளு... என் வேலை போயிடும்... அவ்வளவுதான்..."

நீளப் பெருமூச்சு விட்டாள்.

"சித்தப்பா அத்தனை கடும் முதலாளி இல்லைங்கறது எனக்குத் தெரியும்."

சிணுங்கினாள் லாவண்யா.

"நான் மோசமான தொழிலாளியாய் நடந்துக்கக் கூட தில்லையா?"

முதல்ல நல்ல பெண்ணா எங்க பாட்டியை வந்து பாருங்க.''

''நாளைக்கு வர்றேனே...''

''பாட்டி எதிரே மைதானத்தில்தான் நிக்கறாங்க.''

அதற்குமேல் மறுக்க மனமின்றி நடந்தாள்.

இவளைக் கண்ட முதியவளின் முகம் மலர்ந்தது.

''அடிக்கடி வான்னேன்னேம்மா, மதி. அதிக வேலையோ?''

''அப்படியில்ல...''

''ராத்திரி முழுக்க வேலைதானாமே?''

''யார்... யார் சொன்னா?''

''என் சின்ன மருமகப் பிள்ளைதான்.''

ஆக பெரியம்மா மகேந்திரனின் அண்ணனது மாமியார் போலும்.

''விடியற வேளைதான். அந்தப் பொண்ணு தூங்கப் போவா. ஆக வெளியே சுற்ற நேரமோ, தெம்போ இருக்காதுன்னார் மகேந்தர்.''

உண்மை. எல்லோருக்கும் முதலாளியைப் போல உல்லாசமாய்ப் பெண்களுடன் ஊர் சுற்றி, அவர்களுக்குப் பரிசு தந்து பதிலுக்கு முத்தம் பெறும் குஷால் வாழ்க்கை அமையுமா?

எண்ணம் கசந்தது.

''உனக்குச் சேலை ரொம்ப அம்சமாயிருக்கும்மா, மதி.''

கசப்பை விழுங்கியவள் இனிப்பாய்ப் புன்னகைக்க முயன்றாள்.

''இதென்ன அச்சா, கைவேலையா?''

இவள் ரோஜா நிற ஜார்ஜெட்டின் முந்தானையைக் கண்ணருகே ...ண்டுபோய் ஆராய்ந்தாள் பெரியவள்.

...இது எங்க அத்தை கையால் நெய்தது.''

...அடடே... என்ன சுத்தமான வேலைப்பாடு! ஒரு இழையும் ...த. சிதறாத நுணுக்கமான திறமை!''



''அத்தை ஓவியரும் கூட. அவங்க வரையறதெல்லாம் சென்னை வி.டி.ஐ.யில் விற்பனைக்குப் போனதுமே விலையாகிடும்.''

''யாரு... அவங்க பேர்?''

''சியாமளி.''

''அடடே... எங்கிட்டேகூட ஒரு கண்ணாடி ஓவியம் உண்டு. என் நாத்தனார் என் ரசனை அறிஞ்சு சென்னையிலேயிருந்து அனுப்பியிருந்தா - கானகத்து இருட்டிலே ஜோடி மான்கள் நிக்கறது போல... அதிலே மான் கண்களின் ஜொலிப்பும் பட்டுச் சருமமும் பிரமாதம்...''

''அத்தை யுடையதாய் இருக்கலாம்...''

உற்சாகமாய் ஆமோதித்தாள். கடல் கடந்த தேசத்திலும் அத்தையின் கலை ரசிக்கப்படும் பெருமிதம்.

''மணி ஆறாகப் போகுதே, மதிவதனா!''

அவள் மகிழ்வை நாசமாக்கும் நாராசத்துடன் கேட்டது. அவன் குரல்.

''ஸாரி... இதோ போறேன்...''

''இரு. மகேந்தர்... நான்தான் மதியை வலிய இழுத்து வைச்சிருக்கேன். இவள் அத்தை பிரமாதமான ஓவியர்... இந்த சேலையின் பூவேலை கூட அவங்க நெய்ததாம்.''

அவன் பார்வை சேலையைத் தடவிப் போனது.

கூசி நின்றாள்.

''அடுத்த முறை சென்னை போனால் சியாமளியைச் சந்திக்கணும். அவங்க ஓவியங்கள் சிலது வாங்கி வரணும். இங்கே அவை நாலு மடங்கு அதிக விலைக்குப் போகுமே...''

''நான் கிளம்பறேம்மா...''

அவசரமாய் நடந்தவளுடன் உடன் நடந்தான்.

இவள் ஓட்ட நடையுடன் அநாயாசமாய் அவன் நீண்ட கால்கள் இணைந்தன.

''என்ன பெரியத்தை உங்களோடு தொடர்பு ஏற்படுத்தப் பிரியப்படறாங்க போல?''

பிரேசரின் பாக்கெட்டுகளுக்குள் கைவிட்டபடி நடந்தவன் கேட்டான்.

''உடல்கடந்த எந்தத் தொடர்பையும் ஏற்றுக்கறதாயில்லை.''

''நான் தப்பான அர்த்தத்தில் கேட்கலை.''

''உங்ககிட்டேயிருந்து வர்ற அத்தனையும் தப்பாத் தோணுது.''

சற்று மவுனமாயிருந்தான்.

''உன்னை முதன் முதலாய்ப் பார்த்து ஒரு மாதம் கூட ஆகலை. அன்று என்னைப் பார்த்த உன் கண்கள் நட்சத்திரங்களாய் மின்னின. மதி - மதிமுகத்தில் நட்சத்திரங்களான்னு அசந்துட்டேன். உனக்கு என்னைப் பிடிச்சிருக்கதுன்னு புரிஞ்சது... இப்ப எல்லாம் மாறிடுச்சு இல்லை?''

''பார்வை ஏமாற்றிடுது... பழகினாத்தான புரியுது.''

''நாம அதிகம் பழகலை... சில மணி நேரங்கள் கூடப் பேசலை... அதுக்குள்ளே என்னைக் கவனிச்சாச்சா?''

''பார்வை தப்பினாலும்... பேச்சு புரிய வைச்சிடுச்சு.''

''ரொம்ப சீரியஸ் பொண்ணு நீ; மதி... வேடிக்கைப் பேச்சுக்கள் புரியலை...''

''சில உறவுகள் சீரியஸ்தான்... உன்னதம்தான். கொச்சைப் படுத்திடக் கூடாது.''

''ரொம்ப இந்தியப் பண்பாட்டில் ஊறிட்ட... அயல்நாட்டின் பழக்க வழக்கங்கள் விசித்திரமாப் படுது.''

''உங்களை எதிர்த்து விலகின முதல் பெண் நான்தான் போல... தான் நான் உங்களுக்கு விநோதமாப் படறேன்.''

உணவகத்துள் வேகமாய் நுழைந்தவளை அவன் தொடர ...லை...!



## 9

''இந்தாங்கப்பா காபி.''

''என்னம்மா என்னோடு சேர்ந்து பத்து மணிக்கு நீயும் ஒரு 'பெக்' அடிப்பே! எங்க காணும்?'' - சிரித்தார் பொன்னுசாமி.

''ம்ப்ச்... வேணும்னு தோணலப்பா...''

''பத்து தரம் மதி கடிதாசியை வாசிச்சதே போதுமே, உனக்கு.''

''ஏம்ப்பா, உங்களுக்கு மதியைத் தேடலியா?''

''ஒரு மாசம் ஓடிருச்சு. கால் கிணறு தாண்டிட்டோம். இன்னும் ரெண்டு மாசந்தானேம்மா. தவிர எம் பேத்தி இருக்கறது சுவிட்சர்லாண்டிலே... எல்லாருக்கும் கிடைக்குமா ஆல்ப்ஸ் மலையில சுத்தி வர்ற பாக்கியம்!''

''அத்தனை குளிரலைங்கறா!''

''அவள் என்னைக் கொண்டு பிறந்திருக்கா!''

''எருமைத் தோலுங்கறீங்க!''

''ஆங்... இப்ப உன் 'மூட்' கொஞ்சம் தேறிடுச்சு, சியாமி! சொல்ல வந்தது என்னன்னா சுற்றிலும் புதுமையும் அழகும் இருக்க, அதை ரசிக்காம குளிருது, வேர்க்குது, பசிக்குதுன்னு சிணுங்கற சராசரி ரகமில்லை அவள்.''

''எல்லாம் நல்லாயிருக்குன்னு அவள் சொன்னாலும் எனக்கென்னவோ நெருடுதுப்பா. வழக்கமான கேலி, கும்மாளம் அவள் கடிதாசியில, பேச்சில இல்ல...''

''கூண்டுல அடைபட்ட காதல் கிளிகள் படபடன்னு சிறகடிச்சு, சத 'கீச்கீச்'ன்னும். ஆனா உயரே பறந்து, மலைமுகட்டில் கூடு கட்டிக்கற பருந்து ஆர்ப்பாட்டம் பண்ணாது - கம்பீரமாய் இருக்கும்.''

''மதியை, ஏன் எந்தப் பெண்ணையுமே பருந்தாய்க் கற்பனை செய்தா சகிக்கலை. கிளி, அன்னம், மயில்ங்கறதை விட்டுட்டு...''

''அதெல்லாம் சங்க காலத்தில். நீயே கிளியாட்டம் சம்சாரக் கூண்டில் அடைபடலை... நானும் உன் விருப்பத்துக்குச் சம்மதிக்கலை?''

இது அவரது பிரம்மாஸ்திரம்!

அடிக்கடி கையில் எடுத்துக் கொள்வார்.

இருபது ஆண்டுகளுக்கு முன் பழுதில்லாத அழகிய பெண்ணைக் கட்டிக் கொடுக்காமல் அவள் நோக்கம் போலிருக்க விடுவது புரட்சிதான்... புதுமைதான்.

அது சியாமளிக்கும் புரியாமல் இல்லை.

''இப்ப எதுக்கப்பா எங்கதை?''

''உன் நோக்கத்துக்கு இசைஞ்சேன். ஆனா மதி நோக்கம் புரியலை. வள் மனசிலே ஏதோ இருக்குது... விண்டு காட்டமாட்டேங்கறா. ரம்ப உயரே பறந்து போயிடற பருந்து கம்பீரந்தான். ஆனா நாம் தைத் தெளிவாய்ப் பார்க்க முடியறதுமில்லை.''

என்னன்னு கேட்டு எழுதட்டுமாப்பா?''

லக்கமாய்க் கேட்டாள்.

சொல்லணும்னா மனசு விட்டுப் பேச அந்தக் குழந்தைக்கு த் தவிர யாரிருக்கா? அவளா சொல்லுவா... அவசரப்படாதே.''

ப்ப தமிழ்க் குடும்பம் ஒண்ணு அங்கேயிருக்காம். நல்லாப் ங்களாம். அதுதான் கேட்க ஆசுவாசமாயிருக்குது.''

ங்கிட்ட உன் கண்ணாடி ஓவியம் இருந்ததாய் வாசிச்சதும் விட்டியா?''

னே.. என் வேலை ஆயிரக் கணக்கான மைல் தள்ளியும் து பெருமைதானேப்பா...?''

துதான் உனக்குக் காதுகூட கேட்கலை!'' - கேலி பேசினார்



''போங்கப்பா...'' - சிணுங்கலுடன் நகர்ந்த 42 வயது மகளைப் புன்னகையுடன் பார்த்தவரின் முகம் மாறியது. இடது கையால் நெஞ்சை நீவினார். மறுகை ஒரு பொடி மாத்திரையை எடுத்து நாக்கின் கீழ் அடக்கிக் கொண்டது.

அத்தை, தாத்தாவின் கடிதங்களைப் பரவசமாய் வாசிக்கும் மது சற்று பொழுதில் துவண்டு விடுவாள்.

வீட்டின் இன்ப நினைவுகள் துன்பமாய் மாறித் தொண்டையை இறுக்கும்.

''கையில் பிரித்து வைத்திருக்கும் புத்தகம் வெகு நேரமாய் 37-ஆம் பக்கத்திலேயே இருக்கிறதே, மாதி!'' - பரிகசித்தது ரோஜர்.

''என்ன ஊர் நினைப்பா? இன்று உனக்குக் கடிதம் வந்தது இல்லை?''

''ம்ம்... இதுவரை நான் தனியே தங்கியதில்லை.''

''இங்கு பதினாறு வயதிற்கு மேலே தனியேதான் ஜாகை.''

''எங்க நாட்டுக் கலாச்சாரம் வேறு ரோஜர். கல்யாணம் ஆகும் வரை நாங்கள் குடும்பத்தோடு சேர்ந்திருப்போம். கல்யாணமான பிறகு தனிக்குடித்தனம் என்பதே இப்போதுதான் பழக்கமாகி வருகிறது.''

''அப்ப... ஆணும் பெண்ணும் பழகறது...?''

''ஒரு வரைமுறையோடு பழகலாம். கல்யாணம் ஆன பிறகு ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் பரவலான பழக்கம்.''

''அதுசரி. இங்கேயும் சிலபேர் அப்படி உண்டு. விதிவிலக்குகள் எங்குதான் இல்லை...? நாளை நீ வெளியூர் வர்றியா, மாதி...?''

''எங்கே...?''

''இண்டர்லாக்கனில் எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு அதற்குப் போகும் வழியே 'டிரம்பெல்லா' அருவி ரொம்ப விசேஷ

ஒரே அருவி மலையைக் குடைந்து பத்து இடங்களில் பேரிரைச்சலோடு விழுவது அதிசயமான காட்சி!"

"ரொம்பத் தொலைவா?"

"முக்கால் மணி நேரப் பயணம். நான் போகிற வழியில் உன்னை இறக்கி விட்டுட்டு திரும்பும் வழியில் உன்னை ஏற்றிக் கொள்கிறேன். நீயும் இந்த அழகான நாட்டை ஓரளவேனும் பார்க்க வேணாமா?"

'வெள்கனு'க்குள்ளேயே சுற்றி வந்தால் மகேந்திரனிடம் முட்டி நிற்கத்தான் நேரும். திருகையில் இட்ட பயறு அரைபடாமல் தப்ப முடியாதது போல... ஆக வெளியூர் போவது நல்ல மாற்றம்தான்.

ரோஜருடன் பயணம் மட்டும்தான். அருவியைப் பார்க்கப் போவது தனியேதான் - வசதியான ஏற்பாடாகத் தோன்றியது.

ரோஜருடன் பயணிப்பது உசிதம்தானா?

முதல் இரு நாட்கள் போல இப்போதெல்லாம் உரசல், தொடுதல் இல்லை. இவள் தன்மை புரிந்து ஒதுங்கியிருக்கிறான்... ஆக... போகலாம் - தப்பில்லை.

"வர்றேன் ரோஜர். இத்தனை கரிசனமாய்க் கேட்டதற்கு நன்றி."

தலையாட்டியபடி சிரித்தான் - தொந்தி குலுங்கியது.

"உன் கம்பெனிக்காக நான்தான் நன்றி சொல்லணும், பெண்ணே. காருக்கும் நாளை தனி உற்சாகம் வந்துவிடும் பாரேன்."

கருஞ்சிவப்பில் சந்தனநிறப் பூவேலை செய்த சல்வாரில் அரக்கில் பூந்தேர் போலிருந்தாள் மதி.

ஆரம்பத்தில் உற்சாகமாய் ஓடிய ரோஜரது கார் பின் அசுர மெடுத்தது. முழுசாய் ஊர் போய்ச் சேருவோமா எனக் கலங்கச் எக்குத்தப்பான வேகம்.

வப் பெண்ணின் வளைவுகள் போலப் பல கொண்டிருந்த பாதை அது.



"இத்தனை வேகமாய்... இங்கே போகணுமா ரோஜர்?"

"நல்ல மது வகைகளுக்கு அடுத்து, எனக்குக் காரை வேகமாய் ஓட்டப் பிடிக்கும், மாதி. அதிலும் உன்னளவு அழகி அருகே இருந்தால்... தனி குஷி!"

பாதை மிகக் குறுகியது அல்ல என்றாலும், இங்கிருந்து கரணமடித்தால் நிச்சயமாய் மரணம்!

தான் ரோஜருடன் போவதை இன்று காலைதான் டினாவிடம் சொன்னாள். ஆச்சரியமாய்ப் பார்த்த டினா, 'டிரம்பெல்லா ஒரு உலக அதிசயம்தான் - அவசியம் பார்க்க வேண்டிய இடம். ஆனா ஏன் ரோஜரோடு...?' இழுத்தாள்.

'கேட்டார்... ஒரு மாற்றமாயிருக்குமேன்னு..."

"எங்கிட்ட சொல்லியிருந்தால் நம்பிக்கையான ஒரு ஆளைத் துணைக்குத் தேடித் தந்திருப்பேன்."

"பயணம் மட்டும்தானே, டினா. அருவியைப் பார்க்கத் தனியாய்தான் போவேன்."

"சரி, பத்திரம்!" என்றதுடன், தன் துணிகளைச் சலவை இயந்திரத்துள் போடலானாள் டினா.

இப்பயணம் பத்திரமாய் முடிவது சந்தேகந்தான்!

தலைசுற்றியது. வரும்போது அற்புதமாய்த் தோன்றிய நீல, பச்சை மலைகளும் அவற்றின் பனிமுகடுகளும் இப்போது அச்சுறுத்தின.

ஒரு வழியாய் ஊரை அடைந்து இறங்கியவளுக்கு நிற்க முடியாத அளவு கால்கள் தளர்ந்திருந்தன.

"என்ன மாதி, நானும்கூட வரணுமா?"

"இல்லை... இல்லை..." அவசரமாய் மறுத்தவள், "மறுபடி எப்போ இங்கே சந்திக்கிறோம்?" கேட்டாள் அச்சத்துடன்.

"இப்ப மணி இரண்டு. நாலுக்கு இதே இடத்தில் - சரிதானா?"

'விருட்'டெனப் பறந்து மறைந்தது அந்த வால்வோ.

இரண்டு மணி நேரத்தில் இதே போல மற்றொரு பயங்கரப் பயணமா? நினைப்பில் வயிறு சுருண்டது.

ஒரு 'கோக்' வாங்கியவள் அயர்வுடன் பாதையோர மர இருக்கையில் சரிந்தாள்.

## 10

பத்து பிராங்குகளைத் தந்து நுழைவுச்சீட்டு வாங்கியவள் மற்ற உல்லாசப் பயணிகளுடன் சேர்ந்து நடந்தாள். கருப்பாய் நெடுநெடுவென்றிருந்த மலையில் துளி ஈரமில்லை! அறிவிப்புப் பலகையை வாசித்தாள்.

'இம்மலையின் உள்ளே ஊடுருவிப் பாய்கிறது நீர். பத்து நிலைகளில் அது அருவியாய் வழிவதைப் பாய்வதைப் பார்க்கலாம். இந்த 'லிப்ட்' உங்களை முதல் நிலை அருவிக்கு உயர்த்திச் செல்லும். அங்கிருந்து இறங்கும் நீங்கள் மற்ற ஒன்பது நிலைகளையும் ...ார்க்கலாம்.

'லிப்ட்'டினுள் பத்துப் பேர் சேர்ந்ததும் மலையைக் குடைந்து ...ிதன் ஏற்படுத்தியிருந்த சுரங்கம் வழியே மேலேறியது அது.

ஒரு நிமிடப் பயணத்தின் முடிவில் இரும்புக் கதவுகள் விலகின. ...விளக்குகள் மலையின் உட்புற இருட்டை முழுக்க ...டியிருந்தன. ஒரு பிரம்மாண்ட மலையின் வயிற்றுக்குள் தான் ...கிறோம் என்ற உண்மை மிரட்டியது. தனியே இங்கிருக்க ...தால் கை கால் நடுங்கிவிடும். பிறருடன் சேர்ந்தே நடந்தாள். ...ப் பயணிகளில் பாதிக்கும் மேலே ஜப்பானியர்கள்.

... நொடிகளில் அந்தச் சத்தம் கேட்டது. தூரத்தே கேட்கும் ...ின் கர்ஜனை போல... மகா உயரத்திலிருந்து பாயும் நீரின் ...ம்!



நெருங்க நெருங்க ஓசை உக்கிரமானது.

'டிரம்பெல்லா' பொருத்தமான பெயர். ஆயிரம் முரசுகள் ஒருங்கே முழங்குவதுபோல, நூறு பேர் அலறலுடன் போரிடுவது போல...

பாறைகளில் படி செதுக்கி கைப்பிடிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் இரும்புக் கிராதி இருந்தது. ஒரு வளைவு திரும்பிய அனைவரும் பிரமித்தார்கள். அகண்ட குழாய் போன்ற கருங்குகை நடுவே பாய்ந்திறங்கியது வெள்ளி அருவி.

பேரிரைச்சல்.

இவள் இரண்டு காதுகளை மூடியபடி நின்றதைப் பார்த்த ஒரு முதியவள், 'இயற்கை மரியாதை தெரியாதவள் - இஷ்டத்திற்கு இரைவாள்!' என்று சிரித்தாள்.

துணிந்து கீழே பார்த்தவளுக்கு நீர் போகுமிடம் கண்ணிற்குப் புலனாகவில்லை. விளக்கு எட்டாத ஆழம் அது...

ஒடுங்கிய ஈரப் படிகளில் இறங்கினாள். வெவ்வேறு இடங்களில் ஒளிந்து பிடித்து விளையாடும் குழந்தை போல எதிர்பாராத இடங்களில் சிரித்தது நீர்! சில இடங்களில் சற்று நளினமாகக் கூட இறங்கியது! நீரின் பாய்ச்சல் ஒவ்வொரு இடத்திலும் வித்தியாச அழகு காட்டியது.... ஒரே மனிதன் வெவ்வேறு உறவு, சந்தர்ப்பங்களில் வித்தியாசப்படுவதுபோல!

மணி நான்காகி இருந்தது. தான் இறங்கிய இடத்தை விரைந்து அடைந்தவள் அதே இருக்கையில் சரிந்தாள். வயிறு பசித்தது.

ஒரு பயங்கர அழகைத் தரிசித்த அனுபவமும், ஓய்ந்த கால்களும் அவளை அயர வைத்தன. வயிறு நிரம்பச் சாப்பிட்டுத் தூங்கினா... நல்லது. ஆனால் அப்படிச் சாப்பிட நேரமில்லை. எந்நேரமும் ரோஜ... வந்துவிடுவான். தவிர நிரம்பிய வயிறோடு அவனோடு பயணி... முடியாது. நிச்சயம் வாந்தி வரும்... ஆக ஒரு சான்ட்விச் மென்று கா... பருகினாள். இனி ரோஜருடன் உயிரைவிடத் துணிந்து ஒரு பே... பயணம்... அதன் பிறகு பத்து மணி நேர உழைப்பு!

முடியுமோ? ஏனோ அழுகை முண்டியது. ஊர், உறவின் நினைப்பும் சேர, முட்டிய அழுகை கன்னங்களில் வடிந்தது.

''முட்டாள்... அந்த முட்டாளை நம்பி வரலாமா, மதி?''

நம்பமுடியாமல் நிமிர்ந்தாள். தான் நின்றாலே, மோவாய் தூக்கிப் பார்க்கவேண்டிய உயரம். உட்கார்ந்திருந்தவளுக்கு மலை போலத் தெரிந்தான் மகேந்திரன். ஆனால் ரோஜருக்குப் பதிலாக இவன் முகம் பார்த்ததும் வயிற்றில் பால் படர்ந்த குளிர்ச்சி.

''நீங்க எங்கே...?''

''முதல்ல கிளம்பு!'' குரல் கடுமையாய் இருந்தாலும் அவன் கைகள் அவளை மிருதுவாகவே எழுப்பின.

''ரோஜர் நாலு மணிக்கு வர்றதாய்...'' கண்ணீரை நாசுக்காய்த் துடைத்தவள் இயல்பாய்ப் பேச முயன்றாள்.

''அவன் வரப்போ வரட்டும்... எவ்வளவு நேரமாய்க் காத்திருக்கே?''

''இப்பதான் வந்தேன்.''

''பசிக்குதா?'' நிச்சயம் கேள்வியில் பரிவு இருந்தது.

திட்டும்போதே அத்தையும் இப்படித்தான், 'சாப்பிடறியா?' என்பாள். பதிலளிக்கும் முன்பே மறுபடி கண்களில் குளம் கட்டியது.

இரண்டு மணி நேரம் மலைப் படிகளில் நடந்ததும், அருவியும் அவளைப் பலகீனப்படுத்தி இருந்தன போலும். ஒரு மாதிரித் தலையாட்டினாள்.

வாய்க்குள் கோபமாய் முணங்கினவன் காருக்குள் இவளை அமரச் செய்துவிட்டுப் பக்கத்துக் கடைக்குள் போனான்.

ஐந்தாம் நிமிடம் இவள் மடியில் நீள் சதுரத் தட்டு வைக்கப்பட்டது. இதில் மூடப்பட்டிருந்த இரு கிண்ணங்களைத் திறக்க ஆவி பறந்தது. சூடான சூப்பும் மற்றதில் நூடில்ஸூம் இருக்க ஆவலாய்ச் சாப்பிட்டாள். நான்கு வாய் உள்ளே போன பிறகே அவனைப் பார்த்தாள்.

''நீங்க சாப்பிடலையா?''



பரிவில் அவன் பார்வை இளகியிருந்தது.

''எனக்குப் பசிக்கலையே, மதி.''

இவள் முடிக்கும் வரை வெளியே அமர்ந்து செய்தித்தாளைப் புரட்டியவன், இவள் முடித்ததும் ஒரு ஆப்பிளை நீட்டினான்.

''தட்டை வைச்சிட்டு வந்துடறேன்.''

''அது என் வேலை!'' என்றவன் லாவகமாய் அதைத் தூக்கினான்.

ஆப்பிள் இனித்தது. சாறு தேனாய் உள்ளிறங்கியது.

ஆனால் அவன் காரைக் கிளப்பியதும் நெஞ்சு படபடத்தது. ரோஜர் போல எப்போது வேகமெடுப்பான் என்ற அச்சம். ஆனால் கார் தறிகெட்டுப் பாயவில்லை. சீரான வேகத்தில் அலுங்காத பயணம். நிம்மதியாய் மூச்சுவிட்டவளின் கண்கள் செருகின... தலை அப்படியும் இப்படியுமாய் ஆடியது. பின் அந்த அவதியும் இல்லாமல் உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

''மதி, இறங்கறியா?''

வெகு அருகில் அவன் குரல் கேட்க, திடுக்கிட்டு எழுந்தாள். ''ஆங்...'' வந்துட்டமா?''

கழுத்திற்கு அண்டை கொடுத்திருந்தது அவனது 'கோட்' என்பது புரிந்தது. அவன்தான் மடித்துத் தலைக்கு வாகாய் வைத்திருப்பான்.

''நன்றி.''

''அதை நாளைக்குச் சொல். இப்ப உன் அறைக்குப் போ, மதி.''

மறுக்கத் திராணியின்றித் தன் அறைக்குப் போனாள்.

ஐந்து நிமிடங்களில் சாச்சாவின் குரல் கேட்டது. ''மாதி... பால் கொண்டு வந்திருக்கேன்.''

''தோ வரேன்... இப்ப எதுக்குப் பால்?''

''மாஹே தரச்சொன்னார். குடிச்சுட்டுப் படுப்பியாம். ஆறு மணிக்கு வரத் தேவையில்லை. எழுப்பும்போது வந்தால்

போதும்ன்னா." என்றவன் இவளைக் கூர்ந்து பார்த்தான். "ரொம்ப வாடித் தெரியறே..."

"ஒன்னுமில்லை... மகேந்திரன் எப்படி அங்கே 'திடீர்'னு வந்தார்னு தெரியலை."

சாச்சா ஒரு தினுசாய் முழித்தான்.

பால் கெட்டியாய் ருசித்தது. சொட்டு விடாமல் குடித்தாள்.

"படு, மாதி... நாளை பேசலாம்."

"இல்லை. ரெண்டு மணி நேரத்துல வந்திடுவேன். நன்றி."

கம்பளிப் போர்வைக்குள் சுருண்டவள் எழுந்தபோது மணி பத்து - மறுநாள் காலை பத்து! பதறி அடித்துத் தயாரானவள் பத்து நிமிடங்களில் உணவகத்திற்குப் போனாள்.

## 11

யார் இரவு முழுக்க இவளது வேலையைச் செய்திருப்பார்கள்? சாச்சாதான் ஒண்டியாய் ஓடியாடியிருப்பான்.

ரோஜர் வந்து சேர்ந்தானா? வந்திருந்தாலும் ஓடியாட உடம்பு வணங்காதே...

குற்ற உணர்வுடன் வந்தவளை வரவேற்றது, மகேந்திரன். நீண்ட கால்களை நீட்டியபடி விச்ராந்தியாய் காபி பருகிக் கொண்டிருந்தான். உணவகத்தின் வாசற்கதவு மூடப்பட்டிருந்தது. உள்ளே யாருமில்லை... ஒலியிருக்கும் இசையும் இல்லை.

"வா, மதி. எப்படியிருக்கே?"

"குட் மார்னிங். ஸாரி... வந்து..."

"தூங்கினதுக்கு மன்னிப்புக் கோருகிறாய் என்றால் அது அவசியமில்லை. ஏன்னா பால்ல ஒரு 'கார்டினால்' பொடித்துக் கலக்கினது நான்தான்."



குழப்பமாய்ப் பார்த்தாள்.

"வந்து ஒரு காபி குடி."

அவளுக்காய் ஒரு கோப்பை கலந்தான்.

"நன்றி. ஆனா எனக்கேதும் புரியலை."

"குடி. சொல்றேன்."

அவளுக்கும் அச்சூடான பானம் தேவையாய் இருந்தது.

டீனாவிற்காய்ப் பார்வையை அலைய விட்டாள்.

"டீனாவுக்கு வேற வேலை தந்திருக்கேன். அறையைச் சுத்தம் செய்யும் பெண்ணோடு சேர்ந்து ஒழித்துக் கொண்டிருக்கா."

"ஓ...?"

இவள் பருகி முடிப்பதற்குள் சீரியல், டோஸ்ட், முட்டை எனப் பரிமாறினான்.

அவசரமாய் எழுந்தாள். "நீங்க ஏன் சிரமம்..."

"நம்மூர் முதலாளி, தொழிலாளி பாகுபாடெல்லாம் இங்கே அதிகமில்லை."

வறட்சியாய்ப் புன்னகைத்தாள். "ஆனாலும் எனக்கிது பழக்கமில்லை."

"சரியில்லாதவன்னு தெரிஞ்ச ஆளோட வேற்றூர் கிளம்பப் பழகிட்டிருக்கே!" அவன் புன்னகை இடக்காக மாறியிருந்தது.

"அதில் தப்பிருந்ததாய்த் தோணலை."

"அதான் தனியே உட்கார்ந்து அழுதுட்டு இருந்தியா?"

"அது... அது... ஊர் ஞாபகத்தில்..."

"கூடவே நிறையப் பசி, நடந்த களைப்பு... ம்ம்?"

கணிப்பில் இவன் புலிதான்.

"ஆமா, நீங்க எங்கே அங்கே வந்தீங்க?"

''ஒரு குருவி பறந்து வந்து விஷயத்தைக் காதிலே போட்டது - இப்படி ஒரு முட்டாள்தனம் செய்திருக்கா, உன் மதிவதனா... போ... ஓடிப் போ'ன்னுச்சு.''

மதி முகம் சிவந்தது. 'உன் மதிவதனாவாமே? யார் இவனுக்கு அத்தனை உரிமை தந்தது?'

''ரோஜர் பற்றித் தெரிந்தும் அவனோடு போகலாமா?''

''என்ன தெரியணும்?''

''குடியோடு போதைப் பழக்கமும் உடையவன். மூணு வருடங்கள் அதீதக் குடிக்காக அவனது காரோட்டும் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டிருந்தது. இப்ப மறுபடி காரிலே பறக்கிறான்.''

''ம்ம்... நேற்று ரோஜர் எப்ப வந்தார்?''

''அவன் வந்ததும் போனதும் முக்கியமில்லை. இன்னைக்குப் பாதி நாள் கடை அடைப்பு. ஒரு மணிக்கு மேலேதான் திறக்கறோம்.''

''ஓ... சரி... நான்...''

''உன் உடம்பு எப்படியிருக்குது? மதியத்துக்கு மேலே வேலை பார்க்க முடியுமா?''

''எனக்கென்ன... ஏதோ விபத்திலே சிக்கி மீண்டவ போல பேசறீங்க?''

அவன் கண்கள் கடுமையாயின. ''உளறாத, மதி. வேலை பார்க்க முடியுமா முடியாதா?''

விருட்டென எழுந்தாள். ''எனக்கென்ன? பனிரெண்டிலிருந்தேகூட வேலை பார்க்கத் தயார். பாவம் டீனா... களைச்சுப்போயிருப்பா...''

''உட்கார் ஒரு நிமிஷம்... இன்னும் உங்கிட்ட பேசவந்ததைப் பேசிடக்கலை.''

அவன் பார்வை தன்னை மேலும் கீழுமாய் தடவுவதை உணர்ந்து பசராமாய் அமர்ந்தாள். ஒற்றையாய்த் தோளில் படர்ந்திருந்த ஜாநிற ஷிபானை இரட்டையாய் மடித்துப் போட்டாள்.



''இதென்ன சில நாட்களாய்ச் சேலையில் இருக்கிறாய்?''

எதிர்பாராத இக்கேள்வியில் சற்றுத் திணறினாள். ''நம்ப தேசத்து உடை... ஆக, போட்டேன்...''

''முதல் பதினைஞ்சு நாட்களாய் ஒழுங்காய் ஜீன்ஸ்ல இருந்தியே?''

இவளுக்குச் சிரிப்பு வந்தது. நம்மூருக்கு நேர்மாறான பேச்சல்லவா இது! சேலை கட்டினால் மகாலட்சுமி, ஜீன்ஸ் போட்டால் பிடாரி என்பதை மாற்றுகிறானே!

''வேலை நேரத்தில் கண்ணியமான உடை அவசியம்.'' காலை நீட்டியவன் இன்னொரு கோப்பை காபியைக் கலந்தபடி பேச, எரிச்சலாய் முறைத்தாள்.

''சேலை வெகு அம்சமான உடை... இதற்கென்ன?''

அவன் பார்வை மேய்ந்த இடங்களை உணர்ந்து சுருங்கினாள். சீக்கிரம் கீழே வந்து டீனாவிற்கு உதவ வேண்டுமென்ற அவசரத்தில் சில நாட்களுக்கு முன்பு போட்ட ரோஜா நிற மெல்லிய சேலையையே உருவிச் சுற்றியிருந்தாள். வழக்கம் போல மேலாக்கைக் கொசுவி 'பின்' செய்ய மறந்திருந்தாள்! ஒற்றையாய்க் கிடந்த மேலாக்கு, மேனியை மறைப்பதை விடுத்து மேலும் கவர்ச்சியாய் எடுத்துக் காட்டியது... வாஸ்தவம்!

தலைமுடியை மேலாக வாரிப் பொருத்தமான 'க்ரன்ச்சி'க்குள் திணித்திருக்க, விடுபட்ட சில இழைகள் அழகாய்த் தொங்கின.

''நீ பெண் என்பதை ரொம்பவே உரக்கச் சொல்கிறது இந்த உடை. ஆக இனி வேலை நேரங்களில் இப்படி உடுத்த வேண்டாம்.''

'குப்'பெனப் பாய்ந்த இரத்தத்தில் மதியின் மூக்கு நுனியும், கன்னங்களும் சிவப்பாய்ப் பளபளத்தன!

''இத்தனை கவர்ச்சியாய் உடுத்திவிட்டு, பின் ஏதேனும் கலாட்டா நேர்ந்தால் பிறகு புலம்புவது முட்டாள்தனம்.''

''கெட்டியான பருத்திச் சேலை உடுத்தலாமில்லையா?'' வெடுக்கெனக் கேட்டாள்.

''அவசியமில்லை. இந்தியா தவிர்த்த பிற நாடுகளில், முழங்காலுக்குக் கீழ், கால்களைக் காட்டுவது ஆபாசம் எனக் கருதுவதில்லை. ஆனால் இடுப்புப் பகுதி தெரிவது அதீதக் கவர்ச்சி என நினைப்பார்கள். அதுவும் உனக்கு அசாத்திய வளைவு! கைப்பிடிக்குள் அடங்கிவிடுமோ என்று ஒரு ஆணைப் பிரமிக்க வைக்கும் சின்ன இடை... யாரும் கை வைக்கும்முன் உடையை மாற்று என்கிறேன்...''

கோபத்தோடு வெட்கமும் ஏற மறுப்புச் சொல்ல வாய் திறந்தவளைக் கை உயர்த்தித் தடுத்தான். ''வேணாம் மதி. வார்த்தைகளை வீணாக்காதே. இது கோரிக்கை அல்ல. என்னோட உத்தரவு!''

விக்கித்து நின்றாள்.

சாச்சாவும் இதே கருத்தை விளையாட்டாய்ச் சொன்னதுண்டு.

''நான் வந்தபிறகு ரோஜருக்கு எழுந்து மது வகைகளைக் கலக்கற வேலையும் மிச்சம். அதுவும் நீ 'ஸாரி' கட்டிய பிறகு உன்னை முறைத்துப் பார்க்கிற வேலைதான் பிரதானம். இந்த ஒரு வாரத்தில் ரெண்டு கிலோ நிச்சயம் கூடியிருப்பான்...''

பெரும் சிரிப்பும் வம்புமாய் ஆண்கள் கும்பல் வந்தாலும் சாச்சா இவளைப் பரிமாற விடுவதில்லை. தானே கொண்டு போவான்.

ஆக இது வேலைக்கான உடை இல்லைதான்! ஒருத்தன் சதா முறைக்க, மற்றவன் இவளைப் பாதுகாக்க முனைகிற தோற்றத்தைத் தருகிறது போலும்... தானே யூகித்திருக்க வேண்டும். இப்போது முதலாளியின் தடை உத்தரவே வந்துவிட்டது.

டீனாவைத் தேடிப் போனாள்.

ரோஜரின் அறைப் பக்கம் பேச்சுக் குரல்களும் 'வாக்வம் க்ளீனரின்' ...னைச் சிரலும் கேட்டன. அப்பக்கமாய்த் திரும்பியவள் எதிரே சாச்சா ...ந்தான். ஒரு துணிப்பை முழுக்க எதையோ அடைத்து இழுத்து ...ந்தான்.



''என்னாச்சு... என்ன வேலை இது?''

''பன்னிப்பயல்... இப்படியுமா ஒரு அசுத்தம்? அறையே நாறுது.''

''யாரு?''

''ரோஜர்தான். அவன் படுக்கையில் நாய்கூடப் படுக்க முடியாது. படுக்கை விரிப்புகளை மாத்தறதே இல்லை போல. சரி, உங்கதை என்ன? எனக்கே மாஹேட்டயிருந்து செம திட்டு கிடைச்சுது.''

குழப்பமாய்ப் பார்த்தாள்.

''என்ன வொரு ஆத்திரம் வந்திருச்சு தெரியுமா? எதேச்சையாத்தான் நீ ரோஜரோட போயிருக்கேன்னேன்.

''போய் எவ்வளவு நேரமாச்சு, எங்கே, எதுக்குன்னு துளைச்சிட்டார் மனுஷன். கோபப் பார்வையில் பாதி பொசுங்கிட்டேன். டீனாதான் வந்து காப்பாத்தினா.

''எங்கிட்ட சொல்லிட்டுப் போனாளே தவிர, மாதி முடிவிற்கு நாங்க பொறுப்பில்லைன்னுட்டா. பேய் மாதிரி கிளம்பிப் போனார். என்னாச்சு?''

''ரோஜர் வரக் காத்திருந்தேன். இவர் அழைச்சு வந்துட்டார்.''

''ரோஜர் ஐயா மூன்றரைக்கே 'வெங்கன்' வந்தாச்சு.''

சாச்சாவின் அறிவிப்பில் வாயடைத்து நின்றாள். நான்கு மணிக்குத் தனக்காகக் காத்திருப்பதாய்ச் சொன்னவன் அரை மணி முன்னதாக இங்கு திரும்பி விட்டானா...?

''நம்ப உணவகத்திற்கு வரும் சில இளவட்டங்களுக்கு உம்மேல சபலம் போல... அவர்களிடம் உன்னை 'இன்டர்லாக்கன்' அழைச்சு வர்றதாய் தெரிவிச்சுட்டான் ரோஜர். எல்லாருமாய்ச் சேர்ந்து உன்னை மடக்கி அங்கேயே தங்க வைச்சிடலாம்ங்கற திட்டம் போல... ஐஞ்சாறு பேராய் உன்னைச் சந்திச்சிருப்பாங்க... சீரழிச்சிருக்கக்கூடும்...''

இரத்தம் வடிந்து பளிங்குப் பதுமை போல வெளுத்திருந்தாள் மதி.

ஏப்ரனைக் கழட்டியபடி வந்த டீனா, ''வா, மதி. ஒரு கப் காபி குடிக்கலாம். பயங்கர வேலை இது!'' என்றாள்.

வழக்கமான புன்னகையைத் தொலைத்திருந்தது டீனாவின் முகம். இவளுக்கு மேலும் விவரங்கள் தெரியும் போல என யூகித்த மதி மவுனமாய்ப் பின் தொடர்ந்தாள்.

''சாச்சா இப்ப சொன்னதெல்லாம் மாகே விசாரிச்சறிந்த தகவல்கள்... உன்னைக் கூட்டிவரப் பேய் வேகத்தில் போனார். ஏதும் கலாட்டா நேரலாம்னுகூட நாலு குண்டர்கள் கூடப் போனார்கள்... இன்னொரு காரிலே உங்களைப் பின் தொடர்ந்திருப்பாங்க...''

பேய்க் கதையை நள்ளிரவில் கேட்கும் சிறுமி போலிருந்தது, மதியின் முகம்!

''உன்னை அழைத்து இங்கே படுக்க வைத்த பிறகு சிங்கம் போல இங்கே காத்திருந்தார். ஏழு மணிக்கு முகமெல்லாம் செத்து வந்தான் ரோஜர். நீ பத்திரமாய் வந்து சேர்ந்தது தெரியாதே... உன்னைக் காணாத கலக்கம்... உன்னை அடைய முடியலைங்கற வெறுப்பு... மாகே அதிகம் பேசலை... சீட்டைக் கிழிச்சுட்டார்.''

''ரோஜருக்கு வேலை போயிடுச்சா?''

''பின்னே? அவன் அறையைப் பார்த்திருக்கணும் நீ. அவன் ...சைப் போலவே நாற்றமான குப்பை! ஒழுக்கங்கெட்டவனை ...லையில் வைக்க முடியுமா? நேற்றிரவு உங்க ரெண்டு பேர் ...லையையும் சேர்த்து மாகே கவனிச்சார்...''

''என்னால் எத்தனை பிரச்சினை... என் முட்டாள்தனம்.''

''இதுதான் அனுபவங்கள். நீ தப்பினது பெரிசு... ரோஜர் போனதும் ...து.''

...ர்த்துப்போய் அமர்ந்திருந்தாள் மதி.



## 12

தான் எத்தகைய ஆபத்திலிருந்து நேற்றுக் காப்பாற்றப் பட்டிருக்கிறோம் என்று முழுக்கப் புரியவே சற்று நேரமானது. இருப்பது வேற்று நாட்டில்... யாரும் தன்னைக் கொன்று வீசிவிட முடியாது என்றாலும், அத்துமீறி வம்பு செய்திருந்தாலும் நொறுங்கியிருப்பாள்... நேற்றிருந்த உடல், மனநிலை அப்படி.

தன் கம்பளிக் கோட்டைத் தலையணையாய்த் தந்து, வயிறார உணவிட்டு, பத்திரமாய்ச் சேர்ப்பித்து, தன் ஓய்விற்காக அத்தனை வேலையையும் இழுத்துப்போட்டுச் செய்து... உடனே மகேந்திரனுக்கு நன்றி தெரிவிக்க மனம் பரபரத்தது.

டீனாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள் - ''மகேந்திரன் வீடு வரை போயிட்டு வந்துடறேன்.''

சேலைக் கட்டுடன் வெளியே வந்திருக்கக் கூடாதோ என்றொரு தயக்கம். 'பரவாயில்லை. மேலே கனத்த கம்பளி கோட் உண்டே!' என்று சமாதானமும் சொல்லித் தேறினாள்.

லாவண்யாவோடு இது மகேந்திரனது என்று அறியாமலேயே வந்து சம்பிரமமாய் நம்மூர் உணவை ருசித்த வீடு.

தயக்கத்துடன் தட்டினாள்.

நினைத்தாற்போலப் பிள்ளைகள் வந்து கதவு திறக்கவில்லை. திறந்தது ஒரு பணிப்பெண்.

''லாவண்யா இருக்காளா?''

''இல்லை. எல்லோரும் 'லூஸர்ன்' போயாச்சு.''

திக்கென்றது.

''மகேந்திரன்?''

''அவர் கிளம்பிட்டு இருக்கார்.''

வீட்டின் அமைதி இயல்பாயில்லை... சற்றுக் கவலையான அமைதி அது.

"வரச்சொல்றேன். உட்காருங்க!" என்றவள், உள்ளே போகத் தவிப்புடன் நின்றாள்.

ஏதோ அசம்பாவிதம் நேர்ந்திருக்கிறது. மகேந்திரனும் கிளம்பிக் கொண்டிருக்கிறான். இனியொரு சந்திப்பு...? சந்தேகம்தான்.

நடு நெஞ்சில் சூடான கத்தி ஊடுருவிய நோவு.

"வா, மதி... உட்காரேன். உன்னைப் பார்க்க வர்றதாயிருந்தேன்." மணிக்கட்டில் கடிகாரம் கட்டியபடி தன் எதிரே வந்து நின்றவனை விழுங்குவது போலப் பார்த்தாள்.

"நா... நான் நன்றி சொல்ல வந்தேன்."

"வாய் வார்த்தையாய் வேணாம். செய்கையில் காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது."

கம்பளிக் கோட்டின் பித்தான்களைத் திருகினாள்.

"முகம் கொஞ்சம் தெளிஞ்சிருக்குது."

"பெரிய இக்கட்டிலிருந்து என்னைக் காப்பாற்றியிருக்கீங்க..."

"ரோஜரை வேலைக்குச் சேர்த்தது வின்ஸி. இனி திருந்துவான்கிற நம்பிக்கையில் செய்த தவறு..."

இவளைக் காலோடு தலை பார்த்தான்.

"மன்னிக்கணும்... சேலையை ஆறு மணிக்கு முன்னே அவிழ்த்திடுவேன்."

விளையாட்டான அதிர்ச்சியுடன் அவன் புருவங்கள் உயர்ந்தன.

"அதாவது ஜீன்சுக்கு மாறிடுவேன்!" பதட்டமாய் விளக்கினாள்.

"தேவையில்லை, மதி. உனக்கு இனி இங்கே வேலையில்லை."

யாரோ 'கப்'பென்று தொண்டையைப் பிடித்தது போல விக்கினாள். "யோ... என்ன சொல்றீங்க...? ரொம்ப நம்பிக்கையோட எங்க



கல்லூரி என்னை இங்கே அனுப்பியிருக்காங்க... என் தப்பு எதுனாலும் மன்னிச்சு..."

கை உயர்த்தினான். "பதறாதேம்மா. இப்ப உன் உதவி எங்களுக்குத் தேவை. நீயும் எங்கூட 'லூஸர்ன்' வர முடியுமா? அதைக் கேட்கத்தான் வர இருந்தேன்..."

"அங்கே எதுக்கு?"

"விடுமுறைக்குப் பாரிஸ் போயிருந்த அண்ணிக்கு அங்கே பித்தப் பையில் கற்கள் இருக்கிறதாய்க் கண்டுபிடிச்சு உடனடியாய் அறுவைச் சிகிச்சை தேவைன்னுட்டாங்க. அண்ணிக்குத் துணையாய்ப் பெரியத்தை, அதாவது அவங்கம்மா போயாச்சு. பிள்ளைகளை இங்கே தனியே விடவேண்டாம்னு வீட்டுக்கு - அது 'லூஸர்ன்'னிலே இருக்குது - அனுப்பறேன். நானும் அவங்களோட போறேன்னாலும் சதா வீட்டிலே, ஊரிலே இருக்கச் சாத்தியமில்லை... மாதுவுடைய வேலையையும் இப்ப சேர்த்துக் கவனிக்கணுமே. நீ பிள்ளைகளுக்குத் துணையாய் இருக்க முடிந்தால் நிம்மதி. சமையலுக்கு ஆள் உண்டு. முடியுமா, மதி?"

"வின்ஸெண்ட் அனுமதி வேணுமே?"

"முதல்ல உன் சம்மதம் - மற்றதை நான் முறைப்படி செய்துக்கறேன்."

மானத்தோடு முழுதாய் உட்கார்ந்திருப்பது இவனால்... மறுக்க முடியுமா?

"சரி!" தலையாட்டினாள்.

"நன்றி, மதி. பெட்டியை அடுக்கிக்கோ. ஒரு மணி நேரத்தில் கிளம்பறோம்."

"அப்படியானால் இங்க... உணவகத்துல எப்படிச் சமாளிப்பாங்க?"

"அதுவும் எம் பொறுப்பு... இப்ப என்ன சாப்பிடறே?"

"ஒண்ணும் வேண்டாம். நன்றி சொல்றதுக்காய் அப்படியே கிளம்பினேன்.

"இப்ப அடுத்த ஒரு மணி நேரத்துல இந்த ஊரைவிட்டே கிளம்ப நேர்ந்திடுச்சு! உன் நாட்கள் வெகு சுவாரஸ்யமாய்ப் போகின்றன... ம்ம்?"

அவன் சிரிப்பின் அழகைத் தன்னில் தேக்கியபடி கிளம்பினாள். வாழ்க்கை எப்படியெல்லாம் மனிதனைச் சுழட்டி அடிக்கிறது!

இனி மகேந்திரனைக் காணவே நேராது என்று மருகியது போக, அவனுடன் அவன் வீட்டிலேயே தங்க ஒரு சந்தர்ப்பம்!

டீனா, சாச்சாவிடம் விவரம் சொன்னபோது நெஞ்சம் வலித்தது. சில வாரங்கள் அருமையாய்ப் பலப்பட்டிருந்த நட்பு.

சின்னப் பரிசுகளோடு விடை பெற்றபோது மூவர் கண்களிலும் நீரின் பளபளப்பு!

இவள் பெட்டிகள் காரில் ஏற்றப்பட்ட நேரம் அந்தப் பெண் உணவகத்தினுள் நுழைந்தாள். அன்று மகேந்திரனை முத்தமிட்ட அதே பெண்.

"நான் லாரா..." சிநேகமாய்க் கை நீட்டினாள்.

"நான் மதி. உங்களை முன்னே பார்த்த ஞாபகம்...?" யோசிப்பது போல நெற்றி சுருக்கினாள் மதி. புதியவளைப் பற்றி மேலும் அறிய மேற்கொண்ட தந்திரம் அது.

"நாம் சந்தித்ததாய் நினைப்பில்லையே. இத்தனை அழகிய இந்தியப் பெண்ணைச் சந்தித்திருந்தால் இதற்குள் அவளை ஓவியம் ஆக்கியிருப்பேன்... ஆக இல்லை."

"நீங்க?" விடாமல் கிளறினாள்.

"நானும் மாகேயும் ஒரே கல்லூரியில் படிச்சோம். ஒரே மாதிரியான ...ர்வங்கள் - நெருக்கமான நட்பு. அதான் அவன் அழைச்சதும் என் ...டையை மூடிட்டு உன் வேலையைப் பார்க்க இங்க வந்திருக்கேன்..."

"ஓ... ரொம்ப நன்றி."

"மாகேக்காக நான் எதையும் செய்வேன், பெண்ணே!" என்ற லாரா ...னே நடந்தாள்.



## 13

காரினுள் நிர்ணயிக்கப்பட்ட வெப்பம் பரவியிருந்தது. ஆகக் கம்பளி சட்டையைக் கழற்றியவள் இருபுறமும் ஓங்கியிருந்த இயற்கையை ரசித்தபடி வந்தாள்.

ஒன்றரை மணி நேரத்தில் 'லூஸர்ன்' வந்து விட்டார்கள்.

அவன் வீட்டு வாசலில் சின்னத் தாமரைப்பூக் கோலம் இருந்தது. நுழைந்ததும் கண்ணில் பட்டது பெரிய ஓவியமாய் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக் காட்சி!

கதவைத் திறந்ததும் லால்குடியின் இசை இனிமையாய்க் கசிந்தது. ஓவியத்தின் மீதிருந்த இலயிப்பில் சற்றே தடுமாறியவளைத் தோள் பற்றி நிலைப்படுத்தியவன், 'நல்வரவு, மதி!' என்று சற்றே கண் மூடிச் சிரித்தான்.

இவள் மூச்சு ஒரு கணம் நின்றது. "அதே போல... இது இரண்டாவது முறை..." முணங்கினாள்.

"எதைப் போல?" கேள்வியுடன் ஊடுருவினான்.

"ஒண்ணுமில்லை... குழந்தைங்க?"

"தாயம்மா..." குரல் தந்தான்.

பப் வைத்த ரவிக்கையும் வித்தியாச சேலைக் கட்டுமாய் ஒரு வயதான பெண்மணி எட்டிப் பார்த்து, "வாருங்கோ!" என்றாள் இயந்திரத்தனமாய்.

"பிள்ளைங்க எங்கே?"

"பின்னால் டெனிகோய்ட் விளையாடிக் கொண்டிருக்குங்க."

பேச்சின் ராகம் அவள் பூர்வீகம் இலங்கை என்றது.

"வா, மதி. போலாம்."

இவர்களைப் பார்த்ததும், 'ட்வல்வ் டென் ப்ளே...'' என்று ரப்ப... வளையத்தை வீசிய லாவண்யா ஓடியே வந்தாள்.

"ஆன்ட்டி... நீங்க வந்ததுல ரொம்ப சந்தோஷம். பாட்டி இருந்தா ரொம்ப குஷியாயிருப்பாங்க... உங்ககிட்ட சொல்லிட்டுக் கிளம்ப முடியலியேன்னு அவங்களுக்கு வருத்தம்."

சரணும் சங்கோஜ சிரிப்புடன் வந்து நின்றான்.

குத்து விளக்கு, தஞ்சை ஓவியம், பதிக் மேசை விரிப்புகள், பித்தளை மயில், செட்டி மாலை என்று வீட்டினுள்ளே இந்திய மணமிருந்தது. அதுபோகச் சமையலின் பருப்பு, பெருங்காய வாசனை வேறு.

"உங்கம்மா எப்படியிருக்காங்க லாவண்யா?"

"நல்லபடி ஆபரேஷன் முடிஞ்சுடும், ஆன்ட்டி. அப்பாவுக்குப் ...ாரிஸில் வேலை. முதல்ல அம்மாவை மட்டும் அழைச்சிட்டுப் ...பாய், மறுவாரம் நாங்களும் போய்ச் சேர்ந்துக்கறதாய் திட்டம்."

"யூரோ - டிஸ்னி பாரிஸிலே இருக்குது. அதுக்கெல்லாம் ...ாயிருக்க வேண்டியது... ம்ப்ச்..." குறைப் பட்டான் சரண்.

"டிஸ்னி உலகம் அங்கேயேதான் இருக்கும். போகத்தான் ...றீங்க!" சமாதானம் சொன்னாள்.

...பிள்ளைகளுடன் சேர்ந்து வீட்டைச் சுற்றிப் பார்த்தபின், தன் ...றையில் பெட்டிகளைப் பிரித்து அடுக்கினாள்.

...பனுக்கு அவள் பொரித்த வெங்காயப் பஜ்ஜியை ஒரு இணுக்கு ...மல் தின்று தீர்த்தனர்.

...ன்ஸ், கம்பளிச் சட்டைகளுடன் 'டெனிகாய்ட்' ஆட்டத்தைத் ...ர்ந்தனர். குளிர் காற்றில் வியர்க்காமல் உற்சாகமாய் ஆட ...து.

...ன்னையும் சேர்த்துக்கோங்க... ஆண்களுக்கு எதிராய்ப் ...ள் - என்ன?" என்று சேர்ந்த மகேந்திரன் கண்கள் தன் ...யே மொய்ப்பதை உணர்ந்து தடுமாறினாள்.

...ன ஆன்ட்டி... இதுவரை பாய்ஞ்சீங்க. இப்ப பம்முறீங்க?"



"என்னைக் கண்டதும் புலி முயலாயிடிச்சு!" சீண்டினான் மகேந்திரன்.

லாவண்யாவின் உடைகளில் பிய்ந்திருந்த பித்தான்களை மறுநாள் தைத்தவள் அடிப்படைத் தையல் முறைகளைச் சிறுமிக்குக் கற்றுத் தந்தாள்.

"ஆன்ட்டி... என்ன சதா அக்காவோடயே இருக்கீங்க?" உதடு பிதுக்கிய சரணை இழுத்து அணைத்தாள்.

"சரி, நாம என்ன செய்யலாம்? போஸ்டர் வண்ணங்கள் இருக்குது. ஏதேனும் வரைஞ்சு வண்ணமடிக்கலாமா?"

பிள்ளைகள் சிரித்தனர்.

"என்ன, ஓவியம் பெண்கள் சமாச்சாரம்னு நினைக்கறியா?"

சிரிப்பு கூடியது.

"நாங்க அப்படி நினைக்கவே முடியாதே, ஆன்ட்டி!"

"புரியலை."

"இந்த வீடு முழுக்க ஆண் பிள்ளை தீட்டிய ஓவியங்கள்தானே!"

"யாரு?"

"தெரியாதா... அத்தனையும் சித்தப்பா வரைஞ்சது!"

மலைத்துப் போனாள்.

இத்தனை கலையுணர்வும் திறமையும் கலந்திருக்கிறதா அவனுக்குள்!

"சித்தப்பா அறை முழுக்க பெயின்ட் வாசம்... கேன்வாஸும், பிரஷும் இறைஞ்சு கிடக்கும். யாரும் உள்ளேயே போகமாட்டோம்."

வியாபாரமெல்லாம் கவனித்தது போக, வரைய நேரம் ஒழியுதா அவனுக்கு?

"நேரத்தை நம்ப வசத்திலே வைச்சிருக்கணும். நாம அது பிடியிலே சிக்கிடக் கூடாதும்பாங்க சித்தப்பா."

கண்களை உருட்டினாள் மதி. ''ம்ம்... சாதனையாளர்களின் கருத்துதான். அவர் ஓவியங்களைப் பிறகு நான் பார்க்க முடியுமா சார்?''

''சட்டமிடாம நிறையச் சுருண்டு கிடக்குது. பார்க்கலாமே.''

ஆக தனது ஓவியத்தைச் சட்டமிடத்தான் மகேந்திரனும் சென்னையின் அச்சின்னக் கடைக்கு வந்திருக்கிறான்.

மேல் வேலைகளை மட்டுமே செய்யும் தாயம்மா, மாலை போய்விட, மதிவதனா வெகு இயல்பாக அத்தனை பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாள்.

அவன் வீட்டை நிர்வகிப்பது சற்றுச் சிரமமான வித்தையாய் இருந்தது. மனதைச் சலனப்படுத்துகிறவனோடு ஒரே வீட்டில் இருந்தும் முகத்தில் சஞ்சலமே காட்டாமல் வளையவரும் வித்தை.

இரண்டு நாட்கள் சுலபமாய் நகர்ந்தன. மறுநாள் அதிகாலை லாவண்யாவின் அறைக்குப் போனவள் அங்கு மகேந்திரனை எதிர்பார்க்கவில்லை... அவசரமாய்ப் பின்னடைந்தாள்.

''என்ன ஆன்ட்டி?''

''ஷாம்பூ தீர்ந்திடுச்சு... உங்கிட்டே இருக்குமான்னு...''

''தோ தரேனே...''

மிக மெல்லியதான தன் இரவு உடையைத் தன்னைச் சுற்றி இழுத்துப் பிடித்தவள் அவஸ்தையில் நெளிந்தாள். அது புரிந்தவன் போல இவள்புறம் திரும்பாமலேயே வெளியேறினான் அவன்.

வீட்டு வாசலில் பெரிய தாமரைக் கோலம், பிள்ளைகளுடன் கணினியில் வலம் வருவது, பராமரிப்பு, சுவையான சமையல் என்று சுவாரஸ்யமாய்க் கழிந்தன நாட்கள்.

அன்று அவள் வைத்த வத்தல் குழம்பிற்கு ஏகப் பாராட்டு.

''சிக்கனும் சாலட்டும் சமைக்கலாம்னு இருந்தேன்!'' சலித்தாள் தாயம்மா.



''ஐயோ... தினம் அதேதானே... போதும் ஆயா!'' அலறின குழந்தைகள்!

''இதெல்லாம் ஏழைங்க சாப்பாடல்லோ?''

''எளிய ருசி எல்லா நாக்குக்கும் ஏற்கும் தாயம்மா!'' என்றபடி பரிமாறினாள் மதி.

அன்று மகேந்திரனும் சாப்பாட்டிற்கு வீடு வந்து ரசித்து உண்டான். ''அடடே... வித்தியாசமான ருசி. நல்ல கைமணம் மதி.''

'இதோ இந்த நாள் கடைசி வரை உனக்கு மறக்காது, பெண்ணே! உன் கைச்சமையலை இவன் சாப்பிட்டுப் பாராட்டும் இந்த நிமிடம்... இந்த அபூர்வ நேரத்தை மனசிலே பதிய வை!' தனக்குத் தானே உத்தரவிட்டாள் மதி.

அடிக்கடி பாரிஸிலிருந்து போன் வந்தது. பெரியம்மா இவளிடம் அன்பாகப் பேசினாள். குழந்தைகளின் தாயாரான மாலாவும் பிரியத்துடன் நன்றி கூறினாள்.

''நீ வந்துருவேன்கிற தைரியத்தில்தான், போட்டது போட்டபடி மாலாவைக் கவனிக்கக் கிளம்பிட்டேம்மா மதி; இங்கே இவளுக்குத் தேவலை. நல்லா இருக்கீங்கல்ல?''

சென்னைக்கும் அடிக்கடி போன் செய்யச் சொன்னான் மகேந்திரன். வின்ஸியும் போன் மூலம் தினம் தொடர்பு கொண்டிருந்தார். ''என்ன மாதி... வீட்டு வேலை தந்துட்டாங்களேன்னு யோசிக்கிறியா?''

''இல்லை வின்ஸி. இதுவும் என் கடமை, விருந்தோம்பல் பயிற்சினு சந்தோஷமாத்தான் செய்றேன்.''

''நல்லது. மஹே அண்ணி வீடு திரும்பியதும் நீ தலைநகரின் ஓட்டல்ல வேலை பார்க்கலாம்... பிரமாதமான அனுபவமாயிருக்கும்...''

தற்போது நடப்பதும் வாழ்க்கை முழுதும் மறக்கக்கூடாத அனுபவம்! வரும் நாட்களிலும் அசை போட்டு ஆனந்திக்கக்கூடும்

அனுபவம். மகேந்திரனிடம் ஏற்பட்டது வெறும் ஈர்ப்பல்ல... அதையும் மீறிய வலிய உணர்வு என்பது புரிந்த நாட்கள், வளர்பிறையாய்ப் பெருகிய கனவு, இவனைப் பார்த்து, மேலும் அறிந்த பிறகு முழுமையாய் ஆக்கிரமிக்கின்றனவோ?

அவன் ஆற்றல், ஆண்மை, பண்பு, உதவும் மனம், கலைத் திறமை எல்லாம் தெரிந்த பிறகு... இவனில்லாத ஒரு வாழ்வு வாழும் திராணி உண்டா? திகிலுண்டது போல நடுங்கியது மனம்.

ஆனால் இத்தனை செல்வமும், மேற்கத்திய நாகரிகமுமானவன் தன்னை உதவி கோரி வரலாமே தவிர, வாழ்வில் பங்கு தர அழைப்பானா... நிச்சயம் இல்லை.

நடுங்கிய மனதை நிலைப்படுத்த முயன்றாள்.

## 14

"ஆன்ட்டி! உங்களுக்குப் பனியைத் தொட்டு அதிலே உருளணுமா?"

"என்ன சரண், திடீர்னு?"

"ஸ்விஸ்ல எடுத்த தமிழ்ப் படத்தில் எல்லாம் அப்படி ரெண்டு சீன் வருமில்ல?"

"ம்..." புன்னகைத்தாள்.

"நீங்க அதெல்லாம் செஞ்சு பார்க்க வேணாம்?"

"படத்தில் அவங்க ஆடற போதே எனக்கு நடுங்கும்ப்பா... வேணாம்."

"அதிலேயும் ஆன்ட்டி, ஆடற ஹீரோ கம்பளியிலே ஸூட் போட்டிருப்பார். நாயகிக்கு பாவம்... பாதி உடம்பு தெரியற மாதிரி உடுத்தி விட்டுருவாங்க... அதோட பனியிலே ஓடி உருளணும்."

"பாவந்தான்!" கற்பனைக் குளிரிலேயே சிலிர்த்தாள் மதி.



"நாமு முழுசாய் உடுத்திட்டுப் போலாம், ஆன்ட்டி."

"எங்கடா வாலு போகணும்?" செல்ல அதட்டலுடன் நுழைந்தான் மகேந்திரன்.

"'டிட்லிஸ்' மலை உச்சிக்குப் போலாம், சித்தப்பா."

"அடேய்... முழுசாய் என் அரை நாளைத் திருடப் பார்க்கிறியா?"

"பாரீஸ்தான் போகலை. இங்கேயிருக்கும் மலைக்கு ஒரு பிக்னிக் போகலாம்ல?"

"மூஞ்சி தூக்காதடா... பார்க்கச் சகிக்கலை. போலாம். கிளம்புங்க."

"இப்பவேவா?"

"உடனே கிளம்பினா நாலு மணி நேரத்தில் திரும்பிடலாம்!" என்ற மகேந்திரன் குழந்தைகள் உடை மாற்றுவதற்குள் சில தொலைபேசித் தொடர்பில் வேலையைத் தள்ளிப்போட்டான்.

"சான்ட்விச் செய்யட்டுமா, லாவண்யா? எடுத்துட்டுப் போங்க."

"போங்களா? நீங்களும் வரணும் ஆன்ட்டி. அந்த மலை உச்சியில் சின்ன உணவகம் உண்டு. சுடச்சுட உருளை வறுவலும் கொதிக்கிற டீயும் சுத்திலும் பனியிருக்கச் சாப்பிட, தனி ருசி!"

"நான் வரலைம்மா."

"அப்பன்னா யாரும் போக வேணாம்!" மறுபடி முறுக்கிக் கொண்டான் சரண். "எல்லாருமாய்ச் சேர்ந்து போனாத்தான் குஷி!"

"எனக்கு அசதியாத் தோணுது..."

"போறப்ப காரிலே ஒரு தூக்கம் போடுங்க. இல்ல 'கேபிள் காரிலே' கூட தூங்கலாம்."

"கேபிள்ல பத்தாயிரம் அடி உயரத்தில் போகும்போது மயக்கந்தான் வரும்."

"ஐயையோ... எனக்கு உயரமெல்லாம் சேராது, சரண். தலை சுத்தும்."

"இதென்ன ராட்டினமா? அலுங்காம மலை உச்சிக்கு ஏத்திடு வாங்க. கடைசி இரண்டாயிரம் அடி 'ரோட்டோ'ன்ற கூண்டுல ஏறிப் போகனும். அது பத்து நிமிஷத்தில் மெதுவா ஒரு சுத்து சுத்திடும்."

"ஆக நாம தலையைத் திருப்பாம அத்தனை மலைகளையும் பார்த்துடலாம். 'ஜுங்க்ப்ரு' மலைதான் ஆல்ப்ஸிலே உயரமான சிகரம்... எல்லாம் பனி மூடி வெள்ளியாய்த் தெரியும். கீழே தரை தெரியாத பாதாளம்... அதிலே மின்கம்பியிலே நம்ப பயணம்... ஜோரான அனுபவம்."

'எனக்கு இதெல்லாம் ஒத்து வராது!' என மதி எத்தனையோ கெஞ்சியும் பிள்ளைகள் அவளை விடவில்லை.

மகேந்திரன் உதவியோடு, துள்ளும் மீனைக் கூடையில் எடுத்துப் போடுவது போல, காரில் இவளையும் ஏற்றிக் கிளம்பி விட்டார்கள் - கம்பளிக் குல்லாய், கையுறை என்று இவளுக்குமாய் எல்லாம் எடுத்துக்கொண்டு.

இவள் அரற்றல் நிற்கவில்லை... "பத்தாயிரம் அடியா? அத்தனையும் கம்பி வழியா மேலேறவா?"

"குரங்கு மாதிரி கம்பியில தொத்தியா ஏறப்போறோம், ஆன்ட்டி? நாலு பேர் உட்கார்ற மாதிரி சின்ன கண்ணாடி காருக்குள்ளே ஏறினா அது வழுக்கிட்டு மேலேறும்..."

"வழுக்கினா கீழேதான போவோம்?"

"அது திரும்பும்போது..." சிரித்தான் மகேந்திரன்.

ஒரு வாரமாய் வீட்டினுள் அடைந்தே கிடந்தவர்களுக்கு இது அவசியமான மாற்றம்தான் என நினைத்து வாய் மூடினாள் மதி.

அகலச் சாலையில் வழுக்கலாய் விரைந்தது கார். சுற்றிலுமிருந்த சுத்தம், அழகில் இவள் லயித்த நேரம் அந்த விபத்து நேர்ந்தது.

ஐரோப்பாவில் ஒரே சாலையில் எதிரும் புதிருமாய் வாகனங்கள் பயணிப்பதில்லை. 'என் வழி தனி வழி' என்பதாய்ப் போகவும் வரவும் தனித்தனிப் பாதைகள்.



அப்படியிருக்க நடுவேயிருந்த சிறு புல் தடுக்கையும் மீறி எப்படி அந்த லாரி மறுபுறம் வந்தது என்பது புரியவில்லை. இவர்களுக்கு முன்னே சென்ற ஒரு டூரிஸ்ட் பஸ்ஸை லாரி மோத, பஸ் தடுமாறி இவர்கள் புறமாய்ச் சரிய, சற்றுக் குலுக்கித் தடம் புரண்டது கார்.

'கடவுளே!' வாய் பொத்தி அலறலை அடக்கினாள், மதி.

பிள்ளைகள் வீறிட்டனர் - அத்தனையும் கண் சிமிட்டும் நேரத்துள் நிகழ்ந்து விட்டது.

அதிகப் போக்குவரத்தில்லாததால் இவர்கள் தடுமாறி வேறு யாரையும் போய்ச் சாய்க்கவில்லை! மகேந்திரன் சமாளித்துக் காரை நிறுத்த, பஸ்ஸிலிருந்து பலவிதமான அலறல்கள் கேட்டன.

ஒரு இனிய கனவு நொடியில் பயங்கரமாய் மாறிவிட்ட திகைப்பில் மதிக்கு ஏதும் ஓடவில்லை. பிள்ளைகளை ஆசுவாசப்படுத்தியவள், சற்றுப் பொறுத்தே தன் விலாப்புறம் வலிப்பதை உணர்ந்தாள். 'சீட் பெல்ட்' இவள் விழாமல் தாங்கியிருந்தது. ஆனாலும் உடல் அதிர்ச்சியில் நடுங்கிக் கொண்டிருந்தது. வாய் உலர்ந்து கை கால்கள் இரும்பாய்க் கனத்தன. கண்கள் இருட்டி வர, மெள்ள மயக்கமானாள் மதி.

எழுந்தபோது சுற்றிலும் இருட்டு. ஏதோ ஒரு அந்நிய மணம்... பரிச்சயமில்லாத இடத்தில் இருப்பதை உணர்த்த, பதறி எழுந்தாள். உடலின் சோம்பலான கனம். கண் எதிரே நேர்ந்த விபத்து நினைவிற்கு வந்தது.

பிள்ளைகள் எங்கே... மகேந்திரன்?

சில நொடிகள் இவளுக்குப் பழகிய பார்வைக்கு நிழலோட்டமாய் அறை புலனானது. அது சின்னஞ் சிறு அறை. துழாவி விளக்கை உயிர்ப்பித்தாள். கண்கள் கூசின.

கதவைப் போய்த் திறந்தவள் அதிர்ச்சியில் ஏறக்குறைய அலறிவிட்டாள். கூனிட்ட முதுகும், கூர்மூக்குமாய் வெளியே நின்ற கிழவியின் தோற்றம் அப்படி!

அவளுக்குச் சுத்தமாய் ஆங்கிலம் தெரியவில்லை. கைகளை வீசி, ஆட்டி 'மான்ஷுயர்' என்றாள். மகேந்திரனைக் குறிப்பிடுகிறாள் போலும்.

வளைந்த மூக்கோடு நடமாடிய கிழவி இவளை ஒரு மேசை முன் உட்கார வைத்தாள்.

வேக வைத்த உருளைக் கிழங்கு மசியல், பச்சைத் தக்காளி, காரட்டுடன் ஆறிய கஞ்சி இருந்தது.

"பிள்ளைகள் எங்கே?" அபிநயத்துடன் கேட்டாள்.

'மான்ஷுயர்' என ஆரம்பித்து ஏதோ பேச, பிள்ளைகள் மகேந்திரனுடன் போயிருக்கலாம் என யூகித்தவள் சாப்பிடலானாள்.

கடிகாரம் மணி பத்து என்றது.

இரவு பத்தா? பன்னிரண்டு மணி நேர உறக்கமா... அல்லது அது மயக்கமா?"

இனித் தூக்கம் வராது. இந்த முதியவளிடமிருந்து பேசி விஷயங்களைக் கிரகிக்கவும் வழியில்லை.

மற்ற மூவரும் என்ன ஆனார்கள், தான் இங்கு தனியே இருப்பது ஏன் என்பது புரியாமல் கிடப்பது இம்சையாய் இருந்தது.

முதியவள் ஏதோ முணுமுணுத்தபடி மேசையை ஒதுங்க வைக்க, மதியும் உதவினாள். வாசிக்கப் புத்தகங்களும் இல்லாததால் தன் அறையின் ஜன்னலோரமாய் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தாள்.

சிறு ஜன்னலின் வழியே தொலைவில் தெரிந்த வெளிச்சப் புள்ளிகள் பெரும் அழகாயிருந்தன. நகரை விட்டுத் தள்ளி உள்ளது போலும் இவ்வீடு. ஜன்னலைத் திறக்க, குளிர் காற்று குழந்தை போலப் பாய்ந்து வந்தது. இரவு, குளிர், காற்று மூன்றும் தனித்தனியாய் யாரோ பிசைந்து பதார்த்தமாக்கினது போல ருசியாகியிருந்தது.

கதவு தட்டப்பட்டது.



உள்ளே வந்த முதியவள் ஜன்னலை மூட ஜாடை காட்டினாள். மூடியதும் ஒரு கிண்ணத்தில் எடுத்து வந்திருந்த கங்கில் ஏதோ பொடியைத் தூவினாள். இங்கும் சாம்பிராணியா என்று வியந்த மதிக்குப் புகைந்து கிளம்பிய வாசனை முற்றிலும் வேறு என்பதும் புரிந்தது. நறுமணம் இல்லாத காட்டமான புகை. மூலிகை மணம் போலொரு மணம் அறையை வியாபித்தது.

"என்ன... என்ன இது?" விரல்களாலும் கேள்வி கேட்டாள்.

கண்களை மூடித் தூங்குவது போலத் தானும் அபிநயம் செய்தாள் கிழவி.

தூங்குவதற்கான புகை மணமா இது? எழும்போது சன்னமாய் அறையில் பரவியிருந்தது இதே நெடிதானே? இதில்தான் பாதி நாள் மயங்கியிருந்தாளோ...?

மறுபடி மயக்கமான நீண்ட தூக்கம் அவசியமில்லை. மீண்டும் ஜன்னலைத் திறக்க முயற்சித்தாள் மதி.

"நோ... நோ..." கிழவி நடுங்குவது போலப் பாவனை காட்டினாள். குளிருமாம்... புகையில் மூச்சடைத்துச் செத்தால் தேவலையோ?

வாழ்க்கை தன்னை வெகுவாய்ப் பந்தாடுவது போலத் தோன்றியது. படுத்து முடங்கினாள்... நெடி அவளை ஊடுருவி வேறேதோ ஒரு மாய லோகத்திற்கு இவளைத் தூக்கிப்போனது... உடல் லேசாகிப் பறந்த நேரம் அவன் குரல் கேட்டது - மகேந்திரன் வந்தாயிற்று.

எழ முயன்றாள்.

புலன்களைத் தட்டி நிமிர்த்தினாள்.

ஆனால் விழிகள் சொக்கின... உடம்பு கனத்து ஆடியது.

அறைக்குள் நுழைந்து கதவை மூடினான். தன் கம்பளிக் கோட்டைக் கழட்டுவதும் மங்கலான காட்சியாய்த் தெரிந்தது. சட்டையின் பித்தான்களை ஒவ்வொன்றாய் ஏன் கழற்றுகிறான்...?

புத்தி விபரீதமாய்ப் பாய்ந்தது. தன்னை மயங்க வைத்துக் கெடுப்பதற்கான முயற்சியா?

சுயநினைவோடு இருந்தால் ஓடி விடுவாள் என்பதற்காய் இப்படி ஒரு யுக்தியா?

புதறியது... புலன்கள் கூர்மையாக வேண்டும். அறையின் ஓரமாய் இருந்த 'ஸிங்க்'கில் போய் முகம் கழுவினாள். குளிர் நீர் விழிப்பூட்டியது.

"படு மதி... ஏனிப்போ முகம் கழுவறே...? தூங்கு."

"இல்லை... வெளியே போறேன்."

விதி இருவரையும் ஒரே நாடு, ஒரே ஊர், ஒரே வீடு என்பது போய் ஒரே அறை வரை கொண்டு வந்து விட்டதா என்ன...!

இந்தக் கட்டிலையும் இவனோடு பகிர்ந்து கொள்வதில்... இல்லை... எனக்கு உடன்பாடில்லை. இவன் பின்னே சுற்றும் நூறு பெண்களில் ஒருத்தியாய் இருக்க விருப்பமில்லை.

இவன் தரும் பரிசுகளில் மயங்கி முத்தங்களை ஊதும் சராசரிப் பெண்ணில்லை, மதிவதனா! இவன் அழகிற்கு, பணத்திற்கு அடிமைப்பட்டு அவன் காலடியைப் பணியப்போகும் பதுமை இல்லை.

"வெளியே போங்க..."

அச்சிறு அறையில் அவள் குரல் பெரிதாகக் கேட்டது.

"எப்படியிருக்கே, மதி... என்னாச்சு?"

"ஒன்னுமாகலை... நீங்க முதல்ல வெளியே போங்க..."

அவன் பேசவில்லை.

மங்கிய விளக்கொளியில் அவன் மிகக் களைத்திருப்பது தெரிந்தது. கண்கள் கருவளையமிட்டு உதடுகள் இறுகியிருந்தன.

"முகம் கழுவி... கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டுப் போயிடறேன், மதி..."



"வெளியே உட்காருங்க, படுங்க, என்ன வேணுமோ செய்துக்கலாம்."

அவன் முகம் மேலும் சோர்ந்தது.

"ஆக இன்னும் உன் சந்தேகம் மாறலை..."

"நீங்க அதே ஆள்தானே. சந்தேகம் மட்டும் எப்படித் தீரும்?"

"நான் உன்னிடம் தவறாய் நடந்ததில்லை, மதி. தப்பாய்ப் பார்த்ததுமில்லை."

"அது என் முன்னெச்சரிக்கையால்... உங்க பண்பால் இல்லை!" சீறினாள்.

கதவு திறந்து வெளியேறினான்.

வெகு நேரம் அப்படியே நின்றவள் படுக்கையில் சரிந்து விசும்பினாள்.

ஏனிப்படிக் கத்தினேன்? குற்றம் சாட்டினேன்?

அவளுக்குப் புரியவில்லை...

புகை மேலும் குழப்பியது. சிந்தனை இழைகள் கோர்வை அற்றுத் தாறுமாறாய்ப் பொங்கின... பிரிந்தன... அறுந்தன.

## 15

'இந்த டாக்ஸியில் ஏறி வீடு வந்து சேரவும்.'

- மகேந்திரன்.

வந்த இளைஞன் புன்சிரிப்புடன் நீட்டிய சீட்டை வாசித்தவள் முதியவளிடம் நன்றி தெரிவித்துவிட்டு டாக்ஸி ஏறினாள்.

'கார் கண்ணாடியைச் சற்று இறக்கக் கூடுமா?"

ஓட்டுனரின் அனுமதி கோரினாள்.

இங்குள்ள அத்தனை வாகனங்களின் உள்ளேயும் பயணிகளின் தேவைக்கேற்ப குளிர் அல்லது அளவான சீதோஷ்ணத்தை உருவாக்கும் வகையில் உள்ளவை. ஆக கார் கண்ணாடிகள் சதா ஏற்றப்பட்டே இருக்கும்.

விநோதமான பார்வையுடன் சம்மதித்தான் இளைஞன்.

கண்ணாடி விலகியதும் புதுக்காற்று உள்ளே பாய்ந்து குதித்தது. குதூகலமாய் இவள் முகத்தை வருடியது.

இந்தச் சுத்தமான காற்று மதிக்குத் தேவையாயிருந்தது. மூலிகை தேடி பரவிய தன் சுவாசப்பைகளைச் சுத்தமாக்க, தவித்த புத்திக்குத் தெளிவு தர அவசியப்பட்டது.

ஆழச் சுவாசித்தாள்.

இனி மகேந்திரனை எப்படி எதிர்நோக்குவது?

அத்தனை கீழ்த்தரமாய் ஒதுக்கும்படி அவன் தவறேதும் செய்தவனா?

பயணம் முடியும்வரை குழம்பினாள்.

வீட்டின் கதவைத் திறந்தது பெரியம்மாதான். ஏனோ அவரைப் பார்த்ததும் அழுகை முட்டியது. அடக்கியபடி புன்னகைத்தாள்.

''வாம்மா.. வீட்டுல ஒன்னு மாத்தி ஒன்னா ஏனிப்படிச் சோதனையோ தெரியலை...! ஒரே நாளில் இப்படிச் சக்கையாத் தெரியறே...?''

''ஒன்னுமில்லம்மா... பிள்ளைங்க?''

''அவங்களை மகேந்திரன் உடனே இங்கே அனுப்பி வெச்சுட்டான். நீ மயக்கமாயிட்டதால பக்கத்திலே ஒரு வீட்டில் வைச்சு டாக்டரை வரவழைச்சுப் பார்த்திருக்கான். வெறும் அதிர்ச்சிதான்னு சொல்ல, போலீஸ் விசாரணைக்கு உடனே போயிட்டான்.''

''போலீஸா... நாம எந்தத் தப்பும் செய்யலியே?''



''இல்லை. ஆனா உங்க கண்ணெதிரேதானம்மா விபத்து நடந்தது! சாட்சி சொல்லணுமில்லையா?''

''யாருக்கும்...?''

''கடவுள் கிருபையில் எந்த உயிரும் சேதமாகலை. ஆனா நிறையப் பேருக்கு அடிபட்டிருக்காம். சுற்றுலாப் பயணிங்க... அதிலே ரெண்டு குழந்தைங்க வேற...''

''பாவமே...''

''அவங்களை ஆஸ்பத்திரியிலே சேர்த்து, கூடவே தைரியம் சொல்லப் போயிட்டான், மகேந்தர். அவனுக்கும் பொட்டுத் தூக்கமில்லை.''

''ம்ம்...'' குற்ற உணர்வுடன் குனிந்தாள். ''நீங்க எப்பம்மா ஊரிலேருந்து வந்தீங்க?''

''நேத்து இராத்திரிதான்... மகேந்திரன் விவரம் சொன்னதும் மாலாவுக்கு, அதான் எம் மகளுக்கு, இருப்புக் கொள்ளலை. கிளம்பிட்டோம்.''

''அவங்க...?''

''பிள்ளைகளோட இருக்கா, வா...''

அறிமுகப்படுத்தப்பட்டவளை ஆச்சரியமாய்ப் பார்த்தாள் மதி.

லாவண்யாவின் அக்கா போலத் தெரிந்தாள் மாலா!

விரிந்த கூந்தலும், நைட்டியுமாய்ச் சிறு பெண் போலிருந்தவ மதியை உற்சாகமாய் வரவேற்றாள்.

''குழந்தைங்களுக்குச் சதா உன் பேச்சுதான், மதி. உனக்கு நாங் ரொம்பக் கடமைப்பட்டிருக்கோம்...''

''அது ஒன்னுமேயில்லை... உங்க உடம்பு இப்ப...''

''அது எப்பவும் போல நல்லாவே இருக்குது...''

''உன் ஆபரேஷன் பற்றி கேட்கறா, மாலா...''

''அது... அது... நடந்து ஒரு வாரமாச்சே... இப்ப நல்லாயிருக்கேன்.''

பிள்ளைகள் இவளது கைகளை ஆளுக்கொன்றாய்ப் பிடித்தபடி நின்றனர்.

''வாம்மா மதி... இட்லி சூடாய் இருக்குது. வந்து சாப்பிடு முதல்ல...''

இருவரும் இவளை விடாது பின் தொடர்ந்தனர்.

''உங்களுக்குத் தலையில் அடிபட்டிருச்சா, ஆன்ட்டி? ஏன் மயக்கமாயிட்டீங்க?''

லாவண்யா இவளது நெற்றியை மிருதுவாய் நீவியபடி கேட்டாள்.

''அதிர்ச்சிதான்... வேறே ஏதுமில்லை.''

''என்னால்தான் எல்லாம்...''

''எது சரண்?''

''நான்தானே பிக்னிக் போகணும்னேன்...''

''மாறுதலாய் இருக்குமேன்னு சொன்னே... நடந்தது அசம்பாவிதம்... விபத்து... நாம யாரும் அதுக்குக் காரணமில்லை.''

''சித்தப்பா பதறிட்டார் - எங்களை ஒரு நண்பரோட இங்கே அனுப்பிட்டார். விவரமேதும் தெரியாமல் நாங்களும் பயந்துட்டோம்.''

''இப்பதான் எல்லாம் சரியாயிடுச்சே...''

''உங்களுக்கொரு விஷயம் தெரியுமா? லாரியை ஓட்டி வந்து பஸ்ஸில் மோதின ஆளை உங்களுக்கும் தெரியும்னார் சித்தப்பா.''

புரியாமல் விழித்தாள்.

''உங்க ஊரிலே எனக்குத் தெரிஞ்சவரா?''

''ரோஜர் உங்களோட வேலை பார்த்தாராமே?''

தான் ரோஜருடன் செய்த பயணம் நினைவிற்கு வந்தது. எத்தனை பயங்கர வேகம்... அது ஆபத்தாகவும் முடிந்திருக்கிறது. அன்று தன்



உயிர் தப்பியது ஆச்சரியம்... இன்று இத்தனை பேரையும் ஆபத்திற்கு உள்ளாக்கியிருக்கிறான்... குலை பதறியது.

''நல்ல வேளை உங்க சித்தப்பா அன்னைக்கே ரோஜரை வேலையை விட்டு அனுப்பிட்டார்... அவனுக்கு இனி ஓட்ட லைசென்ஸ் தராமப்போனா நல்லது...''

''அவருக்கு இடதுகால்ல பலத்த அடிபட்டிருச்சாம். காலு தப்புறதே சந்தேகம்... ஆகக் கார் ஓட்டறதும் சந்தேகந்தான்.''

''இப்ப உங்க சித்தப்பா எங்கே, லாவண்யா?''

''இன்னும் வேண்டிய உதவிகளைச் செய்துட்டு ஆஸ்பத்திரிக்கும் வேலைக்குமாய் அலைஞ்சிட்டே இருக்காங்க. ஆனா பயணிகள் அத்தனை பேரும் சித்தப்பாவுக்கு நன்றி சொல்லி ஒரு 'கார்ட்' அனுப்பியிருக்காங்க - இதோ.''

வண்ண மலர்க்கொத்துடன் இணைந்த வாழ்த்து அட்டை தெரிந்தது.

தனக்காகவும் அன்று இப்படித்தானே ஓடிவந்தான்...? புது ஊரில் கண்ணீருடன் அமர்ந்திருந்தவளை ஆபத்பாந்தவனாய் மீட்டுச் சென்றான்...?

அவனிடம் நேற்றிரவு ஏன் அத்தனை மூர்க்கமாய்ப் பேசினாள்?

வலியைக் குறைக்க அல்லது உறங்கச் செய்ய அம்மூதாட் மூட்டிய புகை புலன்களை மழுங்கச் செய்திருந்ததாலா?

அதோடு உடல் மந்தமான பொழுதில் தன் பெண்மைக்கு ஏ ஆபத்து நேர்ந்து விடக்கூடாது என்கிற இயற்கையான எச்சரிக் உணர்வா?

ஏதோ ஒன்று... அடிபட்ட வேங்கையாய் விலகிவிட்டான்.

இன்னும் வீடு வந்து சேர்ந்ததாய்த் தெரியவில்லை.

நேற்றிரவே சோர்ந்து தொய்ந்திருந்தவனை, மன நோகடித்துத் துரத்திவிட்டாள்.

''மதி... மதிம்மா...''

அழைத்த பெரியம்மாவின் பதட்டம் இவள் கலக்கத்தைப் பெருக்கியது.

"தோ... என்னம்மா?"

முதியவளின் முகபாவனை 'கெட்ட சேதி' என்றது.

"என்ன... அவருக்கு என்னாச்சு...?" குரல் கரகரப்பாய்க் கேட்டது.

"சென்னையிலிருந்து பேக்ஸ் வந்திருக்கும்மா.."

ஒரு கணம் நெஞ்சு ஆசுவாசமானது. ஒரே கணம்தான். அடுத்து ஊரில் யாருக்கு என்ன என்ற பதட்டம் ஏறிக் குதித்தது.

"உன் தாத்தாவுக்கு ரொம்ப முடியலியாம். மிஷன் ஹாஸ்பிட்டல்ல சேர்த்திருக்காங்களாம்... உங்க அத்தை உன்னை உடனே வரச் சொல்லியிருக்காங்க."

கடவுளே... என்னவாயிற்று அருமைத் தாத்தாவிற்கு! இங்கு வந்த சில நாட்களில் மகேந்திரன் சொல்லி அடிக்கடி சென்னைக்குத் தொடர்பு கொண்டாளே... இருவரும் உற்சாகமாகத்தானே பேசினார்கள்? உடல் நலக்குறைவு என்பதற்கான சிறு குறிப்பும் இல்லையே!

"என்னன்னு ஏதும்?"

"இதய நோயாம். உன் பெட்டியை மாலா அடுக்கிட்டு இருக்கா..."

"நா... நான் இப்படி நினைச்சது போல போக முடியாதேம்மா. மூன்று மாச ஒப்பந்தம் முடிஞ்சாதானே கிளம்ப முடியும்... அவங்கதான் டிக்கெட் எடுத்துத் தரணும்..."

தன் நிலை உணர்ந்தவளின் குரல் தழுதழுத்தது.

"என் டிராவல் ஏஜென்ட்டிடம் சொன்னா அடுத்த விமானத்தில் உனக்கு 'சீட்' இருக்கும்மா, மதி. அப்புறமாய் வின்ஸியிடம் சொல்லி பணத்தை வசூல் செய்துக்கறேன்."

ஆகக் கிளம்பி விடலாம் போல என்ற தெம்பில் சற்றுப் புத்தி தெளிந்தது.



"நன்றிம்மா... ஆனா வின்ஸி, மகேந்திரனிடம் எல்லாம் சொல்லாமக் கிளம்பறது தப்பு... முறையில்லை..."

"ஆபத்து அவசரத்துக்கு எதுவும் பார்க்கத் தேவையில்லை. நான் சொல்லிக்கிறேன்!" என்ற பெரியம்மா போனில் மும்முரமானாள்.

அறையில் மாலா இவளது பெட்டியை அடுக்குவதில் மும்முரமாயிருந்தாள். வியக்க வைக்கும் விரைவில் முதியவள் ஏற்பாடுகளைச் செய்துவிட இரண்டு மணி நேரத்தில் விமான நிலையத்தில் இருந்தாள் மதி.

உடன் வந்த பிள்ளைகளுக்குக் கையசைத்தவள், 'செக்-இன்' செய்துகொண்டபின் சற்றுத் தனிமை கிடைத்தது.

யோசிக்க, அத்தனையும் கனவு போலிருந்தது.

பாதியில் இத்தனை சஞ்சலத்துடன் சுவிஸை விட்டுக் கிளம்ப நேரும் என்று நினைத்திருக்கவில்லை.

மகேந்திரனை எதிர்பாராமல் சந்தித்தது போல இது எதிர்பாராத முடிவு.

இனி அவனைப் பார்க்க முடியாது.

மகேந்திரன் சொன்னது போல, இரு ஆண்களிடையே நிகழ்ந்த வேடிக்கைப் பேச்சுத்தானோ அன்று கேட்டது?

அதைக் கொண்டே அவளை வறுத்து எடுத்தாகி விட்டது.

அவனை முத்தமிட்ட லாரா பற்றி, லாவண்யாவிடம் கிள விசாரித்ததில்,

"லாரா சித்தப்பாவோட படிச்சவங்க. அவங்களும் அருமைய வரைவாங்க. தன் ஓவியங்களைக் கண்காட்சியாய் நடத்திச் சேர் தொகையை 'சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கத்து'க்குத் தந்தாங்க" என் வந்த தகவல் இதமானதாகவே இருந்தது.

ஆக அது சிநேக முத்தம். இந்நாட்டுக் கலாச்சாரத்திற்கு உட்ப சலுகை.

ஆக, மகேந்திரன் தான் அஞ்சியது போலப் பெண் பித்தனல்ல - பணக்கார எத்தனுமல்ல!

ஆனால் எது எப்படியிருந்தால் என்ன... அவன் தனக்கானவனும் அல்ல.

அவன் வாழ்வில் இனி இந்த ஏழ்மைக்கான சிந்தனைகூட இராது. ஆனால் தனக்குள்... அத்தை சியாமளி கலைக்காகச் சந்தோஷமாய்த் தனித்திருப்பது போல... மதிவதனா ரகசியமாய்த் தன்னுள் மகேந்திரனை வைத்துக்கொண்டு கன்னியாய் இருப்பாள்.

விமானப் பயணத்தின் போதும் இதே சிந்தனைகள்...

'இன்னும் பத்து நிமிடங்களில் நம் விமானம் மும்பையின் 'சான்டா க்ரூஸி'ல் இறங்கும். உங்கள் கைக்கெடிகார முள்ளினை மூன்றரை மணி நேரம் முன்னோக்கி நகர்த்துங்கள். இது இந்திய நேரம்...'

இனிமையாய்ப் பெண் குரல் அறிவிக்க, இயந்திரமாய் நேரத்தை மாற்றினாள் மதி.

## 16

பழனிபாரதியின் கவிதை பாடலாய் ஒலித்தது.

'இளமையின் விழிகளில்

வளர்பிறைக் கனவுகள்

பவுர்ணமி ஆகிறதே...'

அன்று இளமைத் துள்ளலில் விழிகள் கனவுகளை வளர்த்தன. இன்று அழுது வரண்ட விழிகளில் வெற்று வெறுமை... கருத்த அமாவாசை!

இவள் வர, தாத்தா காத்திருந்தது மார்ச்சுவரியின் ஐஸ் பெட்டிக்குள்!

ஆக இறந்த செய்தி கேட்டுத்தான் தன்னை உடனடியாய் விமானம் ஏற்றிவிட்டிருக்கின்றனர். மரணம் பற்றி அறிந்தால் தனியே பயணிப்பது அதிகத் துன்பம் என்ற கரிசனையில் உண்மையைச் சொல்லவில்லை.



அதிர்ச்சிதான்... ஆனால் மதி அலறித் துடிக்கவில்லை.

உறைந்த உணர்வு.

தன் உணர்வுகளையும் ஐஸ் பெட்டிக்குள் கிடத்தினாற் போன்ற மரமரப்பு.

இரு பெண்களுக்குமே பொன்னுசாமியின் இழப்பு ஆற்ற முடியாத வேதனை. விழுங்கியபடி வளைய வந்தனர். காரியங்கள் குறைவின்றி நடந்தன.

ஆனால் வாழ்க்கை வேறாகியிருந்தது.

இயல்பான இன்பமும், கேலியும், சத்தமான சிரிப்பும் தொலைந்த வாழ்க்கை.

சமீபமாய்ப் படர்ந்த பிரேமையின் வேர்களே ஆழ ஊடுருவி யிருக்க, பிறந்தது முதலாய்ப் பழகிப் பிணைந்த பாச ஆணி வேரை அறுத்து விலக்கியது மகாவேதனை.

இனி பிரேமையின் வேர் முளைகளையும் அறுக்க வேணும். மகேந்திரன் பற்றிய எண்ணங்களைத் தவிர்த்தாள்.

அது எளிதாயில்லை.

தாத்தாவை இழந்த மனம் அவனிடம் ஆறுதலுக்காய்த் தாவியது. அவன் அணைப்பும் சாத்தியமில்லை என்பது புரிந்து தேம்பியது.

தன் தந்தை இறந்த செய்தி கேட்டபோது கூட மதிவதனா மலைக்கவில்லை. சொல்லப் போனால் சற்று நிம்மதி கூட...

தோழிகளிடம், "அப்பா வேறொரு கல்யாணம் செய்துட்டு மலேசியா போயிட்டார். அதான் நான் தாத்தா, அத்தையோட இங்க இருக்கேன்!" என்ற விளக்கம் தர இனித் தேவையில்லை என்ற நிம்மதி.

ஆனால் தாத்தாவின் மரணம் பெரும் சூன்யத்தை உருவாக்கி விட்டது. அயல்நாட்டுக் கதைகள், சேதிகளை அவரிடம் சொல்ல என்று எத்தனை ஆர்வமாய்ச் சேகரித்திருந்தாள். அனுபவித்துக் கேட்டிருந் திருப்பார்.

வறண்ட விழிகள் மேலும் சொரிந்தன.

பத்து நாட்களில் பாதியாகி இருந்தாள்.

"போனவரையே நினைச்சா ஆகுமா... எல்லாம் விதிப்படின்னு தேத்திக்க வேண்டியதுதான்..."

வந்தவர்கள் சொன்ன ஆறுதல் மதிக்கு இரட்டை அர்த்தம் தந்தது.

ஏன் இரண்டு இழப்பும் தனக்கு ஒரே சமயத்தில் நேர்ந்தது?

"மதி... மதிம்மா... இங்க வா..."

"எனக்கு எதும் வேணாம் அத்தை... பசிக்கலை..."

"உன்னைப் பார்க்க யார் வந்திருக்காங்க, பாரு..."

எழுந்து சேலையைச் சீர்ப்படுத்தியபோது உடல் தள்ளாடியது. வீங்கிய விழிகளும், வற்றிய கன்னங்களுமாய் இருந்த தன் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல், மேலாகக் கூந்தலைக் கோதியவள், கதவைத் திறந்தாள்.

"எல்லாம் விதி - மனசைத் தேத்திக்கோம்மா..." போன்ற ஆச்சாரமான ஆறுதல்களை இப்போது வந்திருப்பவரும் சொல்ல, பல்லைக் கடித்தபடி பொறுத்துக்கொள்ள வேணும்.

உயிரற்று நிமிர்ந்த அவள் விழிகள் குத்திட்டன...! ஆச்சரியத்தால் உயிர் பெற்றன!

துக்கம் கெட்டித்த இதயத்தில் ஒரு ஊற்றுக் கண் திறந்தது.

வார்த்தைகள் வரவில்லை.

அவனும் பேசவில்லை - வெறுமே கரம் நீட்டினான்.

ஓடிப்போய் அந்த அணைப்பில் அடங்கினாள்.

குழந்தையாய் விசும்பித் தேம்பியவளின் முதுகை ஆதூரத்துடன் நீவினான்.

"ரொம்ப வருத்தமாயிருந்தது, மதி. உன் தாத்தாவை நான் சந்திக்க முடியாமலேயே போயிடுச்சு... ம்ம்? உங்கூடவே வந்திருக்க வேண்டியவன்... முடியலை. அந்த விபத்திலே அடிபட்ட ஒரு இந்திய



குழந்தைக்கு என்னோட இரத்தக் குரூப். முதல்ல கொஞ்சம் இரத்தம் தந்தேன். உடம்பு தேறாம வேற சிரமங்களும் வர, அதன் பெற்றோரோட நானும் இருக்க வேண்டியதாய்ப் போச்சு. மேலும் ஒரு பைண்ட் இரத்தம் தந்தபிறகு சரியாயிடுச்சு... சுற்றுலா வந்த இடத்தில் திகைச்சுப் போயிட்டாங்க... அதான் உடனே கிளம்ப முடியலை... மன்னிச்சிரும்மா..."

மன ஊற்றிலிருந்து பால் பிரவகித்து வழிந்தது.

ஆக மகேந்திரனுக்குத் தன் மீது துவேஷமில்லை. ஒரு குழந்தையின் உயிர் காக்கும் நோக்கம் தடுத்திராவிட்டால் தன்னுடன் இந்தியா வந்திருப்பான். துக்கத்தில் துணையாய் நின்றிருப்பான்.

பொங்கிய பாலில் பூக்களும் பூத்தன.

"இப்படி சோரலாமா மதி? நல்லவங்க மரணத்துக்குப் பிறகு நல்ல இடத்துக்குத்தான் போவாங்க. ஆக நம்ப துக்கம் போனவங்களுக்காய் இல்லை... நமக்காய்! நம்மைத் தனியா விட்டுட்டுப் போயிட்டாங்களேன்கிற ஆற்றாமை இல்லையா?" மிருதுவாய் அவள் தலை கோதியபடி பேசினான்.

"ம்ம்... அப்படித்தான்னு தோணுது."

"உனக்கு நானிருக்கேன், மதி. உங்க அத்தை நம்ப கூடவே இருக்கணும். அண்ணியோட அம்மா குடும்பத்துக்குப் பெரியவங்களாய் இருக்கறது போல மதிப்பாய் உங்க அத்தையும் நம்ப குடும்பத்திலே இருக்கலாம். பெரியத்தைக்கும் இப்பவே வந்து உன்னோடு அவங்களையும் பார்க்க ஆசை..."

"பெரியம்மாவும், மாலாக்காவும் இரண்டு தடவை போன்ல பேசினாங்க... சியாமளித்தை உடைய கண்ணாடி ஓவியத்தை அப்பகூட சிலாகிச்சு..."

"ஷ்... வர்றதாய் இருந்தது பாராட்ட இல்லை. பெண் கேட்க!"

இப்போதுதான் அவளது முழுப் பிரக்ஞை மீண்டது. பத்து நிமிடங்களாய்த் தான் ஒரு ஆணின் அணைப்புக்குள் அண்டியிருந்தது புரிந்தது. பேச்சு எது நோக்கிப் போகிறது என்பதும் உறைத்தது.

அவசரமாய் விலகினாள்.

''நீயும் என்னைக் காதலிக்கிறியான்னு நான் கேட்கப் போறதில்லை மதி. உன் அணைப்பு, இயல்பான இணக்கம் எனக்கு அதைப் புரியப் பண்ணியிருக்க...''

மெள்ள நிமிர்ந்தாள். ஒரு வாரமாய்ச் சூரியனைக் காணாது உப்பு நீரில் ஊறி வெளிரிய முகம் 'குப்'பெனச் சிவந்தது.

''இனியும் நான் பொய் சொல்லக் கூடாது. மகேந்தர்... நான் உங்களை மூணு வருடமாய்க் காதலிக்கிறேன்.''

அவன் விழிகள் கூர்ந்து பளபளத்தன.

''அப்ப நான் சந்தேகப்பட்டது சரிதான். நாம முன்னமே சந்திச்சிருக்கோம்... ம்...?''

குழந்தையாய்த் தலையாட்டினாள்.

''அதான் லலிதா வீட்டில் நீ என்னை அப்படிப் பாத்தே இல்லையா? காண ஏங்கிய ஒரு புதையலை முழுசாக் கண்ட மாதிரி உன்னைப் பார்த்த என்னுள்ளேயும் ஒரு கிள்ளல்... எங்க பார்த்தோம் இந்தச் சின்னப் பொண்ணைன்னு...''

சிணுங்கினாள். ''ஆனா நினைப்பில்லைல்ல? எனக்கு எங்கே, எப்படி, எப்போங்கறது எல்லாம் துல்லியமாய்ப் பதிஞ்சுபோச்சு.''

''அதான் பெண்கள்!'' மிருதுவாய்ப் புன்னகைத்தான். ''சரி, சொல்லு. எங்கே?''

''சென்னையிலேதான். ஓவியங்களுக்குச் சட்டம் போட்டுத் தர்ற நிம்பா சேட் கடையில்... பாத்ததிலேருந்து அடிக்கடி உங்க நினைப்பு... ஏன், எதனாலங்கற காரணங்களை மீறின பாதிப்பு...''

''கடவுள் போடற முடிச்சுங்கறது இதுதாம் போல. உன்னை லலிதா வீட்டில் பார்த்த எனக்கும் அதே போன்ற ஈர்ப்பு. உன்னைப் பழகிப் புரிஞ்சிக்க ஆசைப்பட்டேன்... அதுக்குள்ளே நீ முறுக்கிகிட்டு ஓடிட்டே...'' போலியாய் வருந்தினான்.

''பின்னே அப்படிக் கன்னா பின்னான்னு பேசினா?''



''உங்க தாத்தா இருந்திருந்தார்னா உனக்குப் புரிய வைப்பார். இரு ஆண்களிடையே, உலகம் சுற்றியவர்களிடையே அது சகஜமான கேலி... இனி எந்தப் பேச்சும் கிடையாது... சரியா? ஏன்னா... அந்தப் பாதிப்பில்தான் கடைசி நாள் ராத்திரி என்னைத் துஷ்டனாய் நினைச்சுத் துரத்தினே...?''

''மன்னிச்சிருங்க, மகே... அது முழுக்க சுய நினைப்பில் செய்யலை நான். விபத்தின் அதிர்ச்சி. அந்த மூலிகைப் புகை எல்லாமாய் என்னைக் குழப்பிடுச்சு. அந்தப் பதட்டத்தில் உளறிட்டேன்...''

''விபத்தின் அதிர்ச்சி, வலியை எல்லாம் பார்த்த நானும் அரண்டுட்டேன் மதி. அதான் உன் அண்மையைத் தேடி வந்தேன்... அதிலேயும் ஒண்ணு புரிஞ்சிகிட்டேன்...''

''என்னவாம்...?''

''நேசிக்கிற காதலியோட உளறல்கூட இனிமைதான்னு!''

''மெய்யாலுமா?'' என்பதாய்த் தன் விழிகளால் கொக்கியிட்டாள்.

''பின்னே... நேசமில்லாமத்தான் அத்தனை பெரியவங்களையும் வீட்டை விட்டுத் துரத்தி, உன்னை வீட்டிலே தங்க வைச்சேனா?''

''அப்படீன்னா உங்க அண்ணிக்கு ஆபரேஷன்னு பொய்யா?''

திகைப்பாய்க் கேட்டாள்.

''முழுசாப் பொய்யில்லை. அது ரொம்ப எளிய சிகிச்சை. அதுக்குப் பெரியத்தை பாரீஸ் ஓடணும்ங்கற அவசியமில்லை.''

''ஆனா நீங்க ஓட்டிட்டீங்க?''

''உன்னை ஒட்டிக்கலாங்கற ஆசைதான்!''

ஏற்கெனவே நெருங்கியிருந்தவன் மேலும் நெருங்கினான்.

''கல்யாண ஆசையை என்னுள் கிளறினவள் நீதான், மதி. கிளறி மூடிட்டு ஓடிட்டா என்ன செய்வேன்... அதான் குடும்பத்தை வரவழைச்சுட்டேன். முதல்ல உங்கிட்ட நெருங்கறதுக்காய் பெரியத்தை குழந்தைகளை 'வென்கன்' வரவழைச்சேன்.''

"ஆக உங்க வீட்டாரும் உங்களுக்கு உடந்தை. எல்லாருக்கும் உங்க ஆசை தெரிஞ்சிருக்கு... என்னைத் தவிர..."

"காதல் என்னைக் கோழையாக்கிடுச்சு, மதி. நீ மறுத்திடுவியோங்கிற சஞ்சலம். என்னைப் பொம்பளைப் பொறுக்கின்னு நினைச்ச உன் நினைப்பு மாறுமாங்கற தவிப்பு..."

"எனக்கு இத்தனை பெரிய இடமெல்லாம் நமக்குப் பொருத்தமில்லை... தகுதிக்கு மீறின கனவுங்கிற பதைப்பு!"

சற்றே அவனைத் தள்ளி, நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். நெஞ்சில் பதிந்த இம்முகம் இனித் தனக்கே சொந்தம் என்ற இறுமாப்புடன் முழுக்கப் பார்த்தாள்.

"ம்க்கும்..." அத்தையின் கனைப்பு கலைத்தது.

"பேச்சு ஓயற வழியக்காணும்... அதான் கூப்பிட்டேன். அவரை உட்காரச் சொல்லு மதி... பூரி ஆச்சு... எடுத்துட்டு வரேன்..."

"அத்தை! இவர்..."

"மகேந்திரன் எல்லாம் சொன்னார். ஆக இவரையும் நினைச்சுதான் இப்படி உருகினியா? இனியாவது ஒழுங்காச் சாப்பிடு... கல்யாணத்துக்குள்ளே உடம்பு தேற வேணாம்...?"

செருப்புத் தேயாமலேயே நல்ல மாப்பிள்ளை கிடைத்த பூரிப்புடன் அத்தை பூரி கொண்டுவர உள்ளே போக, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர் - காதலுடன் சிரிப்பும் பொங்கியது.

'பச்'சென்று அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

"என்ன இது...?"

"முற்றுப்புள்ளி! உன் தேடலுக்கும் என் தவிப்புக்கும்..."

கண் சிமிட்டினான், காதலுடன்.